உ

சிவமயம்.

5 MAR 1989
-613 005.

இரண்டாவது

ஸ்ரீ

# சங்கராசாரியரது அவதாரமகிமை.

# II
# THE GLORY OF SANKARACHARYA'S INCARNATION.

60879

இஃது

“ஓர் இந்து” என்பவரால்

எழுதப்பட்டு,

சிதம்பரம்

ப்ரம்மவித்யாவில் பிரசுரமானபடி,

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894

இதன் விலை அணா 4

# இதிலுள்ள விஷயங்கள்.


| இலக்கம். | | பக்கம். |
|---|---|---|
| க | சங்கராசாரியர் சரித்திரங்கள் | க |
| உ | சங்கராசாரியர் சிவாவதாரம் | க |
| ங | மாயாவாதி யல்லவென்பது | ங |
| ச | சிவன் சிவனடியாராய் வருதலைப்பற்றியது | ச |
| ரு | பின்னவாதம் | ச |
| சா | பரிணாமவாதம் | ரு |
| எ | மற்றொரு பரிணாமவாதம் | சா |
| அ | அம்சாமிகவாதம் | அ |
| கூ | பிம்பப்பிரதிபிம்பவாதம் | அ |
| க0 | காரணகாரியவாதம் | கூ |
| கக | மற்றொரு பின்னவாதம் | கஉ |
| கஉ | விவாததவாதம் | கஉ |
| கங | அகண்டகண்டவாதம் | கஉ |
| கச | அரூபரூபவாதம் | கங |
| கரு | ஞானாஞானவாதம் | கச |
| கசா | திரிமூர்த்தியுத்தீரண சிவன் சிவனடியாராய வருதல் | கரு |
| கஎ | உருத்திரரே அவதாரஞ் செய்வாரென்பது | கஎ |
| கஅ | புல்பூடாதிகள் பிரமஸ்வரூபமென்பது | உஉ |
| ககூ | சிவன் மாயாசம்பந்த முடையவ ரன்றென்பது | உஅ |
| உ0 | சிவனும் விஷ்ணுவும் பேதமில்லாதவரென்பதுபற்றி | ஙஉ |
| உக | புல் பூடாதிகள் பிரம ஸ்வரூப மென்ப துண்மையென்பது பற்றி | ஙரு |
| உஉ | உவமான ஆபாசம் | சங |
| உங | ஆன்மாவே பிரமம் | சச |



பல்கலைக் கழக நூலகம்
25 MAR 1989

சிவமயம்.

# சங்கராசாரியரது அவதார மகிமை.

நாகைநீலலோசனியினது நந்தன௵ ஆடி௴ 26௳ பத்திரிகையின் நான்காவது பக்கத்தில் "சங்கராசாரியார் பிறப்பின் குழப்பம்" என்றொரு விஷயம் ம-ா-ா-ஸ்ரீ சூளை சோமசுந்தரநாயகரெனக் கைச்சாத்திட்டா ரொருவ ரெழுதி யிருக்கின்றார். அதில் முற்றும் தூஷணையும், சாஸ்திர ஆராய்ச்சிக் குறைவும், ஆத்திரமும், அபவாதமும், பெரியாரை அவமதித்தலுமே நிறைந்திருக்கின்றன. அணுவேனும் நியாயமென்பதில்லை. அது அடியிலெழுதுஞ் சங்கதிகளால் விளங்கும்.

## சங்கராசாரியார் சரித்திரங்கள்.

**பிருகத்சங்கரவிஜயம்:**—சங்கராசாரியார் சிஷ்யர் பத்மபாதர் எழுதியது.

**கோரளீயம்:**—கேரளத்தில் ஆசாரியர் அவதார காலத்தில் இருந்த சேர வமிசத்தரசனது ஆஸ்தானபண்டித ரொருவரால் வரையப்பட்டது.

**மற்றொருகேரளீயம்:**—அத்தேசத்தில் சங்கராசாரிய சிஷ்ய மடங்களென வழங்கும் திருசிவபுரமடங்களில் பட்டம்பெற்ற வொருவரா லியற்றப்பட்டது.

**வியாஸாசலீயம்:**—வேதங்களுக்கெல்லாம் உரைசெய்த மாதவாசாரியா ரென்னும் வித்தியாரணிய சுவாமிகளால் செய்யப்பட்டது.

**சங்கர விஜயவிலாசம்:**—அவ்வாசாரியர் சிஷ்ய பரம்பரையில் உதித்த சித்விலாச முனிவர் இயற்றியது.

**சங்கர விஜயம்:**—அனந்தாநந்தகிரி என்பவரால் அருளப்பட்டது.

**சங்கராப்யுதயம்:**—இராச சூடாமணி தீக்ஷிதரால் இயற்றப்பட்டது.

**பதஞ்சலி விஜயம்:**—ஸ்ரீராமபத்திர தீக்ஷிதரால் எழுதப்பட்டது.

**இராஜதரங்கணி:**—கல்ஹண மித்திர பண்டிதர் எழுதியது. இதில் விக்கிரமாதித்தனுக்கு முன் சங்கரர் அவதாரங் குறிக்கப்பட்டிருக்கிறது.

இவையன்றித் துவாரகா சிலாசாசனங்களினும் சிறிது சங்கரர் திக்விஜய சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அனேக காவியங்களிலும் சங்கரர் சரித்திரம் உண்டு.

## சங்கராசாரியர் சிவாவதாரம்.

ஷை பல சங்கரர் சரித்திரங்களில் சங்கராசாரியாரைச் சிவாவதாரமென்று கூறி யிருக்கின்றது. எதிர்கால சம்பவங்களைப் பற்றிச் சொல்லும் சிவ ரகசியத்தில் சங்கராசாரியர் சிவாவதார மென்று சொல்லப்பட் டிருக்கிறதாகப் பிரமவித்தியா பத்திராதிபர் சொல்லி யிருக்கிறார். ப்ரம்ம வித்தியா 16-வது அனுபந்தத்திலும் 17-வது அனுபந்தத்திலும் சிவரகசியம் 15-ம் அத்தியாயத்திலும் 16-ம்

அத்தியாயத்திலுமுள்ள சுலோகங்களைப் பஞ்சநத க்ஷேத்திரவாஸி அவர்களும், ப்ரம்மஸ்ரீ பநூர்சேஷகிரி ஐயரவர்களும் எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். அவற்றை யாவரும் பார்த்திருக்கலாம். இவர்களெல்லா மெழுதுவதற்கு முன்பு ஷை சோமசுந்தர நாயகர், ஷை அவதாரத்தை யொத்துக் கொண்டு, ஆனால் அந்த அவதாரத்தைச் சிவனடியாராகக் கூறி, "அந்த அவதாரம் முன்பே முடிந்திருக்கலாமென்றும், இனியும் வரலாமென்றுஞ் சொல்லி, "அவரது. வரலாறு முதலியவற்றை யிவருக்கெடுத் தோதவேண்டிய ஆவசியக மெமக்கில்லை" என்கிறார். பிறர் சொல்லும் விஷயங்களை மாத்திர மாக்ஷேபிக்கலாம்; தாம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிற விஷயங்களைமாத்திரஞ் சொல்லத் தமக் கவசிய மில்லையோ! பிரதிவாதியின் வக்கீல், வாதி கட்சியில் மாத்திரந் தோஷம் கற்பிக்கலாம்; வாதிக்கு மாறாகப் பேசும் பிரதிவாதிமாத்திரம, வாதி வக்கீலுக்குப் பதில் சொல்ல அவசியமில்லையாகும்! இப்படிச் சொல்லிவிட்டால் நியாயாதிபதி என்ன செய்ய வேண்டுவது? வாதி பக்ஷத்தில்தான் நியாய மிருக்கிறது, பிரதிவாதிக்கு நியாய மில்லாமையால்தான் அவசிய மில்லையென்கிறானென்று வாதி பக்ஷமே தீர்ப்புக் கொடுப்பா னன்றோ? அப்படியே நாயகர் தம் கக்ஷிக்குப் பலங்காட்டாதவரையில் தமதுகக்ஷிதோல்வித் தானத்தையே யெதிர் பார்க்கு மென்பதற் கையமின் றென்க. இவர் பக்ஷத்தைச் சொல்ல இவர்க்கு அவசிய மில்லாதபோது மற்றவர் பக்ஷத்தை இவர்க்குச் சொல்ல மற்றவர்க்கு மாத்திர மவசியம் என்னே! அங்ஙனமாக மற்றவர் சொல்வதற்குக் குற்றங் கூறவேண்டுவதேன்? பிறர் பக்ஷத்தைக் குற்றங்கூறின் அதற்குமாறாகக்கூறும் தம்பக்ஷத்துக்கு நியாயங் கூறவேண்டும்; தம்பக்ஷத்திற்கு நியாயங் கூற இயலாதபோது பிறர் பக்ஷத்துக்குத் தோஷங் கற்பிக்கப்படாது. கொள் ளெனின் வாயைத் திறப்பதுங் கடிவாள மெனின் வாயை மூடிக்கொள்வதும் நியாயமன்றே. இவர் பக்ஷத்தைச் சொல்லவேண்டிய ஆவசியக மிவர்க் கில்லை யென்றதனால் அதைச்சொன்னால் அகப்பட்டுக் கொள்வார்போல் தோன்றுகின்றது. "சந்தர்ப்பம் நேரிட்டால் சொல்லுகிறேன்" என்று சொன்னாலும் ஒருவிதத்துக் கொவ்வும். எடுத் தோத வேண்டிய ஆவசியகமே யில்லை யென்றதனால், அது விஷயத்தில் நமக்குச் சந்தேகமாகவே யிருக்கின்றது. பூர்வ பக்ஷியாருக்கு நியாய மில்லாமையினாலே ஆவசியக மில்லாமற் போகலாம்; அவருக்கு ஆவசியக மிருக்கவேண்டு மென்று எவரும் விரும்புவாருமில்லை. நமக்கப்படிப்பட்ட காரண மில்லாமையாலும் அதை யெடுத்துச் சொல்ல வேண்டிய ஆவசியகம் நமக் கிருப்பதாலும் நாம் சொல்லாம லிருக்கச் சரிப்படவில்லை. ஆதலால் அதற்கவசியமானவற்றை யெடுத்துக்காட்டுவாம்.

இவர் கூறுவதுபோல் சிவனடியாராகப் பிறக்கப் போவதாய்க் கூறுவதுண்மையே. தொடக்கத்தில் "பவிஷ்யச்சிவபக்தா நாமவதா

ராக்வவதாம்யஹம்." என்று "வருங் காலத்தவதரிக்கும் சிவனடியார் சரித்திரங்களைச் சொல்வாம்" என ஸ்ரீகண்டநாதன் திருவாய்மலர் தமையானென்க. "அந்த அவதாரம் முன்பே முடிந் திருக்கலாம், இனியும் வரலாம்" என்பது மட்டில் பொருந்தாது. அதே அத்தி யாயத்தில் "கல்யாதிமே மஹாதேவீஸஹஸ்ரத்விதயாத்பரம்." என் றதில் "கலி யுகாதி யிரண்டாயிரம் வருஷங்கள் சென்ற பிறகு" எனக் காலங் குறிக்கப்பட்டமையானும் "கேரளே சசல க்ராமே." என்றதில் "மலை நாட்டில் சசலத்தில்" என இடங் குறிக்கப் பட்ட மையானும் (மலை நாட்டில் திரு வஞ்சிக்களத்துக்கு ஈசானியத்தில் காலடியென்றும் ஆலவாய் என்றும் வழங்கப்படும் ஊர், சசலம் எனப் பழைய வழக்கத்தோடிப்போது முள்ளது) "ஸ்ரீமதாம்வியாஸ ஸூத்ராணாம்த்வைத வாக்யாத்மநாம்சிவே அத்வைதமேவ ஸூத்ரா ர்த்தம் கரஷ்யதி நஸம்சயஃ" என்பதில் "தனித்தனி வாக்கியங்களாக வியாசமுனிவ ரியற்றிய சூத்திரங்களுக்கு அத்துவிதவுரை யிடுவார்" எனக் குறித்தமையானும் "பிந்நேவைதிக ஸம்ஸித்தே ஹ்யத்வை தேத்வைத மார்க்கதஃ தத்பேதகிரி வஜ்ரஸ்த்வம்ஃ ஜாதோஸிமதம்ஃசத என்பதில் "வேதசித்தமான அத்துவிதம் துவித வாக்கியங்களால் வேற்றுமைப் பட்டமையால் அம் மலையை யுடைக்க வச்சிரமாய் எனது அமிசத்துடன் பிறந்தவன் நீ" என்ற சிவ வசனம் வெளிப் படுவதானும் இன்னும் பலவசன உண்மைகளானுமாமென்க. "அதில் குறித்தகாலம் முடியவில்லை, இனித்தான் அவ்வவதாரம்வரு" மென் னின், அங்ஙன மாயின் பரமசிவனது திருவாக்கு அவல மாகும். இனிச் சிவ னடியார் என்பதால் சிவாம்சமாவ தெப்படி யென்னின் "ஸஜாதோஸிமதம்சதஃ" என்பதில் "என்னமிசத்தால் பிறந்தாய்" என்று கண்ணுதலார் திருவாக்கு வெளிவந்தமையானும் "விப்ரபத் நியாம்மதம்சதஃ" "பிராமணர் மனைவியிடம் என தமிசத்துடன்" என்றமையானும் "சதுர்பிஸ் ஸஹிதச் சிஷ்யைச் சங்கரோவதாரிஷ் யதி" "நான்கு சீடர்களுடன் சங்கரர் அவதரிப்பார்" என்பதானும் சிவாம்சம் உண்மை யாத லறிக. சிவாம்சமாய்ப் பிறந்தவர் சிவனடி யார் திருவேடங் கோடல் உரிமையேயாமென்க. அங்ஙனமே அத்து வித ஸ்தாபகரும், சிவ னடியார் வேடத்தவரு மான சங்கராசாரியா ரைச் சிவனடியாரென்று கூறுதற்கு ஏது மாக்ஷேப மில்லை யென் பதாம்.

## மாயாவாதியல்லவென்பது

பூர்வபக்ஷியார்: சங்கராச்சாரியாரையும் அத்துவிதிகளையும் மாயா வாதி மாயாவாதி யென்று பேசுகின்றார். அப்படிப் பேசும் நாவை யுள்ளடக்கும்படி, நாம் எவ்வளவோ நியாயங்களைக்காட்டி, இவரும் இவரினத்தாருமே மாயாவாதிகளென்று வச்சிரத்தம்பமென நாட்டி இனித் தளர் வுறு வண்ணம் தூணுகநு நியாயஞ் செய்து விட்டமை

யால் இனி வாய்திறவாமல் வாளாவிருக்க வேண்டுவ தவர்கடமையே யாமென்க. இனிப் பேச நாவுளதேல் நாம் கூறிய வொவ்வொன்றை யும் பூர்வபக்ஷஞ் செய்து தம் பக்கத்தைத் தாபித்துக் கொள்வாராக. இதற்கிடையில் வேறே விஷயம் மெழுதும்போது அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் மாயாவாதி மாயாவாதி யென நியாமின்றிப் பேசுதல் வெற்றியை விரும்புவோர்க் கழகன்று.

## சிவன் சிவனடியாராய் வருதலைப் பற்றியது.

பரமசிவன் திரிமூர்த்திகளுக்கு அதீதமென்றும் அவர் மாதா வயிற்றில் யோனிவாய்ப்பட்டுப் பிறப்பது கூடாதென்றுங் கூறி, தாம் கூறும் சிவனடியாராகமாத்திரம் அவதரிக்கலாமென்றுவரைகின்றார். சிவனடியாராக வருவதானால் அதுமாத்திர மெப்படிக் கூடுமோ? சிவன் எங்கும் பரிபூரணர், நிர்மலர், நிஷ்களர், நிச்சலர், நிர்க்குணர், வாக்கு மனாதீதர், ஞாதுரு ஞான ஞேயங்களற்றவர், சங்கற்ப விகற்ப மற்றவர். இப்படிப்பட்டவர் மாமிச நரம்பு என்பு உதிரம் சீமுதலிய அநுசிதசரீரத்தோடும் ஞானேந்திரிய கருமேந்திரிய அந்தக்கரணங்களோடும் கூடி மானிட வுருவந் தாங்கி வருவது மாத்திரங் கூடுமா ? அப்படி வந்தாலும் வரட்டும், அப்படிவந்தவடிவம் காரணமா? காரியமா? எது முன்னில்லாதிருந்து தோன்றுகின்றதோ, அது காரணமன்று; காரியமேயாம். சிவனடியார் உருவம் காரிமானபோது அவ்வடிவந் தோன்றுதற்கு முதற் காரணம் யாது? பரிபூரண துரிய சிவமென்று சொல்லாவிடில் வேறேமார்க்க மில்லை. காரணமான அந்தச் சிவத்திலிருந்து காரியமான சிவனடியார்வடிவம் வெளிப்பட்டு வந்ததாகவேண்டும். காரணத்தினின்றும் காரியம் வருவது எதுபோல்? மாதாவினின்றும்குழவிவருவதுபோலா?பாலினின்றுந்தயிர்வருவது போலா? விதையிலிருந்து விருட்சம் வருவதுபோலா? நீரினின்றும் அலையாதிவருவது போலா? பிம்பத்தினின்றும் பிரதிபிம்பம் தோன்றுவது போலா? மண்ணினின்றும் கடமுண்டாவதுபோலா? கயிற்றினின்றும் அரவுண்டாதல் போலா? இவைக ளல்லாவிடில் வேறெது போல்? இந்தவுவமானங்களை யெல்லாம் முறையே விசாரிப்பாம்.

## பின்னவாதம்.

மாதாவினின்றும் குழவிவருவதுபோலென்னின் அது கூடாது. மாதா கண்டப் பொருள். ஆதலால் அவ ளில்லாத வேறோரிடத்தின்கண் பிள்ளை வரலாம். இவ்வுவமானப்படி மாதா ஸ்தானத்தில் சிவனும் குழவி ஸ்தானத்தில் சிவனடியாருமாம். குழவி யென்பது தாயின தோர்பாகமான சோணிதமும், வெளியிலிருந் துட் சென்ற சுக்கிலமும், வெளியிலிருந்துட் சென்ற ஆகாரமுமாம். இதையாராய்ந்துழிக் குழவி யென்பது தாயின் பாகமும் தாய்ப் பாகம் நீங்கலாக வெளியி லிருந் துட் சென்ற சுக்கில ஆகார பாகமும் என விளங்குகின்றது. இந்த வுவமானப்படி யுவமேயத்தை நோக்குழிச் சிவனடி

யா ரென்பது சிவ னுடைய வோர் பாகமும், சுக்கில ஆகாரம் போன்ற பிறிதொரு பாகம் சிவனுட் செல்லுதலுமாம். மாதா கண்டிதப் பொரு ளாகலின், அவளுடைய வோர் பாக மான சோணிதம் குழவிவடிவாய் அவளில்லாவிடத்தில் வரக்கூடும். சிவன்பரிபூரணராகலின், சிவ னுடைய வொரு பாகம் அவ ரில்லா விடத்தி லெப்படி வரக்கூடும்? அவ ரில்லா விட மின்றே. மாதாவினது வயிறு கெட்டி யல்லாத புரையுடைய தானதாலும், மாதா கண்டப் பொருளானதாலும் மாதா வில்லாத பிறி தொரு இடத்தி லிருந்து சுக்கில ஆகாரங்கள் புரை யுள்ள மாதாவி னுதரத்திற் சென்று சோணிதத்துடன் ஒன்று கூடி, குழவியாய் வெளிப் படலாம். சிவன் கெட்டிப் பொரு ளன்றோ? புரை யுள்ள பொருளோ? அந்தப் புரையில் பிறிதொரு பொருள் சென்று சிவனுடைய பாகமுஞ் சேர்ந்து சிவ னடியாராய் வெளிப் பட்டதோ? மாதாவின் சோணிதம் போல் சிவனுடைய வோர்பாகமானல் சுக்கில ஆகாரங்கள் போல மற்றப்பொருள் வேண்டுமே. அதுவுஞ் சேர்ந்தா லன்றோ சிவ னடியாராய் வரலாம்? அந்தப் பொருள் யாது? சித்தா? சடமா? சித்தானல் ஞான மயமான சிவ னுடன் கூடிடும்; சடமானல் கூடாதே. சிவ னடியாராய் வந்த மானிட வுருவில் ஆன்மபாகம் சித்து, சரீரபாகம் சடம். ஆன்மாவும் சிவனும் சித்தாயிருப்பதால் சிவனே ஆன்மா வாயிற்றென்று வைத்துக் கொண்டாலும் (இதிலும் அனேக தோஷங்க ளிருக்கின்றன.) சடமெங்கிருந்து வந்தது? தாயில்லாத இடத்திலிருந்து ஆகாரம் வயிற்றுக்குட் புகுந்ததுபோன்று சிவ னில்லாதவிடத்திலிருந்து சடம் சிவ னுட் புகுந்த தாக வேண்டும். (சித்து வந்து புகுந்ததென்றாலு மிந்தத் தோஷம் வரும்) புகுந்த தென்று சொல்லும் பக்ஷத்தில் சிவனுக் கப்புறம் ஒரு இட மிருக்க வேண்டும். அது பெரிதோ? இது பெரிதோ? இந்தச் சிவனுக்கும் அந்தச் சடத்துக்கும் வேற்றுமை தோன்ற வேலி போன்றதொன் றிருத்தல் வேண்டும். அது யாது? தாயின தோர்பாகமான சோணிதம் குழவியாகக் கழிந்தால் அவ்வளவுபாகம் தாய்க்குக் குறைவுபடும். அவ்வாறே சிவனிடமிருந்து சிவ னடியா ருருவிற்காக வோர் பாகம் எடுக்கப்பட்டால் சிவனுக்கு அந்த ஓர் பாகம் குறைவு படுமே. இன்னும் இவ்வாறு அனேக ஆக்ஷேபங்க ளிருக்கின்றன. பூர்வபக்ஷியார் இதைப் பூர்வபக்ஷஞ் செய்வாரானல் அப்போது அவைகளை வெளியிடுவாம்.

## பரிணமவாதம்.

பாலினின்றும் தயிர் வருவதுபோல் என்பதைப் பார்ப்போம். பாலி னின்றும் தயிர் வருவதுபோல் சிவனி னின்றும் சிவ னடியார் உருவந் தோன்றுகின்ற தெனின் பால் தனது ஸ்வரூபங் கெட்டுத் தயி ராகின்றது. அன்றித் தயிரான காலத்தில் பாலில்லாமற் போகின்றது. அவ்வணமே துரிய சிவன் சிவ னடியாரானபோது சிவனே

இல்லாமற் போகின்றார். பால் தன் வடிவ மாறித் தயிரானால் பின்னும் பாலாவ தில்லை. அங்ஙனமே சிவன் சிவவடிவங் கெட்டுச் சிவனடியாரானால் பின்னும் சிவனாதல் கூடாது. இந்தப் பரிணாம வாதத்தால் பாலுக்கு விகாரமுண்டாவதுபோலச் சிவனுக்கும் விகாரமுண்டாகின்றது. பால் தன் னுருவங் கெட்டுத் தயிரானால் தயிர் தயிராகவே யிராது. அதுவும் தன்னுருக் கெட்டுத் வேறொன் றாகி, அதுவுங் கெட்டு வேறொன்றாகி, இவ் வாறு கெட்டுப் பல மாறுதல்களையடையும். அரும்புப் பூவாதலும் பூப்பிஞ்சாதலும் பிஞ்சுகாயாதலும் காய் கனியாதலும் கனியும் நாட்படத்தன் னுருக் கெட்டுப்போதலும் இன்னு மிவ்வாறு பலப்பலவாதலும் அப்பரிணாம வாதத்தின் குற்றமாம். இவ்வாறு சிவன் தனது வடிவங் கெட்டுச் சிவனடியா ராயின், பின் அவ் வடிவங் கெட்டு வேறொன்றாய், பின் அதுவுங் கெட்டு வேறொன்றாய், பின் அதுவுங் கெட்டு வேறொன்றாய் இவ்வாறு பல விகாரங்களை யடையும். சிவனடியார் வடிவ மிதற்குமுன்னரே தோன்றி இருக்குமாயின் அதன்பின் அனேக மாறுதல்களை யடைந்து இப்போதும் ஒரு விகாரத்தோடிருக்கிறதாய்ச் சொல்லவேண்டும். அப்படியாயின் இப்போது இவ்வித விகாரத்தோ டிருக்கிறதாய்ப் பூர்வ பக்ஷியாரே சொல்லக் கடமைப்பட்டவரா யிருக்கின்றனர். பால் தயிராகிறதானால், தானே தயிராவ தில்லை. அனேக வகைச் சாதனங்கள் வேண்டும். சிவனே சிவனடியாராகும்பட்சத்திலும் அவ்வாறு அனேக சாதனங்கள் வேண்டும். பால்கண்டவஸ்துவாகலின் பாலில்லாதமற்ற விடங்களில் பலவகைச் சாதனங்க ளிருக்கின்றன. சிவன் பரிபூரணராகலின் வேறு சாதனங்களிருக்க இடமிராது.

## மற்றொரு பரிணாமவாதம்.

பாலினின்றும் தயிருண்டாவதுபோலென்று சொல்வதில் இவ்வளவு அனர்த்தத்திற் கிட முண்டாகின்றமையான் இதைத் தள்ளி விதையினின்றும் விருக்ஷமுண்டாகும் உவமானத்தைப் பொருத்திப் பார்ப்போம். இதுவும் ஓர் வித பரிணாம மாய் மிக ஆக்ஷேபத்திற் கிடமாம். விதை வெகுசிறியது; அதினின்றும் பெரிய விருக்ஷமுண்டாவ தொருபோது மின்று. விதை கால் பலமென்றும், விருக்ஷம் ஒரு பாரமென்றும் வைத்துக்கொள்வோம். வைத்துக்கொண்டு பார்க்கின் காற்பல எடையிலிருந்து ஒரு பார எடை எப்படிவரும்? வாராதென்பது திண்ணம். பின்னை யெப்படி? கால்பல விதையோடு நீர், வாயு, பிருதிவியாதி அணுக்கள் முதலியன $6399\frac{3}{4}$ பலஞ் சேர்ந்து ஒரு பார விருக்ஷ மாகின்றது. ஆதலால் காற்பலத்தி லிருந்தே ஒரு பாரமான காரிய விருக்ஷ முண்டாகின்றதென வுரைத்த லமையாது. காரியமான விருக்ஷம் எவ்வளவு எடையோ, அவ்வளவு காரணமான வித்தி லில்லை யெனத் தெரிகிறது. காரணமான காற் பலத்துடன் $6399\frac{3}{4}$ பலம் நீர் முதலிய சேர்ந்து காரிய மாகின்றது. காற்பல வித்

தும் 6399¾ பலம் நீர் முதலனவுஞ் சேர்ந்து காரணமாகி, அவற்றின் கலத்தலே காரியமென்று கூறப்படுகின்றது. ஆதலால் காரணத்தின் கூட்டத்தை யன்றிக் காரிய மென்பதற்குப் பொரு ளில்லை. இதனுல் காரணப் பொருளின் மாறுதலேயே காரியப் பொருளென விவகார நிமித்தஞ் சொல்லப்படுகின்றது. காரணத்திற்கு எப்படிப் பொரு ளுளதோ, அப்படியே காரியத்திற்குப் பொரு ளில்லை. காரியம் வெறுந்தோற்றமேயாம். தோற்றமான காரியம் சத்தாகாது; அசத்து அல்லது சத்துப் போலியே யாம். ஆதலால் வித்தும் அதன் சேர்க் கையும் சேர்ந்து காரண மாகிச் சத்தாயும், விருக்ஷம் காரிய மாகி அசத்து அல்லது சத்துப்போலியு மாகின்றன.

இதன்படி யுவமேயத்தைப் பார்க்கின் வித்து ஸ்தானத்தில் துரிய சிவனும் விருக்ஷ ஸ்தானத்தில் சிவனடியாரு மாகின்றூர்கள். வித்துடனே நீர் முதலியவை சேர்ந்து எப்படி விருக்ஷமாகின்றதோ, அப்படியே துரிய சிவனுடன் ஏதோ சில பொருள்கள் சேர்ந்து சிவ னடியா ராக வேண்டும். வித்து ஏகதேசப் பொருளாமையின் வித்தி ல்லாப் பிற விடங்களிலுள்ள நீர் முதலியன வந்து சேர்ந்து விருக்ஷ மாகலாம். அவ்வாறே துரியசிவன் ஏகதேசப் பொருளன்றே; பரிபூர ணப் பொரு ளாயிற்றே; அஃதில்லா இட மின்றே. அஃதில்லா இட மிருந்தா லன்று மற்றப் பொருள் இருக்க வாவது, அது துரிய சிவ னுடனே வந்து சேரவாவது கூடும்? அங்ஙன மின்மையின் துரியசிவ னுடன் வே றுபொருள் வந்து சேர்ந்து சிவ னடியாராய் வரு மென் பது கூடாது. வித்து அற்ப விடத்தி லிருக்கும் அற்பப் பொருள்; நீர் முதலியன அதிக விடத்தி லிருக்கும் அதிகப் பொருள்கள். ஷை அற்பப்பொருளும்அதிகப் பொருளுஞ் சேர்ந்தேவிருக்ஷமாகின்றது. அவ்வாறு துரியசிவன் அற்ப இடத்திலிருக்கும் அற்பப் பொருளாக வேண்டும்; அத்துரியசிவனுடனே கூடிடத்தக்க அதிக இடத்திலிரு க்கும்அதிகபொருளுஞ்சேர்ந்துசிவனடியாராகவேண்டும்.அப்படிச் சேரும்அதிக இடத்திலுள்ளஅதிகப்பொருள் யாது? துரியசிவன் பூர ணரெனவும், பெரும் பொருளுக் கெல்லாம் பெரும் பொரு ளென வும் பிரபல ப்ரமாணங்க ளான வேத முதலிய பதினுன்கு வித்தை களுங் கோஷிக்கின்றனவே. அங்ஙன மாகத் துரிய சிவனை அற்பப் பொரு ளாகவும் ஏகதேசப் பொரு ளாகவும் இன்ன தென விளங்கா மற்றப் பொருளைப் பெரிய பொரு ளாகவும் சொல்வது கூடுமா? அவைகள் ஒருங்கு சேர்ந்த சேர்க்கையைச் சிவனடியாராகச் சொல் வதுதான் பொருத்தமாமோ? வித்தானது தனது இயல்பு கெட்டே விருக்ஷ மாகின்றது; அங்ஙனமே துரிய சிவனும் தனது இயல்பு கெட்டே சிவ னடியா ராக வேண்டும். இவ்வளவு விருத்த மிருப்ப தால் வித்தினின்றும் விருக்ஷ முண்டாவதுபோ லெனச் சொல்லு மூவமானமும் பயனில் உவமான மெனப் பூர்வ பக்ஷியார் அறியக் கடவர்.

## அம்சாம்சிகவாதம்.

அம்சம் என்றால் கூறு; அம்சிகமென்றால் கூற்றையுடையது. நீர் அம்சிகம்; நீரின்கணுண்டாகின்ற அலையாதிகள் அம்சம். நீரினிடத்து அலையாதிகளுண்டாவதுபோல் துரிய சிவனிடத்தினின்றும் சிவனடியார் உண்டாகின்றாரென்னின், இதுவும் ஆக்ஷேபத்திற்கே யிடனும். நீரின்கண் அலையாதிகளுண்டாக வேண்டுமானால் நீர் விகாரப் பட்டே யுண்டாக வேண்டும். அங்ஙனமே துரிய சிவன் சிவனடியாராய் வர வேண்டு மாயின், துரிய சிவன் விகாரத்தையடைந்தே சிவனடியாராய் வரவேண்டும். விகார மற்ற துரிய சிவனுக்கு விகாரஞ் சொல்லுவது கூடாது; அன்றிச் சிவன் நிர் விகாரியென்று பேசும் வேதாகம புராணேதிகாசங்களுக்கு விரோதமுமாகும். அது நிற்க; நீர் அலையாதிகளாக வேண்டுமாயின், தான், முன்பில்லாத விடத்திலேதான் ஆகவேண்டும். அப்படி யாகுமென்று சொல்லின் சிவன் நிறைவில்லா அபரி பூரணப் பொருளாகின்றார். நீர் அலையாதிகளாக வேண்டுமாயின், அசைதலான தொழில் நிகழ்ந்தே ஆக வேண்டும். எப்போது அசைத லுண்டாகின்றதோ, அப்போது அசைதல் தொழில் நிகழ்வதற்குத் தானில்லா இடம் வேண்டும். ஒரு பாத்திரத்தினிறைய நீர் வார்த்து மேலே மூடி வைத்து விட்டால் அந்நீர் அசைத லுறுமா? நீர் குறைந் திருந்தாற்றானே அசைத லுண்டாம். அப்படியே சிவன் நிறை வில்லாமல் குறைவாய் இருந்தாற்றானே அசைத லுண்டாம்; இதுவும் நிற்க; நீர் அலையாவதற்கு நீருக்கு வேறாயிருக்கும் காற்று ஒன்று அவசியம் வேண்டும். காற்று இல்லா விடில் அலையாதிகளுண்டாகா. அங்ஙனமே துரிய சிவன், சிவனடியா ராவதற்குக் காற்றைப் போன்ற பொருளொன்று வேண்டும். அந்தப் பொருள் யாது? நீரும் காற்றும் பேதப் பொருள்கள்; அங்ஙனமே துரிய சிவனும், சிவனைச் சிவனடியாராகச் செய்யும் காற்றைப் போன்ற பொருளும் பேதப் பொருள்களாக வேண்டும். இவ்வளவு ஆக்ஷேபங்க ளிருக்கின்றமையின் இவ்வாதமும் பயன்படாது.

## பிம்பப்பிரதிபிம்பவாதம்.

இனிப் பிம்பப்பிரதிபிம்ப வுவமானத்தையும் பொருத்திப்பார்ப்போம். பிம்பம் சத்துப் பொருள்; பிரதிபிம்பம் அசத்துப் பொருள். சூரியன் சத்துப் பொருள்; பிரதிபிம்ப சூரியன் அசத்துப் பொருள். இவ்வாறு உவமேயத்தில் சிவன் சத்துப் பொருள்; சிவனடியார் அசத்துப் பொருள். பூர்வ பக்ஷியார் சிவனடியாரை அசத்துப் பொருளென அங்கீகரியார். அங்கீகரித்தாலும் இத்துடனே போகிறதாயில்லை. துரிய சிவனுக்குத் தோஷத்தை யுண்டாக்குகின்றது. அந்தத் தோஷம் யாதெனின் பிம்பப் பிரதிபிம்ப வுவமானங்களெல்லாம் நிறைவுள்ள பொருளில் வாய்க்காது, நிறைவில்லாக் குறைவுள்ள

பொருளில் வாய்க்குமென்பதே. எப்படியெனின், நமதுமுகம் ஒன்று, கண்ணாடி யொன்று. இவ் விரண்டும கண்டப் பொருள்கள். முகம் ஒரு இடத்தி லிருக்கின்றது ; கண்ணாடி யொரு இடத்தி லிருக்கின்றது. இவ் விரண்டும் சத்துப் பொருள்கள். கண்ணாடியிற் றோற்றப்படும் பிரதிபிம்பப் பொருள் அசத்துப் பொருள். இவ்விதமே சிவன் ஸ்தானத்தில் முகத்தையும், சிவனடியார் ஸ்தானத்தில் பிரதிபிம்பத்தையும் வைக்கலாம். கண்ணாடி ஸ்தானத்தில் ஒரு பொருளையுங் காணேமே. இந்த வுவமானத்தில் முதலாவது தூரிய சிவன் கண்டப் பொருளாகின்றார் ; இரண்டாவது சிவனடியார் அசத்தாய்ப் போகின்றார் ; மூன்றாவது கண்ணாடிபோன்ற ஆதாரப் பொருள் சத்தாய் ஒன்று வேண்டும். இவ்வளவு தோஷங்கட் கிடனு யிருப்பதால் பிம்பப் பிரதிபிம்ப வாதமு மொவ்வமாட்டாது.

## காரணகாரியவாதம்.

இனி மண்ணினின்றுங் கடமுண்டாதல்போ லென்னின் கடத்துக்கு மண் முதற் காரணம், தண்ட சக்கரங்கள் துணைக் காரணம், குலாலன் நிமித்த காரணம். இவ்வாறு கடத்தைப்போல் சிவ னடியார் ; மண்ணைப்போல் சிவன்; தண்ட சக்கரங்களைப்போல் எது? குலாலனைப்போல் யார்? தண்ட சக்கரங்களைப் போலத் துணைக் காரணமும், குலாலனைப்போல் நிமித்த காரணமு மில்லையே. சிவனது சிற் சத்தியைத் துணைக் காரணமாகச் சொல்லக் கூடும். அங்ஙனமேல் சிவனுக்கும் சத்திக்கும் அபேத மாவதுபோல் தண்ட சக்கரங்கட்கும் மண்ணுக்கும் அபேத மாகவேண்டுமே. அங்ஙனமின்றிப் பேதமா யிருப்பது கண்கூடன்றோ? அன்றி மண் விகாரப் பட்டுக் கட மாகின்றது; அங்ஙனமே சிவன் விகாரப் பட்டுச் சிவனடியாராகின்றனரா? மண்ணானது வனைதற்குமுன்னிருந்தநிலைமை மாறி, வனைதலாதித் தொழிலை யடைகின்றது. அவ்வாறு தொழில் பெறுதற்குத் தானில்லா இடம் வேண்டும். அசைத லின்றித் தொழில் நிகழாது. அவ்வாறு சிவன், சிவ னடியாராகக் காரியப் படுதற்கு முன்னிருந்த நிலைமை மாறி, விகாரமான தொழில் பெறுதற்குச் சிவனில்லா விடம் வேண்டும். சிவன் அசைதலின்றித் தொழில் நிகழாது. எது அசைத லுடையதோ, அது ஏகதேசமான அல்லது நிறைத லில்லாத கண்டப் பொருளா யிருக்க வேண்டும். மண் ஏகதேசப் பொருளா யிருப்பதால் அசைதலுக் கிடமாகின்றது. சிவன் நிறைவுள்ள பொருளாயிற்றே. அது எப்படி அசைத லுற்று விகாரப்படக் கூடும்? இவ் வளவு குற்றங்க ளிருக்கின்றமையால் சிவ னடியாருக்குச் சிவபிரானை ஆரம்போபாதான காரணமாகக் கூறுதல் பொருந்தாது. பொருந்தியதாய் வைத்துப் பார்க்கினும் வேறு தோஷமு முண்டாகின்றது. அதையும் எடுத்து விஸ்தரிப்பாம்.

கடமானது செய்வதற்கு முன்னரும் அழிவு பட்டிற்குப் பின்னரும் இன்று, செய்த பின்னரும் அழிவுக்கு முன்னரு முண்டெனக் கூறப் படுகின்றது. அந்த மத்திய காலத்தும் வளைதலாதித் தொழிலா லமைந்த அமைப் பன்றிக் கடமென்னும் பதத்திற்குப் பொரு ளின்று. கட மென்பது வெறுந் தோற்றமே யாம். பொருளில்லா விடினும் தொழிலேனு முள்ளதே யெனின் அத்தொழிலுந் தோற்றமே யாம். தனித் தனி யொவ் வொரு மண்ணையும் உற்றுப் பார்க்கின் எந்த மண்ணும் வளைந்ததாய்க் காணும். இந்த வுவமான ப்படி யுவமேயத்தைப் பொருத்திப் பார்க்கின், காரியமான சிவனடியார் என்பதற்குப் பொருள் அபாவ மாகும். மண்ணி னிடத்து வளைதலாதி சொல்வது போலச் சிவ னிடத்து ஏதேனும் தொழிலமைப்புகள் சொல்வதுங் குற்றமாம். தொழி லானது விகாரம். சிவன் தொழி லற்றவர்; விகார மற்றவர். காரியம் சிவ னடியார் வடிவம்; காரணம் சிவன் வடிவம். காரிய முக்காலத்து மின்றென்பது துணிவு. காரியம் உள்ளதாக வைத்துக் கொள்ளினும் காரியமும் காரணமும் அபேத மாகலின் காரியம் புலப்படுவது போலக் காரணமும் புலப்பட வேண்டும். காரியமான கடம் புலப்படுவது போலக் காரணமான மண்ணும் புலப்படுவதைப் பார்க்கின்றோ மல்லவா? அவ்விதமே சிவ னடியார் உருவம் யாவர்க்கும் புலப்படுகின்றது. அதை யபேதமாக வுடைய சிவனுருவம் யாவர்க்கும் புலப்படுகின்றதா? சிவனடியார் வடிவம் வாக்கு, மனம், இந்திரியங்களுக்குக் கோசரம். சிவனடியார் உருவத்தைப் பக்தி மான்கள் நேத்திரத்தால் கண்டு தரிசிக்கின்றனர்; வாக்கினால் துதிக்கின்றனர்; பார்த்த வுருவை மனத்தினால் தியானிக்கின்றனர். அவ்வாறு சிவ னடியார் வடிவத்திற்கு அபின்ன காரணமான சிவன் வடிவம் கண்ணாற் காணவும் வாக்கால் துதிக்கவும் மனத்தினால் நினைக்கவும் படுமா? படுமெனின், எது இந்திரியத்துக்கும் வாக்கிற்கும் மனத்திற்கும் விஷயமோ, அது பிரத்தியட்சப் பொருளா யிருத்தல் வேண்டும். சிவன் பிரத்தியக்ஷப் பொருளாமா? அன்றி எது இந்திரிய வாக்கு மனங்களான மூன்றுக்கும் விஷயமோ, அது சடமா யிருத்தல் வேண்டும்; எது சடமோ அது அசத்தா யிருக்க வேண்டும். சிவன் சடப் பொருளாமா? அசத்துப் பொருளாமா? சிவன் முக் காலத்து முள்ள சத்துப் பொருளும் சித்துப் பொருளுமாமே. சிவன் சச்சிதானந்தப் பொரு ளென்றும் வாக்கு மனங்களுக்குக் கோசர மாகா ரென்றும் வேதாகம புராணேதிகாசங்க ளெல்லாம் கோஷிக்கின்றனவே.

கடத்தைப் பார்க்குங் கண், கடத்துக் கபின்னமான மண்ணைப் பார்ப்பது போலச் சிவனடியாரைப் பார்க்குங் கண், சிவ னடியார்க் கபின்ன மான துரிய சிவனையும் பார்க்க வேண்டும். பாரா தெனின், சிவ னடியார் வடிவத்துக்குத் துரிய சிவ வடிவம் அபின்ன மென்

றும் முதற் காரண மென்றும் கூறுத லொல்லாது. ஒல்லாத போது துரிய சிவனே சிவ னடியாராய் வந்தா ரென்பது பொய்யாகின்றது. சிவன், சிவ னடியாராக வருவதானுல் சிவனடியார்க்கு மாமிச முத லிய அசுத்தப் பொருள்களோடுங் கூடிய சரீரம் இந்திரியம் அந்தக் கரணுதிகளான இவைகள் இருத்தல் வேண்டும். சிவன், பத்தர்களி டம் பன்முறை மானிட வடிவங்கொண்டு வந்திருக்கிருரெனப் புரா ணேதிகாசங்கள் கூறுகின்றன. அவ்வடிவம் மானிட வடிவமாக விரு ந்தமையால் ஈச னென்று தெரியாமல், பத்தர்கள், தங்களைப்போல மனிதராகவே நினைத்தார்கள். நினைத்ததினுல் மானிடர்க் குரிய அசுத்த சரீராதிகள் அச்சிவனடியார்க் கிருந்தனவாக ஏற்படுகின் றன. சரீர முதல் ஜீவன் வரையிலு முள்ள தத்துவக் கூட்டங்களில் சித்தும் சடமு மிருக்கின்றன. துரிய சிவனே சிவ னடியாராக வந் தாரெனப் பூர்வ பக்ஷியார் கூறுகின்றமையால் ஷை சித்தும் சடமு மான தத்துவக் கூட்டங்களுக்கு ஷை துரிய சிவன் அபின்னமும் முதற் காரணமுமா யிருக்கின்றனர் என ஏற்படுகின்றது. சிவனே ஞான வடிவர்; சிவ னடியார் வடிவமோ சட சித்து. ஞானத்தி லிரு ந்து சித்தான ஞான முதிக்கு மென்று ஒப்பினுல் ஒருவாறு ஒப்ப லாமே யன்றி, சடமான அஞ்ஞான முதிக்கு மென்று சொல்ல லாகாதே. ஞானத்தி லிருந்து அஞ்ஞான முதிப்பது கூடாதென்றும் ஞான மயமான பிரமத்தி லிருந்து சடமான வுல குதிப்பது தோஷ மென்றும் சொல்லி, அத் துவிதிகளை இவரும் இவர் போன்ருரும் கேள்வி கேட்டு, இகழ்ந்து வருகின்ருர்க ளென்பதை யாவரும் அறி வர். இப் போது இப் பூர்வ பக்ஷியாரே அதற்குப் பதில் சொல்ல வேண்டியவரா யிக்கட்டில் அகப்பட்டுக்கொண்டார்.

மண் கடம்போல் சிவனையும் சிவ னடியாரையுஞ் சொல்வதில் பின்னு மொரு தோஷமிருக்கிறது. அதையுங் காட்டுகின்ருேம். எது காரணமோ, அது மற்ருென்றுக்குக் காரியப் பட வேண்டும். ஆடை க்கு நூல் காரணம்; அந்நூல் பஞ்சுக்குக் காரியம். இங்ஙனமே சிவ னடியார்க்குத் துரிய சிவன் காரணம்; அந்தத் துரிய சிவன் இன் னென்றுக்குக் காரியப் படவேண்டும். அந்த வொன்று யாது? அது எதை நோக்கக் காரியப்படும்? அது எதை நோக்கக் காரியமாகும்? இவ் வாறு செல்லச் செல்ல அநவத்தா தோட மெய்தும். இன்னு முள்ள தோஷத்தையுங் காட்டுகின்ருேம். காரிய மெல்லாம் அழிவு டையவென இவர் பக்ஷத்தாரான நூல விசாரணை புரிவோர் கூறுகி ன்றனர். அதன் படி சிவ னடியார் வடிவமுங் காரியம்; மேலே காட்டிய வண்ணம் துரிய சிவன் வடிவமுங் காரியம். இன்னும் எவ்வளவு தூரம்போய்க் காரணஞ் சொன்னுலும் அவைகளெல்லாம் மேலே சொல்லிய நியாயப் பிரகாரம் காரியமே யாகும். காரியமோ அழி வுடையது. எது காரணமோ அது முன் கூறிய முறைப்படி

காரியமாகும். ஆகக் காரிய காரணங்களெல்லாம் அழி வுள்ளனவாம். இப்படி யாகுமானல் அழிவில்லாது என்றும் சத்தாயும் நித்தியமாயு முள்ள பொருள் யாது? ஒவ்வொரு பொருளும் காரிய காரணங்களில் அடங்கி யாவும் அழிந்துபோகின்றமையால் அவ்வாறு அழியாமலிருக்கச் சொல்வது பூர்வ பக்ஷியார் கடமையேயா மென்க. இவர் பக்ஷத்தாரான தூல விசாரணை யுள்ளார் காரியப் பொருள் இருந்து அழிகின்ற தென்கின்றனர்; சூட்சும விசாரணை யுள்ள அத்துவிதிகளோ, இருப்பது ஒருபோதும் அழிந்திலது; இருக்கிறதாய்க் காணப்படும் போதே அது தோற்ற மென்கின்றனர்.

## மற்ருெரு பின்னவாதம்.

சிவனடியார்க்குத் துரிய சிவன் அபின்னமென்பதில் இவ்வளவு ஆக்ஷேப மிருக்கின்றமையால் பின்ன மென்று தான் சொல்வோம் எனின் இதில் பின்னும் மகத்தான தோஷங்கள் வருகின்றன. பின்ன மென்போமானல் சிவ னடியார் வடிவத்திற்கு உற்பத்தி ஸ்தானம் வேண்டும். அவ் வடிவம் தோன்றி யிருந்து மறைகின் றமையின், தோன்றுதற்கும் இருப்பதற்கும் மறைதற்கும் ஆதாரப் பொருள் ஒன்று வேண்டும். அந்தப் பொருள் எது? அது எங்குள்ளது? அதனிலக்கணம் யாது? சிவன் பூரணராகலின் வேறு பொரு ளிருத்தற்கிட மின்று. சிவனுக்குப் பூரணத்துவங் கூறுது கண்டத்துவங் கூறி, வேறு பொருளை முதற்காரணமாகக் கூறின் அங்கீகரிக்கப்படும்; அவ்வாறு பகர்தற் கியை யாது. சுருதி விரோதம் வரும். இப் படிப் போனல் சிசுஹத்தி, அப்படிப் போனல் ப்ரம்ம ஹத்தி. இதி னின்றும் இவர் தப்புவ தெங்ஙனே அறியேம்!

## விவர்த்தவாதம்.

இனிக் கயிற்றினின்றும் அரவுண்டாவதுபோல் துரிய சிவத்தினின்றும் சிவ னடியா ருண்டாயினர் என்று சொன்னல் தோஷம் என்னை எனின் சொல்வாம். இதை யொத்துக் கொள்ளின், சிவ னடியார் தோற்றல் மாத்திரமாய்ப் போகின்ருர். மெய் வாதத்தையே யொப்பும் சூளைவாசி அந்தப் பொய் வாதத்தை யொப்ப மாட்டார். கயிற்றரவு எப்படி முக்காலத்தும் பொய்யோ அப்படியே சிவனடியார் அவதாரமும் முக் காலத்தும் பொய் யாகும் இவைக ளல்லாமல் வேறு எவ்வித வுவமானங் கூறினும் இப்போது கூறிய வுவமானங்களில் அடங்கும். இவைகளை விட வேறு உவமானங் கூற நியாயமிருந்தால் கூறித் தம்பக்கத்தைத் தாபித்துக் கொள்ளலாம்.

## அகண்டகண்டவாதம்.

அகண்டமான சிவன், கண்டமான சிவனடியாராய் மானிடசொரூபங் கொண்டு வருவதுங் குற்ற மெனக் காட்டுவோம். போர்போல்

அதிக இடத்தைக் கொண்டிருக்கும் பஞ்சை யந்திரத்தில் அழுத்திச் சிறிய கட்டாய்க் கட்டுவதுபோல் அகண்டமான சிவன் குறுகிச் சிவனடியாராய் வருகின்றா ரென்னின், அண்டாண்டங்களுள்ளும் அப்பாற்பட்டும் நீக்க மின்றி எங்கும் நிறைந் திருக்கும் சிவன், வெகு சிறிதாய் எண்சா ணுடம்பில் குறுகி வருவது நிசமென்று நம்ப முடியாதாயினும் வெகு பிரயாசைப்பட்டு நம்புதல் வேண்டும். இதைக் கேட்பவர் மிக அதிசயமும் அடைவார்கள்! பஞ்சு, போர்போலிருக்கும் போது, இடைவெளி யாங்காங்குள்ளதால் சுருங்கிச் சிறிதாகச் செயதற் கிடனுகின்றது. நீக்க மின்றி நிறைந்திருக்கு மாயின், சுருக்க ஆகாது. ஒரு மலையைச் சிறிய கல்லாகச் செய்ய வேண்டு மானல் முடியுமோ? ஒருவாறு நீக்க மின்றி நிறைந்திருப்பதால் முடியாது. சிவன் நீக்கமின்றி நிறைந்திருப்பவரா? இடைவெளி விட்டு நிற்பவரா? நீக்கமின்றி நிறைந்திருப்பவராகலின், எண்சா ணுடம்பாகச் சுருங்கி வருவா ரென்று கொள்ளத் தக்க தன்று. போர்போ லிருக்கும் பஞ்சு யந்திரத்தால் சுருங்கிடின், முன் னிருந்த மற்ற இடங்களில் பஞ்சு என்ப தின்றி வெறு வெளியா யிருக்கின்றது. அவ்வாறு பரிபூரண சிவன் எண்சா ணுடம் பாகுங்கால் மற்ற இடங்களி லெல்லாம் சிவ னில்லையெனச் சொல்வதற் கிடனுகின்றது. சிவன், எண்சாணுடம்பான சிவனடியாராய் வந்து, தமது காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு பழையபடி பரிபூரணராய்ப் போகவேண்டியவரல்லவா? அப்படிப் போகும்போது எண்சா ணுடம் பளவுள்ள சிவன், எங்கும் பரிபூரணராய்ச் சிறிதும் நீக்க மின்றிப் போதல் கூடுமா? யந்திரத்தி லழுத்திய பஞ்சுக்கட்டு மறுபடியும போர்போ லாகுமாயின் கட்டா யிருக்கும்போது எப்படிக் கொஞ்ச இடத்தில் நிறைந்திருந்ததோ அப்படியே போர்போலி ருக்கும்போது போர் அவ்வளவு இடத்தில் நிறைந்திருக்குமா? நிறைந்திராதன்றோ? அங்ஙனமே எண்சாணுடம்பில் அடங்கிய சிவனடியார்: மறுபடியும் தூரிய சிவனுகுங்கால் நீக்கமின்றி எங்கும் பரிபூரணராய் நிறைந்திருப்பாரா? இவ்வளவு ஆக்ஷேபங்க ளிருக்கின்றமையால் அகண்டமான தூரிய சிவன், கண்டமான சிவனடியாராய் வருவா ரென்பது கொள்ளத் தக்கதன்று.

## அரூபரூபவாதம்.

அரூபம் ரூப மாவதும் ஆக்ஷேப மானது தான். சிவன் ரூபியன்று; அரூபி. அரூபியான சிவன் ரூபமாய் வருவது ஒருபோது மடாது. அரூபம், ரூபம் இரண்டும் எதிர் மறைகள். ஒருபொருள் அதற் கெதிர் மறையான பொரு ளாகாது. தன் சாதியாக மாறுமே யன்றி விரோதசாதியாக மாறாது. மாங்காய் தன்சாதியான மாங்கனி யாமேயன்றி, பலாக்காய் பலாக்கனிகளாக மாறாது. அங்ஙனமே அரூபம் அரூப பேதமாகிறதாகக் கொண்டாலுங் கொள்ளலாமே யன்றி

ரூபமாக வாவது ரூப பேதமாக வாவது ஆகு மென்று கொள்ளப் படாது. அரூபம் ரூபமாகுமென்று சொல்வதற்குத் திருஷ்டாந்த மாக வொருபொருளு மகப்படாது. அரூபம் ரூப மாயிற்றென நியாய மில்லாமலே பூர்வ பக்ஷியார்க்காகக் கொண்டாலும் இதிலும் அனேக தோஷங்க ளுண்டாகின்றன. அந்தத் தோஷங்களை யெடுத்துக் கூறு வாம். அரூபம் ரூபமாயிற் றெனின், அரூபங் கெட்டு ரூபமாயிற்று? அரூபங் கெடாது ரூப மாயிற்று ? அரூபங் கெட்டு ஆயிற் றெனின், அரூபமே யில்லாமற் போகின்றது. இதன் படி துரிய சிவனே இல் லாமற் போகின்றார். அரூபங் கெடாது ரூபமாயிற் றெனின் அரூபம் அரூபமாகவே யிருந்தால் ரூப மாத லெங்ஙனம் அமையும் ? உருகி நீரா யிருக்கும் நெய், கட்டி யாகவேண்டின் நீராயிருக்குந் தன்மை கெட்டுத் தானே கட்டி யாக வேண்டும். நீர் தன் தன்மை கெடாது நீராகவே யிருந்தால் கட்டி யாதல் கூடுமா ? அங்ஙனமே அரூப துரிய சிவன் அரூபமாகவே யிருந்தால் சிவனடியாரான ரூபியாதல் கூடாதே. நீராயிருக்கும் நெய், கட்டியாக வேண்டுமானால் குளிர்ச்சி யின்றி யமையாது. அங்ஙனமே துரிய சிவன், சிவ னடியாராய் ஆகிற தானால் குளிர்ச்சியைப்போ லொன்று யாதிருக்கிறது ? சிவன் பூர ணப் பொரு ளாகலின் வேறொரு பொரு ளிருக்க விடமின்றாம். ரூபி யான சிவ னடியார் மறுபடியும் சிவனாய் அரூபியாவதும் இவ்வித ஆக்ஷேபத்திற் கிட னாகின்றது. கட்டியா யிருக்கும் நெய், உருகி நீராவதுபோல் ரூபியான சிவ னடியார், துரிய சிவ னாகின்றா ரென் னின் கட்டியாயிருக்கும் நெய், கட்டித் தன்மை கெட்டு நீராயிற்று? கெடாதாயிற்று ? கெட்டு ஆயிற்றெனின் இதுபோலச் சிவனடியார் கெடுதி யுற்று இல்லாமற் போகின்றார். கெடா தாயிற்றெனின் கட்டி யா யிருக்கும நெய், கட்டி யாகவே யிருந்தால் நீராவது எங்ஙன மாகும் ? ஆகா தன்றோ ? அதுபோலச் சிவ னடியார் உருவம் சிவ னடியார் உருவ மாகவே யிருந்தால், துரிய சிவ னாவது எங்ஙனங் கூடும் ? அன்றி எது சத்தோ அது அழியாது ; அன்றி முக்கா லத்து முள்ளது. மற்றது அழிந்தும் போகும் ; அது முக்கால த்து முள்ள தெனக் கூறலொண்ணாது.

## ஞானஞ்ஞானவாதம்.

துரிய சிவன் ஞான மயர் ; அவர் சிவ னடியாராய் வருங்கால் அவர்க்குச் சரீராதிக ளிருந் திருக்க வேண்டும். அவை ஞான மய மல்ல; அஞ்ஞான மயமே. அந்த அஞ்ஞானம் ஞானத்தி லிருந்தே வந்திருக்கவேண்டும். ஞானத்திலிருந்து அஞ்ஞானம் வரு மென்பது பொருந்தாது. ஞானம் ஒளி வடிவம் ; அஞ்ஞானம் இருள் வடிவம். ஒளியிலிருந்து இருள் தோன்று மென்பது கூடாது. கூடு மெனின் ஒளி கெட்டு இருளாயிற்று ? ஒளி கெடா தாயிற்று ? கெட்டு ஆயிற் றெனின் பிறகு ஒளியே யில்லாமற் போக வேண்டும். இல்லாமற்

போயிற்றெனக் கூறல் கூடாது. இருள் போய் ஒளி வரக் காணுதல் தினம் அனுபவமா யிருக்கிறது. கெடா தாயிற் றெனின் ஒளி ஒளி யாகவே யிருந்தால் இருள் தலை காட்டுதற் கிட னில்லை. இதுபோல் ஞானங் கெட்டு அஞ்ஞான மாயிற் றெனின், ஞானமே யில்லாமற் போகின்றது. ஞானமே இல்லாமற் போயின், அதை யபின்ன மாக வுடைய துரிய சிவன் இல்லாமற் போகின்றார். ஞானங் கெடா தாயிற்றெனின் ஞானம் ஞானமாகவே யிருக்குமாயின் அஞ்ஞானந் தோன்றுதற் கிடனே யின்று. இடனே யில்லாத போது சிவ னடியார் வந்தா ரென்பது எப்படிக் கூடும்? ஒளி ஒளிபாட்டிற் கிருக்க இருள் தானாகவே தோன்றுகின்றதென்னில், இருள் எதினின்றுந் தோன்று கின்றது? அது ஒரு முத லல்லவே. இருளுக்கு முதல் ஒளியை யன்றி யில்லை. ஆதலால் தானாகத் தோன்ற மாட்டாது. தோன்றிற்றெனவைத்துக் கொள்ளினும் அவ்விருள் எங்கே விளங்குகின்றது? ஒளி யில்லாவிடத்து விளங்கவேண்டும். உவமானத்திற்கு ஒளி யில்லா விட மிருப்பதாய் வைத்துக்கொண்டாலும் உவமேயத்திற் றுரிய சிவனில்லாவிட மின்மையால் அஞ்ஞான வடிவான சரீரத்தோடுங் கூடிய சிவனடியார் வடிவ மிருத்தற் கிடமின்றென்றறிக.

## திரிமூர்த்தியுத்தீரண சிவன் சிவனடியாராய் வருதல்.

இனி, மேல் விஷயத்தைக் கவனிப்பாம். திரிமூர்த்தி யுத்தீரண சிவன் மாதா வுதரத்திற் றங்கி யோனிவாய்ப்பட்டுப் பிறக்க மாட்டா ரென்றும் ஆதலால் சிவன் யோனிவாய்ப்பட்டுச் சங்கராசாரியராகப் பிறந்தது பொய்யென்றும் வரைந்து, சிவனடியாராய் மாத்திரம் அவதரிப்பா ரென்கிறார். சிவ னடியாரா யவதரித்தால் மாத்திரம் ஒரு தாய் வயிற்றிற் றங்கி யோனிவாய்ப் பட்டுப் பிறக்க மாட்டாரோ? யோனி வழி யின்றிச் சிவ னடியாராய் வருவா ரெனக் கூறியிருக்கின்றதா? யோனி வழி யின்றியே வந்தா ரெனவே வைத்துக் கொள்வோம். மாயா காரிய மான மாமிசாதி அசுத்த தூர்க்கந்த வியட்டி சரீரத்திற் கட்டுப்பட்டு வருவதுமட்டுங் கூடுமா? பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுக்க அசுத்தத்திலும் அசுத்தமான பன்றி யுடலில் கட்டுப்பட்டு வருவதுங் கூடுமா? "ஆனா லிந்தவுடம்போ டிருப்ப தருவருப்பே" என்று பட்டினத் தடிகள் கூறி யிருக்கின்றனரே. தாய் வயிற்றிற் றங்கி யோனிவாய்ப் படுவது தாழ்மையென்னின் யோனிவாய் வரும் மானிடஜன்மத்தினும் வியர்வையிற் பிறக்கும் கொதுகு முதலிய ஜந்துக்களது ஜன்மம் மேலானதோ? மனித ஜன்மம் புண்ணிய ஜன்மமென்றும் கொதுகு முதலிய ஜந்துக்களது ஜன்மம் பாப ஜன்ம மென்றும் கூறுவது பொய்யோ? வயிற்றி லுள்ள மல முதலிய அசுத்தப்பொருள்களிலுண்டாகும் புழுமுதலிய அற்ப ஜந்துக்கள் யோனிவாய்ப்பட்டுப் பிறக்க வில்லையே. அதனால் மனித ஜன்மத்தை விட அவைகள் மேலான புண்ணிய ஜன்மமோ? இது

இருக் கட்டும். வள்ளி யம்மை மிருக வடிவமான மானின் யோனி வாய்ப்பட்டுப் பிறந்தனரே. சிவாம்சமான முருகக் கடவுள் மதுரையில் வணிக குலத்தி லூமைப் பிள்ளையாய் அவதரித்தனரே. இவைகளுக் கெல்லாம் என்ன சமாதானம்!

இப்படி அவதரித்தது ஜீவ கருணையி னிமித்தமேயன்றிச் சிவலாபங் கருதிக் கரும பந்தத்தா லலலவெனின் அஃதுண்மைதான். அங்ஙனமே சங்கராசாரியாரும் கர்ம்மபந்தத்தாலல்லாம லுலகசேமத்தி னிமித்தம் சீவ கருணையினால் மானிடரில் ஒருவர்போல யோனி வாய்ப்பட்டுப் பிறந்தா ரென்றால் குற்ற மென்னை? சிவன் பிறப்பில்லாதவரென்று கூறுகின்றதேயெனின் பிறப்பென்பது உற்பத்தி. அதாவது ஒன்றினின்றுந் தோன்றுவது. சிவ னடியாராய் வந்ததும் உற்பத்திதான்; மாணிக்கவாசக சுவாமிகளுக்கு வந்து ஞானோபதேசஞ் செய்தருளிய குருமூர்த்தமும் உற்பத்திதான்; திருக் காளத்தியில் பணிப் பெண்ணுக் காக எழுந்தருளி வந்ததும் உற்பத்திதான்; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகப் பரவையாரிடத்துத் தூது நடந்த வடிவமும் உற்பத்திதான்; இன்னும் உலகு தோன்றியது முதல் இதுகாறும் தொண்டர் பொருட்டும், ஞானவான்கள் பொருட்டும் தோன்றிய வடிவங்கள் யாவும் உற்பத்திதான். இனித் தோன்றும் வடிவங்களும் உற்பத்திதான். உற்பத்தி இருவகைப் படும். ஒன்று அஞ்ஞான கர்ம்ம பந்தப் பட்ட ஜீவர்கள், ஞானம் பெற்று முத்தியடையும் பொருட்டு உதிப்பது; மற்றொன்று சர்வஞ்ஞத்துவாதி குணங்களோடுங் கூடிய ஈசுவரன், அஞ்ஞானமான கர்ம்மபந்தமின்றி உலோகோபகாரமாகத் திருவருள் கொண்டுதிப்பது. முன்னர்க் கூறியது சாதாரணமாய்ப் பிறப்பென்றும், பின்னர்க் கூறியது அவதாரமென்றும் சொல்லப் படும். அவதாரத்துக்கு ஜனன மரண துக்கமில்லை. பிறர்க்குத் தோன்றினும் அவர்க்குக் கிடையாது. ஜீவகோடிகளுக்குட்பட்ட சுகர்முதலிய மகா தவ ஞானவான்களெல்லாம் பிறவித்துன்பத்தை யனுபவியாது மாயையைவென்று பிறந்தாரென்னின் இயற்கையாகவே ஞான சொரூபராயிருக்கும் ஈசுவரனுக்குப் பிறப்பு இறப்புத் துன்பமெப்படிச் சொல்லக்கூடும்? ஒரு மனிதனுக்கு இளமை முதல் விருத்தாப்பியம் வரையில் பலபேதப் பருவங்களுண்டாவனபோல் தேவாமிச முள்ள வியாசாதி மகா ரிஷிகளுக்கு ஒரு பிராரத்துவம் பத்துத்தேகம் வரையிலும் அநுபவிக்கப் படுகின்றது. அவர்கள் பிறப்பிறப்புத் துன்ப மென்பதின்றி ஞானவடிவாய் மாயா ரகித ராய் விளங்குகின்றார்கள். சிவப் பிரகாச சுவாமிகளும் தாமியற்றிய வேதாந்த சூளாமணியில்,

"அறைந்தநுகர் வினையதுதா னுலோகயாத்திரைக ளதிகரியாதுறுநரர்க் கேயோருடம்புதனில், செறிந்துநுகர்வா மவற்றி னதிகிருதராகிச் சிறந்தமா புருடர்க்குத் தசசங்கையுடம்பின், உறைந்தலது தீர்ந்திடாதெனினும் மறைப்

பின்றியுறுதலா லொருவனுக்கிங் கிளமை முதல் பேதம், பிறந்திடினுமவனுக் கோருடம்பேயாய் நின்ற பெற்றிபோலாகுமெ‌ன வுணர்ந்திடுவிர்தெரிந்தே''.

எனக் கூறி யிருக்கின்றார். வியாசாதி மகாரிஷிகளுக்கே ஜனன மரணத்துன்ப முறுமெனின், சிவன், தாய் வயிற்றிற் றங்கி யோனி வாய்ப்பட்டுத் துன்புறுவாரென எங்ஙனஞ் சொல்லற்பாலது!

## உருத்திரரே அவதாரஞ் செய்வாரென்பது.

சிவன், சங்கராசாரியராக அவதரித்தா ரென்பதில் பூர்வ பக்ஷி யார் என்ன ஆக்ஷேபம் செய்கிறாரோ, அவ்வளவு ஆக்ஷேபம், சிவன், சிவ னடியாராய் வருவதிலு முள தெனவும், சங்கராசாரியராக அவ தரித்ததினால் பிறவித்துன்பமின்றெனவும், அவதாரம் உலோகோப காரமாகச் செய்யப் படுகின்ற தெனவும், அதனால் மாயா சம்பந்த மின்றெனவும் கூறினோம். அன்றித் துரிய சிவன், சிவ னடியாராய் வருவதினா லுண்டாகும் அனேக ஆக்ஷேபங்கள் செய்து, அவற்றி லுள்ள மகத்தான தோஷங்களை யெல்லாங் காட்டினோம். இந்தத் தோஷங்க ளெல்லாம் சங்கராசாரியா ரவதாரத்தி லுண்டாகாவோ வெனின் உண்டாகா. சங்கராசாரியாராக அவதரித்தது எங்கும் பூர ணராய் நீக்கமின்றி நிறைந்திருக்கும் நிஷ்கள நிர்விகார நிச்சல துரிய சிவ னன்று; உருத்திர மூர்த்தியே யாம். உருத்திர மூர்த்திக்கு இப் படிப்பட்ட அவதாரமுண்டோ வெனின் உண்டென்பதைக் காட்டு வாம்.

### சூதசங்கிதை சூதகீதை

### சருவசாஸ்திர சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

திரிமூர்த்திகளுமவருடையதிகழுமவதாரங்களுநன்
கரியசிவத்தியானஞ்செய்தாலுமவிரும்பரமான்ம
வுரியதாயவிபாகத்தினுறச்சேர்ந்தவ்ரேயல்லாமல்
விரியுஞ்சீவவிபாகத்திற்சேர்ந்தோரல்லர்மெய்த்தவத்தீர். (௭)

அண்ணியமும்மூர்த்திகட்குமவரவதாரங்கட்கும்
புண்ணியபாவாதியிலைசிவாக்கினையாற்பொலிசீவர்க்
கெண்ணிதத்துக்காகவாவிற்பாவந்திரோபாவ
நண்ணியதேயல்லான்மற்றில்லையானன்குணர்வீர். (௮)

அவர்களுமற்றவர்களவதாரங்களுஞ்சீவரானோராலே
கவர்தருபோகங்கதிக்காவுபாசனைசெயத்தக்கோர்கரிசிலாத
தவர்காளுபாசனைவிடயமதுசமமேனுஞ்சார்ங்கபாணி
துவரார்பூவாளியினுமுருத்திரனேயதிகனென்றுசொல்வார்நல்லோர். (௯)

### வாயுசங்கிதை

### பாசுபதயோகமும் எண்வகைநாமமும் உரைத்த அத்தியாயம்.

கடியதாகியகலியுகம்வந்துறுங்காலை
வடிநெடுங்கண்ணிபங்கினன்மாதவம்பூண்டு

இ

முடிவினான்மறைதழுவியவாகமமுழுது
மொடிவின்றாகியேயுறவிரித்துரைத்துறைகுவனால். (௭)

ஷை தேவர்களுக்குச் சிவாகமம் அளித்த அத்தியாயம்.

விரியுமாகமத்தையண்ணறன்னருளால்யானுமெய்தெரியசத்தியனும்
பொருவிலாருருவுந்ததீசியுமுலகிலுரைசெய்தேங்கலியுகம்பொருந்தி
மருவிடுந்தோறுமறுவறுயோகாசாரியன்மாசறுவடிவாய்க்
கரியுரிபோர்த்தோனெய்திமற்றதனையுய்ந்திடக்கழறுவனன்றே. (௧)

ஷை குரவர்பெயரும் மாணாக்கர்பெயரும் உரைத்த அத்தியாயம்.

அருந்தவச்சுவேதன்சுதாரன்மெய்த்தமனன்சுகோத்திரனருள்பெறுகங்கன்
பொருந்துலோகாட்சிசைகிடவியன்சீர்போற்றிடவுறைதிவாகரனற்
றிருந்தியவிடபனுருத்திரன்றீதிலத்திரிசுவாலகன்சிறந்து
விரிந்தநூறெரிந்தகௌதமன்வேதசிரன்மிகவிளங்குகோகன்னன். (௨)

உறைகுகாவாசிசிகண்டிசெந்தழல்போலொளிதிகழ்வளர்சடாமாலி
மறைதெரியட்டகாசனும்வணங்குதாருகனிலாங்கலிமாசி
லறிவின்மாகாயன்சூலிமாசண்டிமுண்டிசன்சயிட்டுணுவருளா
ணிறைதருசோமசன்மனற்றவத்தினிகரிலாதுறைலகுளீசன். (௩)

எனுமிவர்யோகாசாரியராவாரிவர்தமாணாக்கர்நற்சுவேதன்
வினையறுசுவேதசிகனுயர்சுவேதாசியனருண்மிக்கநற்றவத்தாற்
றனையுணர்சுவேதலோகிதன்றயங்குறுந்துபிவளர்சதரூப
னனைவரும்போற்றவுறையிருடீகன்கேதுமானறிவிகாசரனே. (௪)

மார்க்கண்டேயர் புராணம் பதினாறாவது சந்திரன்

தத்தாத்திரேயர் தூருவாசர் அவதரித்த அத்தியாயம்.

இவ்வண்ணம் பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்கள் கலைகள் அவ்வனுசூயைக்கு மூன்று மக்களாய்ப் பிறந்தன. தேவர்கள் கொடுத்த வரத்தின் சீர்பாட்டினால் பிரமனே சோமனும், விஷ்ணுவே தத்தாத்திரேயனும், உருத்திரனே தூருவாசனுமாகப் பிறந்தனர்.

உருத்திர மூர்த்தி எப்படிப் பட்டவ ரெனின், அகண்ட பரிபூரண ப்ரம்மத்தின் பரியாய நாமம் பெற்ற துரிய சிவன், சத்துவகுண மாயையிற் பிரதி பலிப்பதே யுருத்திர மூர்த்தி யாம். மாயா பிரதிபிம்பர் என்றதால் மாயை பொய் யென்றும் சொல் மாத்திரையான இல் பொருளென்றும் அதனால் பிரதிபிம்ப சிவனும் இல் பொருளென்றும் சூளைவாசி கூறுகின்றார். இவர் வேத முதலிய சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டவ ரன்று. தான் தோன்றித் தம்பிரான்போன்றவர். ஆதலாற்றான் இப்படிச் சாஸ்திரங்கட்கு முழு மாறாகப் பேசுகின்றார். மாயை யென்பது சொல் மாத்திரமா யுள்ள இல் பொருளென் றிவர்க்குச் சொன்னவர் யார்? அத்துவித சித்தாந்தத்தையறியாது, அத்து விதிகளால் கண்டிக்கப் பட்ட பூர்வ பக்ஷத்தையே மெய்யென்று நம்பி ஆழ மறியாமல் காலை வைத்தவர்க் கொப்பானார். மாயை யென்பது சத்துக்கும் அசத்துக்கும் விலட்சண மென்றும்

அநிர்வசனீய மென்றும் கூறி, இவர்க்குத் தெளி வுண்டாகும் படி, இப்பத்திரிகையின் * கக-வது சஞ்சிகையிலேயே விளக்கிக் காட்டி யிருக்கிறோம். இதற்குப் பிரமாணமுங் கூறுகின்றோம்.

**சூதசங்கிதை**

**வேதார்த்தத்தை யுரைத்த அத்தியாயம்.**

சாற்றுமாயாநிவிர்த்திதானதிட்டானமாய
தோற்றுசைதனியத்தின்சொரூபமானதுமற்றின்ப
மாற்றுமந்நிவிர்த்திதானுமபாவமாமனேயமாயை
மாற்றருஞ்சதசத்திற்குப்பின்னமாய்வயங்குமாலோ. (சு)

இப்படிப்பட்ட சதசத் விலக்ஷண அநிர்வசனீய மாயையானது சுத்த மென்றும், அசுத்த மென்று மிரு வகை. அச் சுத்த மாயை யும் சத்துவம், ரஜசு, தமசு என முக் குணமா யுள்ளது. சத்துவ குணப் பிரதி பிம்பர் விஷ்ணு; இவர்க்குத் தொழில் காத்தல். ரஜோ குணப் பிரதி பிம்பர் பிரமன் ; இவர்க்குத் தொழில் படைத்தல். தமோகுணப் பிரதி பிம்பர் உருத்திரர்; இவர்க்குத் தொழில் அழித் தல். அசுத்த மாயா பிரதி பிமபர் ஜீவர்கள். இவரினும மூன்று பிரி வுண்டு. அசுத்த மாயைக்கு அவித்தை யென்று பேர். ஈசுவரரும் ஜீவரும் மாயா பிரதிப் பிமபராயினும் சுத்த மாயை நிர்மமல சலம் போன்றது; ஆதலால் அதிற் றோஷ மின்று. அசுத்த மாயை மலின ஜலம் போன்ற தாகலின் தோஷ முளது. சுத்த மாயை மோகஞ் செய்யாது ; ஆகலின் ஈசுவரன் மாயையோ டிருந்தும் மாயா ரகித ராவர். தமது முயற்சியினல் பிரம ஞானம் பெற்ற ஆன்மாக்களே மாயையோ டிருந்தும் மாயா ரகித ராய் விளங்குகின்று ரென்னின் இயற்கை யாகவே ஞானத் தோடுங் கூடிய ஈசுவரன் மாயா சகித ரென் றெங்ஙனம் சொல்லக்கூடும்? இதற்குப்பி ரமாணம் வருமாறு:-

**சூதசங்கிதை சூதகீதை பரமவிஞ்ஞான முரைத்த அத்தியாயம்.**

கருளொளியாற்கழிவதுபோற்கதிர்த்தசிவஞானத்தான்
மருளுறுஞானங்கழியுமற்றதவஞ்ஞான
மிருளவித்தைமாயையெனவீருருவமாயிருக்குந்
தெருள்படைத்துமேலாயதிறத்துறநின்றீரவற்றுள். (ஒ)

முன்னுமவித்தையாற்பசுபேதமுமொய்வலியமாயையாற்
பன்னுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டதுவான்
மன்னுதேகேந்திரியாதிவாசனுபேதத்தாலே
பின்னுபேதமாமவித்தைபேசுபசுபேதத்திற்கும். (சு)

குணங்களுடையவாசனுபேதத்தால்கொள்பேதமா
யிணங்கவிருக்குமாயையியைபரதத்துவபேதத்திற்கு

---

* "துவிதசைவரே மாயாவாதிகள்" என்ற நூலில் ஒன்று முதல் 8-ம் பக்கம் வரையில் காண்க.

*முணங்கலறுகாரணமாகுமொழியாப்பவஞ்சமயக்கொழியப்*
*பிணங்கலறுநன்னெறிநின்றபெரியீர்காண்மும்மூர்த்திகளுள். (எ)*

*உயர்சத்துவநற்குணந்தகமுடையனாயுஞ்சங்கார*
*மயரத்தகுதமோகுணமதுடையனாயுமலிர்கின்றோ*
*னியலிற்பொலியுமுருத்திரனாலியைதாமதவன்குணவுடம்பும்*
*வயமார்திதிக்காச்சத்துவநற்குணமுமுடையோன்மாயவனே. (அ)*

## இதைச் சமஸ்கிருதப் பிரகாரம் விரித்துச் சொல்லுகின்றோம்.

*பிரம விஷ்ணு உருத்திரர் வேறு வேறாக விருப்பினும் பரமான்மாவினது அம்ச மாவார்; சீவக் கூட்டத்தி லிருப்பவ ரன்று. சீவர்க்கு உபாதி அவித்தை; மாயை யன்று. மாயை பரமான்மாவுக்கு உபாதி; வேறொருவர்க் கல்ல. மாயையினது காரிய மான குணங்களால் மறைவு பட்டவர் பிரம விஷ்ணு உருத்திரர்; மாயோபாதியி லுள்ளவர் பரவி யூகங்க ளாவர்; சீவ வியூகத்தி லிருப்பவ ரல்லர். பரமான்மாவினது வியாபகமா யிருப்பது பிரம விஷ்ணு உருத்திரர்க்குச் சரியானாலும் அதி லுருத்திரர் ஒருவரே சிரேஷ்டர். மாயையென்னும் பேர் பெற்ற அஞ் ஞான ரூப பேதத்தால் பரமாத்துமா தன்மையை யிலக்கணமாக வுடைய பேதங் கற்பிக்கப்பட் டிருக்கிறது. கடாகாச மகாகாசங்களது பேத மெங்ஙனங் கற்பிக்கப் பட்டதோ அங்ஙனமே சீவாத்துமா பரமாத்துமாக்களுக்குப் பேதங் கற்பிக்கப் பட்டது சீவர்களுக்குப் பல தன்மை யெங்ஙனங் கற்பிக்கப் பட்டதோ, அங்ஙனமே பரனுக்கும் பல தன்மை கற்பிக்கப்பட்டது. சுபாவத்தி லின் றென்க. அங்ஙனமே பரனுக்கு ஏற்றத் தாழ்வு தன்மையுங் கற்பிக்கப்பட்டது. தேகேந்திரிய முதலியவற்றி லுண்டான வாசனா பேதத்தால் வேறுபட்ட அவித்தை யானது சீவ பேதத்திற்குக் காரண மாகும்; மற்றொன் றல்ல. குணங்களுடைய வாசனா பேதத்தால் பேதிக்கப்பட்ட மாயை யென்ப தியாதோ, அது பரதத்துவத்திற்குக் காரண மாகும்; மற்றொன் றல்ல. எவர்க்கு மாயையி லிருக்கின்ற சத்துவமானது சரீரமாமோ, தமமானது குணமாமோ, திரி மூர்த்திகளுக்குள் சங்காரத்தின் பொருட்டு அவர் உருத்திரராவர்; மற்றொருவ ரல்லர். எவர்க்குத் தமமானது சரீரமாமோ, சத்துவமானது குணமாமோ, திரிமூர்த்திகளுள் பரிபாலனத்தின் பொருட்டு அவர் விஷ்ணு வாவர்; மற்றொருவ ரல்லர். எவர்க்கு ரஜஸானது சரீரமாமோ, அவ்விரஜசே குண மாமோ, திரிமூர்த்திகளுக்குள் சிருஷ்டியின் பொருட்டு அவர் பிரமா வாவர்; மற்றொருவ ரல்லர்.*

## ௯. வேதப்பிரமாணிய முரைத்த அத்தியாயம்.

**தேவதேவனா யிருக்கின்றவனது கூடாததைக் கூட்டிவைக்கின்ற மாயை யென்னும் சத்தி யொன் றுளது. மாயை யென்னும் அந்தச் சத்தியால் யாவுங்**

கூடும். சிவனுடைய அந்த மாயையானது பிரசித்தமானது. ஆயினும் உண்மையா யில்லை. சமுசயமில்லை. கூடாததைக் கூட்டிவைக்கின்ற அந்த மாயையால் சத்தா யிருக்கின்ற சிவனிடத்தில் எல்லாங் கூடும்.

### ஷை விசேஷ சிருட்டியுரைத்த அத்தியாயம்.

*கருத்தாவாயபரசிவன்றன்மாயையொடுவேறறக்கலப்புற்*
*றிருப்பானெனினும்பூர்வகற்பத்தினியைவாசனையானும்*
*கருச்சாய்த்துயர்ந்தீர்செறிகாலகருமவனுகுணமதாயுந்*
*தருக்காநின்றமாயைக்குந்தனக்கும்பேதங்கற்பிப்பான்.* (௨)

*அறையாநிற்குங்கற்பிதமானதுவாத்துவமல்லாமையால்*
*குறைதீர்ந்தீகற்பிதபேதங்கூறுஅபேதம்பாதியா*
*திறைபின்பூர்வேட்சணவாசனையாலீட்சிதாவுமாய்*
*மறைதன்மாயையொடுகூடிமாயாகுணபேதங்களால்.* (௩)

*திரிமூர்த்திகளைப்படைத்தவர்க்குந்திகழந்தரியாமியாயிருப்பான்*
*றுரிசிலவரும்பரதத்துவவபேதத்தான்முத்தொழில்செய்வா*
*ருரியவிசேடரூபத்தொவ்வொருவரொவ்வோர்காரியத்தைப்*
*பிரியமருவச்செய்வார்கள்பேணியுணர்மின்மாதவத்தீர்.* (௪)

### ஷை பஞ்சப்பிரம விசாரமுரைத்த அத்தியாயம்.

*பரசிவன்மாயையினாலேயைம்பிரமவுருவானன்பகரம்மாயை*
*விரவுமசாத்தியமானசெய்கைகளைச்செய்வதனால்விளம்பம்மாயை*
*யுரவுறுசம்பந்தத்தாலேசககாரணத்துவமுன்னாகியுள்ள*
*பரவுறுமெல்லாமந்தப்பரசிவற்குண்டாயினவால்பளகிலீரே.* (௧௨)

### பரமசிவசொரூப விசாரமுரைத்த அத்தியாயம்.

*மறைமுதல்தனக்குநாமரூபங்கள்ருவுதலிமல்லையேயெனினுங்*
*கறையறவிளங்குமாயையினாலேகற்பிக்கப்பட்டனவாகும்*
*முறைநயச்சிவன்மாதேவன்முற்பெயர்களுருத்திரனாமங்களாகு*
*மறைபரம்பிரமமுதற்பெயர்பரதத்துவவவிர்வாசகமாமால.* (௧௩)

### வாயுசங்கிதை உருத்திரன் வெளிப்படு மத்தியாயம்.

*உறையுமாயையுடன்கூடியுறைவோய்நின்னைத்தொழுதிடுவோம்*
*நறைதாழ்மாலைமுடியமரர்நாடுமுதலேவணங்கிடுவோம்*
*நிறையுமுலகமெவற்றினுக்குந்தாயாய்நின்றோய்நினைத்தொழுவா*
*மறையுமந்தவுலகுருவாயமருமணங்கேயடிபணிவாம்.* (௪)

### ஷை சிவம்சத்தியுரு விபூதியுரைத்த அத்தியாயம்.

*மாயையினின்றுமுக்குணப்பகுதிவந்திடும்வந்தமர்றதனி*
*லேய்வுறக்குணங்கள்மூன்றும் வந்திடுமாலவற்றினிலிறைவர்மூவர்களோ*
*டாயிருபத்துமூன்றுதத்துவமுமெய்திடுமவற்றினாலலகி*
*றாயபேரண்டமுடம்புகள்வந்துதொடர்ந்துறத்தோன்றிடுமென்றே.* (௧௦)

### யஜுர்வேதம் கைவல்லியோபநிஷத்.

அவனே (அந்தப் பரமாத்துமாவே) மாயையினாலே மோகிக்கப்பட்ட அந்தக்கரணத்தை யுடையவனாய்ச் சரீரத்தை யடைந்து சகலத்தையுஞ் செய்கிறான்.

### சுக்கில யஜுர்வேதம் நிராலம்போபநிஷத்.

(உ) ஈசுவரர் யார்? அவருடைய இலக்ஷணம் யாது?

பிரமமே தன்னுடைய சக்தியாகிற பிரகிருதியினாலே (ஈசுவர னென்கிற) பெயரையடைந்து உலகங்களைச் சிருஷ்டித்து (அதிலே) அந்தர்யாமியாய்ப் பிரவேசித்து, பிரமாமுதலானவர்களுடைய புத்தி யிந்திரியங்களுக்கு நியாமகனா யிருப்பதினாலே ஈசுவரனாகிறான்.

### சுக்கில யஜுர்வேதம் பைங்களோபநிஷத்.

அதில் (மூலப் பிரகிருதியில்) பிரதிபலித்ததெதுவோ, அது ஈசுவர சைதன்யமா யிருக்கிறது. அவன் (ஈசுவரன்) மாயையைச் சுவாதீனமா யுடையவனும் சர்வக்கிய னும் சிருஷ்டி திதி லயங்களுக்கு ஆதிகர்த்தாவாயும் சகத்துக்கு முளையாயுமிருக்கின்றான்.

இதுவரையில் ஈசுவரன் மாயோபாதிகனென்றும் மாயை நிர்ம்மல ஜலத்தைப்போன்ற தென்றும் அதோடுகூடிய மாயை மோகஞ் செய்யாதென்றும் ஈசுவரன் சுயஞ்ஞானவடிவினனென்றும் சர்வஞ்ஞத்துவாதி குணங்க ளுள்ளவ னென்றும் அந்த மாயை சதசத்திற்குப் பின்னமென்றும் கூறிப் பல சுருதிமுதலிய பிரபல சற்பிரமாணங்கள் காட்டினோம். அதுபற்றியே மாணிக்கவாசக சுவாமிகளும் "அந்தணனாகி யாண்டு கொண் டருளி, இந்திர ஞாலங் காட்டிய இயல்பு" என்றும், "சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண் டிந்திர ஞாலம்போல வந்தருளி" என்றும், "பொய்ம்மையும் ஆயினார்க்கு" என்றும், "மாயனே" என்றும், "பேதங்களனைத்துமாய்" என்றும், "மாயவ னப்பரிமேல் கொண்டு" என்றும் கூறினார். துரிய சிவன், மாயாசத்தியோடு கூடாது யாதொரு செயலுஞ் செய்யமாட்டார். அதுபற்றியே மாணிக்கவாசக சுவாமிகள், தமக்கு வந்தருள் செய்த கோலங்களையும், யாவு மான தன்மையையும் இந்திர சாலமெனவும் மாயமெனவும் பொய்மையெனவும் கூறினாரென்க.

## புல் பூடாதிகள் பிரமஸ்வரூபமென்பது.

இனி மற்ற விஷயத்தைத் தொடுப்போம். "புல், பூண்டு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர், எல்லாப் பிறப்பும் பிரம ஸ்வரூபங்களென்று கொண் டாடு மிவர் மதத்தில் யாவருமே பிரமத்தின் அவதார மாகக் கூறவேண்டியது ஆவசியகமாக, இவர் சங்கராசாரியரை மாத்திரம் சிவாவதாரமென்று கொண் டாடியது பேதைமையேயாம்" என்கிறார். வேத சாஸ்திரங்களுக்கும் யுக்தி யநுபவங்கட்கும் விரோதமாகப் பேசும் பேதைமை யிவரிடத்திலேயே முற்றும் நிரம்பி யிருக்கின்றதைக் காட்டுகின்றோம். ப்ரம்மம் பூரணமாதலாலும் நீக்கமின்றி யிருத்தலாலும் அது இல்லாவிட மின்மையாலும் வேறு பொரு ளிருத்தற் கிட மின்று. மற்றப் பொருள்க ளிருக்கு மிடம் வரையில் பிரமமில்லாதிருக்கும். இல்லாதிருக்கவே, பிரமம்பரிபூரணமென்று பகர்தற் கிடமில்லாமற் போம். மற்றப்பொருளில்லை யென்

றுஞ் சொல்லப்படாது. இருந்தால் எப்படி யிருக்கலாம்? எப்படி யிருந்தால் சுருதி, யுக்தி, அநுபவங்கட் கொவ்வும்? இதைப் பற்றி விசாரணை செய்து பார்ப்போம். வேத சாஸ்திரங்களால் வாதிக்கப் படும் பொருள் பிரமம், சீவர், உலகமாகிய முப்பொருள்களாம். பிரமம் ஆதாரமென்றும் மற்ற இருபொருள்களும் ஆதேயமென்றும் பூர்வ பக்ஷியார் சம்மதிப்பார். அந்தப்ரம்மத்தின்கண் மற்ற இருபொருள்களும் தற் கிழமையா யிருக்கின்றனவா? பிறிதின் கிழமையா யிருக்கின்றவா? சினை குணம் தொழில்கள் தற்கிழமை; பொருளிடங் காலங்கள் பிறிதின் கிழமை. பிரமத்தின்கண் மற்றப் பொருள்களைத் தற்கிழமையாய்ச் சொன்னாற்றான் பிரமத்துக்குப் பரிபூரணஞ் சித்திக்கும்; பிறிதின் கிழமையாய்ச் சொன்னால் பரிபூரணஞ் சித்தியாது. மரத்தின் கிளை மரத்தின் பசுமை மரத்தி னசைவு இம்மூன்றும் தற்கிழமையினது சினை, குணம், தொழில்களுக்கு முறையே யுவமானம். சினை என்பது அவயவமானதாலும் ப்ரம்மஸ்வருபமான துரியசிவன் நிரவயவியானதாலும் சினை சொல்லப்படாது; நிர்க்குணமான சிவனுக்குச் சகுணங் கூறுவதும் யுக்தமல்ல, கிரியாரகிதரான சிவனுக்குத் தொழில்கூறுவதும் குற்றமாம். அன்றி ப்ரம்மத்துக்குத் தற்கிழமையாகச்சீவர்களைச் சொல்லின் ஜீவர்கள்படும்துக்கங்களெல்லாம்சிவன் படுகிறதாகவே சொல்லவேண்டும். பிரமத்துக்கு ஜீவ வுலகங்களைப் பிறிதின் கிழமையாகச் சொன்னால் பிரமம் கண்டப் பொருளாய்ப் போம். பிரமங் கண்டப் பொருளானால் புல், பூடு முதலிய உலகப் பொருளாகாது; வேறுபட்டே யிருக்கும். பிரமம் பூரணப் பொருளானால் வேறு பொரு ளிருக்க விட மில்லை. இருந்தால் சினை குணந் தொழில்களா யிருக்கவேண்டும். சினை குணந் தொழில்களா யிருந்தால் பிரமமே புல், பூடு முதலியவைக ளென்று சொல்லத்தானே வேண்டும். எப்படிப் போனாலும் இமிசைதான். துவைத சைவ சித்தாந்திகளுக்குத் தப்ப வழி யில்லவே யில்லை. இவ்வளவு குற்றம் தம்மிடம் வைத்துக்கொண்டு பிறர் பேரில் குற்றங் கூறப் போவது அறிஞர்க் கழகன்றும்!

இனி இவ்வித ஆக்ஷேபங்கள் அணுத்துணையு மில்லா அத்வைத சித்தாந்தத்தை அநுசரித்து அவ ராக்ஷேபத்துக்குச் சமாதானங் கூறுவாம். பிரமத்தின்கண் சீவ வுலகங்க ளிருக்கவும் வேண்டும்; பிரமத்துக்கு அபரிபூரண தோஷமும் வரப் படாது; சீவ வுலகங்களினது நய நஷ்டமும் பிரமத்தைச் சாராம லிருக்க வேண்டும். எப்படிச்சொன்னால் சாராமலிருக்கும்? எப்படிச் சொன்னால் தோஷம் வராது? தோற்றமாய்ச் சொல்லிவிட்டால் தோஷம் வாராது. அஃது யாங்ஙன மெனின் கயிற்றின்கண் அரவுபோல் என்பதாம். கயிறு உண்மை, அரவு பொய் யென் றறிந்த வுடனே அரவு தோற்றுவதில்லை; உலகம் அவ்வா றன்று; ப்ரமத்தைத் தவிர வுலக மின்றென வுணரினும் பின்னும் தோற்றுகின்றதே என்னின், அஃது

உண்மைதான், உலகு பொய்யென்பது வரையில் கயிற்றரவு திருட்டாந்தம். காரியம் பொய்யென் றறிந்தும் பின்னும் தோற்றுதற்குத் திருட்டாந்தம் கானல் நீராம். இதிலும் சங்கை யுள்ளது ; அது நீர் அருந்துதற் குதவுவ தின்று ; உலகு அநுபவத்திற்கு வருகின்றது என்னின், காரியம் பொய்யென் றுணர்ந்த பின்னரும் தோற்றுகின்றது என்பது வரையில் கான னீர் திருட்டாந்தம் இனி யனுபவத்திற்கு வருகிறது என்பதற்குத் திருட்டாந்தம் சொப்பன வுலகாம். சொப்பன வுலகு பொய்யா யிருந்தும் தோற்றுதலும் பொருளாயிருத்தலும் அநுபவித்தலுமாகிப் பொய் யென்று சொல்லற்கிடனுகின்றது. சொப்பன வுலகு பொய் யாயினும் முற்றும் பொய் யன்று. பொய்யென்பதே திண்ணமெனின் மலடி மைந்தன், ஆகாச தாமரைகளைப்போல இல்லாம லிருக்க வேண்டும். மெய் யென்பதே திண்ணமென்னின் சிவத்தைப்போல முக்காலத்தும் இருக்க வேண்டும். சொப்பனவுலகு மலடிமைந்தனைப்போல இல்லாமற் போதலுமன்று ; சிவத்தைப்போல முக்காலத்து முள்ளதாயிருப்பது மன்று. உள்ளது (சத்து)ம், இல்லது (அசத்து) மாகச் சொல்லலா மென்னின் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறுன இரு இலக்கணமுள்ள பொருள் இராது. (மேலும் எது உள்ளது (சத்து)ம், இல்லது (அசத்து) மோ, அது உண்மையில் இல்ல (அசத்து) தே யாம். கான னீர் முன்பு உள்ளது ; தேர்ச்சியில் இல்லது. அதை இல்ல தென்றே சொல்ல வேண்டும். ஆதலால் சொப்பன வுலகு சதசத் விலட்சண மென்றே சொல்ல வேண்டியது. அப்படியே அது போன்ற இவ் வுலகையும் சதசத் விலக்ஷணமென்றே சொல்ல வேண்டியது. இது பற்றியே சூதசங்கிதை வேதார்த்த முரைத்த அத்தியாயம் ஆறுவது பாட்டில் மாயையைச் "சதசத்திற்குப் பின்ன" மென்று சொல்லப் பட்டிருக்கின்றது. இத னர்த்தத்தை யுணரார் "அத்துவிதிகள் உலகைப் பொய்யென்கிறார்கள்" என்று சொல்லுகின்றனர். பொய்யென்பதில் இவ்வளவு வித்தியாச மிருக்கின்றது, சொப்பன வுலகு ஒரு காலத்தில் தோற்றி யொரு காலத்தி லில்லாமற் போகிறது. அப்படியே சாக்கிர வுலகும் ஒரு காலத்திற் றேன்றி ஒரு காலத்தி லில்லாமற் போகின்றது. சொப்பன வுலகு தோன்றுதற் கிடனு யிருப்பது மனம். மனத்தைத் தவிரச் சொப்பன வுல கின்று. மனம் சத்து ; சொப்பனவுலகு அசத்து அல்லது சத்துப்போலி. காரியங் காரணத்தினிடத்திலே நிகழ்கின்றது. அப்படியே ப்ரம்மத்தினிடத்து உலகப் பொருள்கள் தோற்றமாய் நிகழ்கின்றன. சொப்பன வுலகப் பொருள்கள் அவை தோற்றுங் காலத்துச் சத்தியமாகவும் பிரத்தியக்ஷமாகவும் அநுபவமாகவும் எப்படி மனத்தின்கண் இருக்கின்றனவோ, அப்படியே சாக்கிர வுலகும் அது தோற்றுங்காலத்துச் சத்தியமாகவும் பிரத்தியக்ஷமாகவும் அநுபவமாகவும் இருக்கின்றது. காரியமுண்டாதற் கேற்ற சத்தி, காரணத்தின்க ணிருப்பது சகஜம் ;

கட சத்தி மண்ணின் கண்ணும் படசத்தி நூலின் கண்ணு மிருப்பது போலாம். சொப்பனவுலக சத்தி மனத்தின்கண் இருக்கின்றது. அவ்வாறே இச்சாக்கிர வுலக சத்தி பிரமத்தின்கண் உள்ளது; அதுதான் மாயை. அந்த மாயை பிரமத்தின்கண் அவாந்தரமா யுள்ளது. இருப்பூசியைச் சேட்டிப்பிக்கும் சத்தி, காந்தத்தின்கண் எங்ஙனம் அவாந்தரமாயுள்ளதோ, அங்ஙனமே பிரமத்தினிடத்து மாயாசத்தி அவாந்தரமாயுள்ளது. அந்த மாயாசத்தி பிரமமுமல்ல; பிரமத்தைத் தவிரவுமில்லை. அங்ஙனமாய சத்தி அனேக உலகங்களை யெல்லாம் அடக்கி வைத்திருக்கின்றது. அந்த மாயாசத்தியானது, தன்னிடத்தினின்று முண்டாக்கும் காரியப்பொருள்களைப் பின்னம்போல் காட்டச்செய்யும் வல்லமை பெற்றது. அதுபற்றியே

சூதசங்கிதை சாந்தோக்கிய உபநிடததாற்பரிய முரைத்த அத்தியாயத் தில்

*செப்புபேதாபேதமெம்மாத்திரமும் வரமாட்டாதுணர்வீர்*
*தப்பிலாதவிப்படியே சாற்றுமெல்லாக்காரியமு*
*மொப்பிலாதகாரணத்தோட பேதமாயுற்றிருந்தாலு*
*மெய்ப்பின்மாயையாற் பேதமாகித்தோன்றுமிமையீரே.* (௫)

*பேசுவிகாரமெலாம் பெயராற்பின்னமாகியிருந்தாலு*
*மாசிலாதபரமார்த்தமாகவவிரும்பிரமத்தோ*
*டேசிலபேதமாகியேயிருக்கின்றனவண்டுமுழுதுழக்கி*
*வாசநறுந்தேனுண்டுவெக்குமாலைத்தடந்தோளமரீரே.* (௬)

*சகத்துக்கொரு காரணமாகித் தயங்குமந்தப் பிரமங்கற்*
*பகத்தண்டொடையன் முடிவேய்ந்துபாரோர் புகழப்படும்போகஞ்*
*சுகத்தின் மருவும்விண்ணவர்காள் சொல்லாநிற்கும் பின்னமுமன்*
*றுகத்தல் செய்யும் பின்னுபின்னமுமன்றொன்றாயே யிருக்கும்.* (௭)

என்று கூறப்பட் டிருக்கின்றதென்க. சொப்பன வுலகும் அது தோன்றுதற் கிடமான அவாந்தரசத்தியும் அது இருத்தற்கிடமான மனதும்போல, முறையே இச்சாக்கிர வுலகும் மாயையும் பிரமுமாம். கடத்துக்குக் கட சத்தியையுங் காரணமாகச் சொல்லலாம்; சத்தியை மண்ணிலடக்கி மண்ணையுங் காரணமாகச் சொல்லலாம். மண்ணைத்தவிரச் சத்தி வேறில்லாமையாலும் சத்தி ஒரு பொருளாயிராமையாலும் சத்தியை மண்ணி லடக்கி, மண்ணை கடத்துக்குக் காரண மென்று கூறப்படு கின்றது. அப்படியே சொப்பன வுலகு தோன்றுதற்கு ஏது வான சத்தியை மனத்தி லடக்கி அச்சொப்பன வுலகுக்கு மனங் காரண மென்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டு உவமானங்களைப் போல் மாயையைப் பிரமத்தி லடக்கி, பிரமத்தை யுலகிற்குக் காரணமாகச் சொல்லுகிறார்கள் வேதாந்திகள். இப்படிச் சொல்வதால் பிரமம் காரணமும் உலகு காரியமு மாகும். மண்ணிலுள்ள கடாதிகளை நோக்கி இவைக ளெல்லாம் கடாதிக ளென்றுஞ் சொல்லலாம்; சூட்சுமமாய்ப் பார்க்கு மிடத்து மண்ணைத் தவிரப்

பொருளில்லாமையால் மண்ணே யென்றுஞ் சொல்லலாம்; அப்படியே சொப்பனத்தில் காணப்படும் புல், புழு, மரம் முதலிய எல்லாப் பிறப்பும் மனமே யென்று சொல்லலாம். மண்ணைத் தவிரக் கடாதிக ளெப்படி யில்லையோ, அப்படியே மனத்தைத் தவிரச் சொப்பனப் பிரபஞ்சத்தி லுள்ள புல், புழுவாதிக ளின்றென்க. இவ்விரண்டுவமானங்களைப் போலச் சாக்கிரத்தி லுள்ள புல், பூடு, புழு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர் ஆகிய எல்லாப் பிறப்புகளையும் ப்ரம்ம ஸ்வரூபமென்று சொல்லலாம்; மண்ணைத் தவிரக் கடாதிகளில்லாமை போல ப்ரம்மத்தைத் தவிர அவைக ளில்லாமையாலென்க. புல், பூடு முதலியவைகளை ப்ரம்ம ஸ்வரூப மென்றெப்படிச் சொல்வது? அவைக ளெல்லாம் சட மாயினவே; ப்ரம்மமோ சித்தென்று சொல்லப்படுகிறதே என்று சங்கிக்கலாம். ப்ரம்மத்தின் கண் இரு வித சத்திக ளுள்ளன. ஒன்று அபின்ன சத்தி, ஒன்று பின்ன சத்தி. இந்தப் பின்னசத்திதான் மாயை. ஊசியை அசைப்பிக்கும் தர்மம் காந்தத்தின்கண் எப்படி அவாந்தரமா யுள்ளதோ, அப்படியே ப்ரம்மத்தின்கண் பின்னசத்தியான மாயையானது அவாந்தரமா யுள்ளது. சத்தி யெப்போதுங் கண்ணுக்குப் புலப்படுவதன்று; காரியத்தினாலேதான் நிரூபிக்க வேண்டுவது. மனத்தின்கண் சொப்பன வுலகிற்கு மூலமான சத்தி புலப்படுவ தின்று. காரியமாகச் சொப்பன வுலகு தோன்றுகின்றமையால் அப்படிப் பட்ட சத்தி யொன்று மனத்தின்க ணிருப்பதாக வூகிக்கவேண்டி யிருக்கின்றது. இந்திர சாலப் பொருளுக்கு இந்திர சால சக்தி காரணம். அந்தச் சத்தி யிந்திர சாலக் காரனிடத் திருக்கின்றது. அவனும் அவனது இந்திர சாலத்தாற் றோற்றுவிக்கப் பட்ட பொருளும் பின்ன மாயினும் அபின்னமே; அவனை யன்றிப் பொரு ளில்லாமையா லென்க. அப்படியே மனதும் சொப்பன வுலகும் பின்னமாகக் காணப்படினும் அபின்னமே யாம்; மனத்தைத் தவிர அஃதில்லாமையாலென்க. மனம் சித்தாயினும் அதிலுள்ள பின்ன சத்தி யானது சடமானதால் அதன் காரியமான வுலகும் சடமாகத் தோற்றுகின்றது. அப்படியே ப்ரம்மத்தினிடத் துள்ள மாயா சத்தியான பின்ன சத்தி சட மானதால் அதன் காரியமான வுலகும் சட மாகத் தோற்றுகின்றது. ஆதலால் புல், பூடு முதலியவைகள் ப்ரம்ம ஸ்வரூபமென்று சொல்வதில் யாதொரு தோஷமு மில்லை. ப்ரம்மத்துக்குப் புல், பூடாதிகள் ஒரு விதத்தில் பின்ன மென்றும், ஒரு விதத்தில் அபின்ன மென்றுஞ் சொல்லலாம்; மாயையின் காரியமான வுலகு பின்னமா யிருப்பதால் பின்ன மென்றும் சத்தி யென்பது குணமா யிருப்பதாலும் அது ப்ரம்மத்தைத் தவிர வில்லா திருப்பதாலும் அந்தச் சத்தியைத் தவிர வுல கில்லாமையாலும் அபின்ன மென்றுஞ் சொல்லலாம். பின்னஞ் சொன்ன அவசர மின்னதென்றும், அபின்னஞ் சொன்ன அவசர மின்னதென்றுந் தெரியாமல் தக்கபடி அத்வைத

விசாரணை செய்யாதவர் பிரமிக்கின்றனர். அப்படிப் பிரமிப்பவரி லிவரு மொருவராம் போலும்! இவர் 'புல், தேவர் முதலிய எல்லாப் பிறப்பும் பிரம்ம ஸ்வரூபங்களென்று கொண்டாடு மிவர் மதத்தில் யாவருமே பிரமத்தி னவதார மென்று கூறவேண்டியது ஆவசியமாக, இவர் சங்கராசாரியரை மாத்திரம் சிவாவதார மென்று கொண்டாடியது பேதைமையே யாம்.' என்று கூறியதற்குத் தக்க நியாயங் கூறி மறுத்திடுவோம். யாவருஞ் சீவர்களாக விருந்தாலும் தேவப் பிறவிக்கும்; புழு, புல் முதலிய பிறவிக்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. எல்லோரும் மனிதர்களாக விருந்தாலும் சக்ரவர்த்திக்கும் தோட்டிக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது? பண்டிதனுக்கும் மிருகம்போ லிருக்கும் பாமரனுக்கு மெவ்வளவு வித்தியாச மிருக்கிறது? குபேரனுக்கும் பிச்சைக்காரனுக்கும் எவ்வளவு பேத மிருக்கிறது? ஒருவன் பல்லக் கேறுகிறான்; ஒருவன் பல்லக்கைச் சுமக்கிறான். ஒருவன் குருவா யிருக்கிறான்; ஒருவன் அவன் காலில் விழும் மாணாக்கனா யிருக்கிறான். ஒருவன் நியாயாதிபதியா யிருக்கிறான்; ஒருவன் அவனால் சிட்சிக்கப்படுகிறவ னாகிறான். ஒருவன் சாபானுக்கிரகங்க ளுள்ள தவ ஞானங்களைப் பெற்று இருவகைப் பற்றுக்களையும் விட்டு ஆரூட ஞானியா யிருக்கிறான்; ஒருவன் மகா கிராதகனாய்ப் புலி முதலிய கொடிய மிருகங்களைப்போ லிருக்கிறான். ஒருவன் நிரகங்காரியாய் வெகுளி யின்றிச் சாந்தமா யிருக்கிறான்; ஒருவன் அகங்காரியாயும் சாந்த மில்லாமலு மிருக்கிறான். ஒருவன் நிட்காமியா யிருக்கிறான்; ஒருவன் காமியா யிருக்கிறான். தோல் ஒன்றா யிருந்தாலும் சிரசி லுள்ள தொப்பியின் றோலுக்கும் காலிலுள்ள பாதரக்ஷையின் தோலுக்கும் எவ்வளவு வித்தியாசங்க ளிருக்கின்றன? காரண மொன்றானாலும் காரியங்களி லெவ்வளவோ வித்தியாசங்க ளிருக்கின்றன வென்பதை யின்னும் எடுத்துக் காட்ட வேண்டுமோ? ப்ரம்மத்தை நீக்கி வேறு ஒரு பொருளும் முன் காட்டிய நியாயப்படி யில்லை யாதலால் அது பற்றி அப் பிரமத்தில் முன் கூறியபடி இருக்கும் ஈசுவர ஜீவ ஜகத்துக ளெல்லாம் ஒரு அவசரத்தில் ப்ரம்ம ஸ்வரூபமே யென்று (சித்தாந்தமா யல்ல) பூர்வ பக்ஷமாய்ச் சொல்லப் படினும் அந்த ஈசுவரனுக்கும் மற்றச் சீவ வுலகங்களுக்கும் எவ்வளவோ தாரதம்மிய மிருக்கின்றது.

நிற்க, ஈசுவரன் மாயாபிரதி பிம்பர்; அந்த மாயை சுத்த நிர்மமல ஜலம் போன்றது; அந்தமாயை மோகஞ்செய்வ தன்று; அன்றி அம் மாயையோடு ஈசுவரன் கூடியும் கூடாதவ ராம்; மேலும் அவர் சர்வஞ்ஞத்துவாதி குணங்க ளுள்ளவரும் சிருஷ்டியாதி தொழிற் செய்பவரு மாம். இந்தத் தொழில் செய்வது ஜீவகாருணியத்தின் பொருட்டேயாம். இவரே சீவகாருணியத்தால் சங்கராசாரியராக அவதரித்தார். ரஜோகுணப் பிரதிபிம்பர் ஜீவர்கள்; ரஜோ குணத்துக்கு அவித்தை யென்று பேர்; அது மோகஞ் செய்வது; அம்

மோகத்திற் குட்பட்டுக்கிஞ்சிக்கியராய்ப் பிறப்பிறப்புகளை யடைந்து ஈசுவரனை யுபாசிப்பவர்கள். தமோகுணத்தி லிருந்து அந்தக்கரணம், ஞானேந்திரியம், தசவாயுக்கள், கர்ம்மேந்திரியங்கள், பஞ்ச பூதங்கள் பிறந்தன. இவை சீவர்களுக்குத் தநுகரண புவன போகங்களாக ஈசுவரனால் கொடுக்கப்பட்டன. காரண மொன் ஞனாலும் காரியங்கள் பலவாகும். அன்றி எவ்வளவோ பேதமாகவு மிருக்கும். ஐந்து ரூபா மதிப் புள்ள இரும்பைப் பல காரிய மாக்க, பத்து ரூபா முதல் இரண்டு லட்சம் ரூபா வரையில் மதிப்பாகின்றது. அந்த இரும்பைக் கட்டைப் பாறையாகச் செய்தால் பத்து ரூபா வாகும். அதே யிரும்பைக் கைக் கடியாரங்களுக்கு (*Spring*) ஸ்பிரிங் என்னும் கருவி யாக்கினால் இரண்டு லட்சம் ரூபா பெறும். பார்த்தால் யாவும் ஒரு எடையும் காரணத்தில் ஒரு மதிப்புமாயு மிருக்கின்றன. சடப் பொருளிலேயே யிப்படி யானால் சித்துப் பொருளி லெவ்வளவு பேத மிருக்கலாம்? சித்துப் பொருளுக்கும் சடப் பொருளுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் சொல்ல வேண்டுவ தில்லையே. கவர்னர் ஜனரலுடைய புத்திக்கு மாசம் இருபதினாயிரம் ரூபா சம்பளம்; அவருக்குப் பங்கா விழுக்கிறவனது புத்திக்கு ஐந்து ரூபா சம்பளம். கவர்னர் ஜனரலுக்கு உயர்ந்த சம்பளங் கொடுப்பது புத்தியைப் பற்றியேதான். இலௌகீகத்திலேயே புத்தி யிவ்வளவு தார தம்மிய மிருக்கு மானால் பாரமார்த்திகத்திலே கேட்க வேண்டுமோ? இவர் ஒரு மாயையைச் சுத்தம், அசுத்தம், சுத்தா சுத்த மென மூன்றாக்கிப் பேதப்படுத்திக் கூறுவதைக் கவனியாமற் பேசுகின்றார். 'அதிஷ்டான மாகிய பிரம்மத்தினது அவதார மென்று கூறாமல் மாயையி லாரோபிதமான சிவனுரைது பிறப் பென்று கூறியது பேதைமையிற் பேதைமையாம்' என்று கூறிய பேதைமையை முன்னரே நன்கு விளக்கி, துரிய சிவன் சிவனடியாராய் வருவார் என்றதி லுள்ள மட்டில்லாத் தோஷங்களைப் பட்டப் பகலாய்க் காட்டி, அவரது ஆராய்ச்சி யில்லாமையை யெடுத்து விரிவாய்க் கூறி யிருக்கின்றோம். அன்றி அவதார மெல்லாம் உருத்திர மூர்த்திக்கே யென்றும் பேசி யிருக்கின்றோம்.

## சிவன் மாயாசம்பந்த முடையவ ரன்றென்பது.

மேல் "இனி இவர் சங்கராசாரியர் பிறப்புக்கு மூலமாகத் தேடிய சிவன் மாயோபாதிகத ராயிடினும் அவரோடு மாயோபாதிகதர்களாகத் தோன்றிய பிரம விஷ்ணுக்களது பிரஸ்தாபமு மிவரது மதத்திற் கேட்கப்படுகின்றது சிவன் விஷ்ணு பிரமன் மாயோபாதிகதர்களது மூவரில் சிவன் தமோ பிர விஷ்டரும் விஷ்ணு ஸத்வ விசிஷ்டரும் பிரமா ராஜஸ சிரேஷ்டருமா யிடுதல் சித்தம்" என்று கூறியதில் இது இவரது மதம் என்றதனால் அத்துவிதிகளுடைய மதம் என்றாயிற்று. இவர் சிவனை மாயோபாதிக ரென்றும்

அத்துடன் விஷ்ணுபிரமாக்களையும்மாயோபாதிகரென்றும் கூறுவதாய்க் கூறுகின்றா ரன்றோ? இது அவருடைய மருட்சியே யாம். திரிமூர்த்திகட்கும் ப்ரம்மஸ்வரூபரான சிவன் சாட்சியாய் விளங்கப்பட்டவர். அவர் ஒருபோதும் மாயா சகித ராக மாட்டார். உருத்திரரே மாயா சகிதர். அவரும் மாயை யுடனே கூடியும் கூடாதிருப்பவர். ஆதலால் உருத்திரரையும் மாயா சகித ராகச் சொல்லப் படாது. அப்படி யிருக்கச் சாட்சாத் சிவனை மாயோபாதிக ரென்று கூறியதும் அது அத்வைதிகள் கொள்கையென்று வரைந்ததும் பித்துரையாம்; அதோடு சிவன் தமோ பிரவிஷ்ட ரென்று கூறியது பித்துரையினும் பித்துரையாம். உருத்திரனைத் தமோ குண முள்ளவரென்று கூறி யிருப்ப துண்மையே. அதற்குச் சுருதி முதலிய பிரமாணங்களை யெடுத்து முன்னரே காட்டினோம்; அதனால் யாதொரு பாதகமு மின்றென்பதையுங் காட்டினோம். 'சங்கராசாரியார் பிறப்புக்கு நமதன்பர் தாமோபிரவிஷ்டராகிய சிவனையே மூலமாகத் தேடியவா றென்னை? தாமசம் ஞான விரோதமா யுள்ளது' என்று கூறியதிலுள்ள தோஷத்தையுங் காட்டுகிறோம். சங்கராசாரியார் அவதாரத்துக்குச் சிவனை மூலமாகத் தேடியது யாரு மில்லை. உருத்திரரையே தேடினார்கள். அதற்குப் பிரமாணமும் முன்னரே காட்டினோம். அவதார மெல்லாம் உருத்திரர்க்கே அன்றிச் சாட்சாத் சிவனுக் கல்ல வென்பதற்குப் பிரமாணங்களும் காட்டினோம். 'தாமசம் ஞானவிரோதம்' என்கிறார். உருத்திர ரென்னும் பெயர் சங்காரத் தொழிலால் வந்தது. சிருஷ்டி, திதி, சங்காரங்கள் ஜீவர்கள்மேல் வைத்த கருணையினால் செய்யப் படுகின்றன. ஆசிரியர் மாணாக்கரையும், பிதா புத்திரர்களையும் தண்டிப்பது தாமஸ குணமென்று கூறப் படாது. மிகக் காருணியத்தால் செய்யப் படுகின்றதென்றே கூறல் வேண்டும். தண்டிப்பது கொடுமை போல் மேல் நோக்கான பார்வைக்குத் தோன்றினும் உண்மையி லவ்வா றன்று; அன்பும் அருளுடைமையுமாம். அது பற்றியே உருத்திர மூர்த்திக்கு அகக் குணம் சத்துவமென்று கூறப்பட்டிருக்கின்றதென்பதாம்.

### சூதசங்கிதை சூதகீதை

### பரமவிஞ்ஞான முரைத்த அத்தியாயம்.

எல்லாவற்றினும் பிரமமென்னுமதியே விசேடமா
நல்லார்புகழுமுருத்திரற்குநகுமுள்ளேசத்துவகுணமு
மல்லார்வெளியேதமோகுணமு மாயற்குள்ளேதமோகுணமும்
வில்லார்வெளிச்சத்துவகுணமு முள்ளவென்பார்மெய்யுணர்ந்தோர். (சஅ)

2 5 MAR 19

எனக் கூறப்பட்டிருக்கின்றமை காண்க. அன்றிச் சாக்கிராவஸ்தைக்குப் பிரமனும்சொப்பனாவஸ்தைக்கு விட்டுணுவும், சுழுத்தியவஸ்தைக்கு உருத்திரனும் அதிதேவதையாகக் கூறப்பட்டதில் சுழுத்தியவஸ்தையில் கரணங்க ளெல்லா மொடுங்கிச் சுகமயமாயிருக்கின்றன. சுகம் சத்துவகுணமாகும்.

சுழுத்தியில் சுகமென்பதற்குப் பிரமாணம்:—

**வாயுசங்கிதை ஞானநிலைமை யுரைத்த அத்தியாயம்.**

*ஒன்றுமறியாரிவ்வகையே யுரைப்பர்புந்திமுதலொடுங்க*
*இன்றுதுயின்றேனெழுந்துநன்காய்த்துயின்றேனென்னஇசைத்தமையான்*
*என்றும்எவைக்கும்நடுவாகியிருக்கும் ஆன்மாவுளன் அவனை*
*மன்றமறையந்தரியாமியென்ன நாளும்வழங்குமால்.* (உஎ)

**கைவல்யோபநிஷத்.**

*"சுஷுப்திகாலத்தில் சகலமும் லயமடைந்திருக்கையில் அஞ்ஞானத்தினால் சூழப்பட்டவனுய்ச் சுக சுகரூபத்தை யடைகிருன்"*

**பிரமகீதை**

**கைவல்யோபநிடதார்த்த முரைக்கு மத்தியாயம்.**

*உறங்குமவ்வியத்தமன்னிய தமத்தினுட் புகுந்தொன் றொழியாம*
*லிறந்தவவ்விடத்தே தன்னுருவானவின்பமே புசிக்குமீண்டெழுந்து*
*கறங்குபோனனவையடையினுமடையுங் கனவைவந்தடையினுமடையும்*
*சிறந்தமுப்புரமுமிவன் விளையாடித்திரிதரச் செய்ததேதிகழ்த்தில்.* (கஉ)

*இனி "இவர் சிவனுக்கு அந்தஸ்ஸத்வமுண்டென்று வாதிக்க வருவார்போலும்" என்கிருர். வாதிக்கவந்தே மேற் செய்யுளையுங் காட்டினேம். அதன்பேரில் "அப்போது விஷ்ணுவுக்கு அந்தஸ் தமஸைக் கூறிச் சிவனிலும் விஷ்ணு குறைந்தவர் என்று வாதிக்கும் வைஷ்ணவ கண்டன முண்டாகுகையால்" என்று கூறி அச்சங் காட்டுகின்றுர். சிவனிலும் விஷ்ணு குறைந்தவ ரென்று வாதிப்பதில் இந்தச் சோமசுந்தர நாயகருக் கென்ன வந்தது! இவரைப் போல் நாம் "வாய்க் கொழுப்புச் சீலையால் வடிந்தது" என்பதாய் "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல் லிழுக்குப்பட்டு" என்னும் தெய்வப் புலமைத் திரு வள்ளுவ நாயனுர் திரு வாய் மலர்ந்தருளிய தெய்வீகத் திருக்குறளை அவமதித்து அலட்சியஞ் செய்து மறந்து, விஷயத்தின்மேல் விஷயமாய்க் கண்டனஞ் செய்வதைவிட்டு,படித்துக் கௌரவமா யிருக்கும் ஒரு கனவானை வைது, அதன் பேரில் காலிலே விழமாட்டாத குறையாய்க் கெஞ்சிப் பணத் தண்டமுமிறுத்துச் சுதந்தரத்தையும் விட்டு, உடன்படிக்கையு மெழுதிக் கொடுத்தோ மில்லையே. கொடுத்திருந்தா லன்றோ ஒரு மதத்தைக் கண்டிக்க அஞ்ச வேண்டும்? இவர் மதத்தைக் கண்டிக்க ஏதேனு மஞ்சுகின்றோமா? நமக்கு வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட எல்லோரும் சகோதரர்கள். வேத சாஸ்திரங்களுக்கு அவர்க்குத் தோன்றிய ஒரு உரை அவர் செய்தால் நமக்குத் தோன்றிய ஒரு உரை நாம் செய்கின்றோம். நமக்கும் அவர்க்கும் விஷயத்தின்மேல் சண்டையேயன்றி, ஆளுக்கு ஆள் சண்டை யில்லை; சிநேகமே. விஷயத்தின்மேல் விஷயம் பேசுவதை விட்டு நேரே ஆளைத் தூஷித்து வைதால் ஆளுக்கு ஆளே சண்டையுண்டாம். ஒருவரையொருவர் கொல்லமாட்டாத பகையு முண்டாம். அது காரணமாக*

அநேக அனர்த்தங்களு முண்டாம். இது விஷயமாக இந்தச் சோம சுந்தர நாயக ரவர்களுக்கு எத்தனை பேர் எத்தனை வித மாகச் சற் புத்தி கூறினும் உறைப்ப தில்லை. அவர்க்கு மிகச் சிநேகிதராய் அவரைச்சிறப்பித்துப் பேசுவோரும் அவரைத்தூஷகரென்றும் நியாயந் தவறுகிறவரென்றும் எழுதுகின்றார்கள். அவர்க்கு ஒருமுறை பட்டதும்ஞாபகத்துக்கு வருகிறதில்லை.எதிர்ப்பக்ஷத்தாரைக்கனஞ்செய்து விஷய கண்டனஞ் செய்யலாமே. கனஞ்செய்ய இஷ்ட மில்லாவிடில் தூஷியாம லெழுதலாமே. விஷய பல முள்ளவர்க்குத் தூஷணை யேதுக்கு? முற்காலத்திற் பத்திரிகையுமில்லை; அச்சுமில்லை. ஒரு நூல் செய்தால் அதைப் பார்த்து மற்றொருவர் கையினு லெழுத வேண்டும். அது மிகக் கஷ்டம். ஆதலால் நூல் பரவாது. அன்றி ஒரு மதஸ்தர் செய்தகண்டனைக் கிரந்தம் கண்டிக்கப்பட்ட மதஸ்தர் பலர் கையிலு மேறுவது மகா கஷ்டம். இக்காலத்தில் அப்படியல்ல. ஒரு நாளில் அச்சிட்டுப் பரப்பலாம். அதுவும் உலக முற்றும் ஒரு மாசத்தில் பரவி விடும். இரு கட்சிக்காரருக்குப் புறம்பான வேறு கட்சிக்காரரும் பார்க்கிறார்கள். பத்திரிகைகளில் விஷயத்தின்மேல் கண்டனையின்றி மனிதர்கள் மனம் புண்படத் தூஷித்து எழுதினால் அதைப் பார்க்க யோக்கியர்கள் வெறுப் புறுகின்றார்கள். ஆதலால் நியாயமாய்க் கண்டனை செய்பவர்க்கு ஒருவிதத்திலும் குற்றமில்லை; அவமானமு மில்லை. பொதுமனிதர்கள் சந்தோஷித்து வியந்துபேசுவார்கள். கண்டிக்கப் பட்ட மதஸ்தருங் குற்றங் கூறுவதற் கிடனிராது. ஆகலின் சோமசுந்தர நாயகர் இதை வாசித்துப் பார்த்து இனி எதிர்ப்பக்ஷத்தார் மனம் புண்படா திருக்க இத மொழிகளால் வாதஞ் செய்து தூஷணையை விட் டொழிப்பா ரென்று அவர்க்கு இதமொழிகளால் கூறுகின்றோம். இவர், வைஷ்ணவகண்டன முண்டாகு மென்றாரே; உண்டானால் வாதிக்கப் படாதோ? இவர் வைஷ்ணவ கண்டனஞ் செய்ததில்லையோ? இவர் மாத்திரஞ் செய்யலாம்; மற்றப்பேர் செய்யப்படாதோ? இவர் பத்திரமெழுதிக் கொடுத்தது முதல் வைஷ்ணவகண்டனஞ் செய்யாதிருக்கிறாரோ என்னமோ தெரியாது. அதுபற்றி மற்றவரையும் அந்தப் பத்திரத்துக் குட்படுத்தப் பார்க்கின்றாரோ என்னமோ அதுவும்நமக்குத் தெரியவில்லை. வாதஞ் செய்யும் போது அனேக மதஸ்தர்க ளுடைய கண்டனை யிடை இடையில் வரக்கூடும். அப்படிக் கெல்லா மிருக்க எல்லா மதஸ்தர் களையும் விட்டு, வைணவ மதஸ்தர்கள்மேல் மாத்திரம் பக்ஷ மாய்ப் பேசிய காரண மென்னோ? இவர்க்கு அம் மதத்திலும் அம் மதஸ்தரிடத்திலும் அச்ச மிருந்தா லிருக்கட்டும். அதை நாம் வேண்டா மென்று சொல்ல வில்லை. இதை மற்ற மதஸ்தர்களுக்குச் சொல்வது மாத்திரம் அநாவசியத்திலும் அநாவசியமென்று தோன்றுகின்றது. நமக்கு வைஷ்ணவ மத கண்டனை வந்தாலு ஞ்சரி, இவர் மத கண்டனை வந்தாலுஞ் சரி, நமக்குத் தோன்றிய வரையில் எழுதிக்

கொண்டுதான் போவோம். ஆனால் ஒருவரையு மிகழ்ந்து பேசமாட்டோம். அப்படி யேதேனும் வித்தியாசமான சொற்கள் பிசகி எழுதியிருந்து, அதை இவர் எடுத்துக் காட்டினால், அதற் காக அவர்க்கு வந்தனஞ் செய்வதோடு அவர் செய்த நன்றியை மறவாமலுமிருப்போம்.

## சிவனும் விஷ்ணுவும் பேத மில்லாதவரென்பது பற்றி.

"சிவனும் விஷ்ணுவும் பேத மில்லாதவர்கள். அவர்களில் யாரை யுபாசிப்பது மொன்றே யென்ற போலி ஸ்மார்த்தர்கள் கூறுவதும் சிவாவதார மென் றிவர் கொண்டாடும் சங்கராசாரியர் விஷ்ணு புஜங்க முதலிய நூல்கள் செய்து விஷ்ணுவை வழிப் பட்டதும் ஸர்வாசங்கதமாம்" என்று கூறி, அவர்களுடைய கருத்தை யணுத்துணையு மறிந்துகொள்ளாதவரெனப் பட்டப்பகலாய்க் காட்டிக் கொண்டார். போலி ஸ்மார்த்தர் கூறுவதற்கு யாரு முத்தர வாதியல்லர். எல்லாமதஸ்தரிலும் எல்லாச்சாதியாரிலும் எல்லாப்பொருள்களிலும் போலி யுண்டு. போலியை யதார்த்தமாகக்கொண்டு பேசுதல் தகுதி யன்று. போலிச் சித்தாந்திகள் கூறுவதற்கு யதார்த்த சித்தாந்திகள் உத்தர வாதி யாகார். ஆனால் அவ் வாறு கூறு வோர் போலி ஸ்மார்த்தரன்று ; யதார்த்த ஸ்மார்த்தரே. அவர் கூறும் ரகஸியங்களி னுழத்தைத் தெரியாமலும் துவேஷத்தாலும் உணர்ந்து கொள்ளாமையான குற்ற மிவர் பேரிலேயே யுள்ளது. அதைத் தெரியப் படுத்துவோ மாக. பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய இம் மூவர்க்கும் விலக்ஷணமா யுள்ள பொருள் பிரமம் அல்லது பிரமத்தின் பரியாயநாமமான சிவன். இன்னும் பல பரியாய நாமமுண்டு. பிரமா, விட்டுணு, உருத்திரன் இம் மூவரில் ஒருவர்க் கொருவர் முறையே மேலானவர். இம்மூவர்க்கு மேலானதும் அதிட்டானமானதும் பிரமம். ஷை மூவரும் சிருட்டியாதித் தொழிலி னிமித்தம் பிரமத்தினின்றுந் தோன்றிப் பிரமத்திலேயே லயமாவர். பிரமம் முப்போது முள்ளது. ஷை மூவர் ஒரு காலத்தி லுள்ளவர். அதாவது தோன்றுதற்கு முன்னரும், ஒடுங்குதற்குப் பின்னரு மில்லாதவர். இதன்படியே ஷை மூவரையும் ஒருவர்க் கொருவர் மேலானவ ரெனச் சொல்லி, ப்ரம்மஸ்வரூபமான சிவனை ஷை மூவர்க்கும் அதிஷ்டானமாகச் சொல்வார்கள் யதார்த்த ஸ்மார்த்தர்கள். உருத்திரர்க்கும் விஷ்ணுவுக்கும் அதிஷ்டானம் பிரம மானதாலும் அந்தப் பிரமமே சிவனானதாலும் அதிஷ்டானமான சிவனும் மாயாசகிதரான விஷ்ணுவும் ஒன் றென்று சொல்லுவார்கள். இது உண்மை யானதுதான். அன்றி யுக்தி அநுபவங்கட்கும் ஒத்திருக்கிறது. இதற் குவமானங் கூறி, அதன் பிரகாரம் உவமேயத்தைப் பொருத்திக் காட்டுவாம்.

ஒரே எடையுள்ள பொன்னால் கிரீட மொன்றும் சிலம்பு ஒன்றுஞ் செய்து கிரீடஞ்செய்யக் கூலி ரூபா ஆயிரமும் சிலம்பு செய்

யக் கூலி ரூபா பத்துங் கொடுத்தோமென வைத்துக் கொள்வோம். அப்படிச் செய்வித்த கிரீடத்துக்கும் சிலம்புக்கும் தாரதம்மியங்கள் எப்படியோ, அப்படியே உருத்திரனுக்கும் விஷ்ணுவுக்குமாம். இதனால் உருத்திரனுக்கும் விஷ்ணுவுக்கும் ஏற்றக் குறைச்ச லேற்படுகின்றது ; பொன்னும் சிலம்பும் எப்படி ஒன்றோ அப்படியே சிவனும் விஷ்ணுவு மொன் றென்று மேற்படுகின்றது. காரியங்களிலொன்றுக் கொன்று பேத மில்லையென்று சொல்லப்படாது; காரியத்துக்கும் காரணத்துக்கும் அபேதஞ் சொல்லலாம். இந்த அர்த்தத்தைக்கொண்டே சிவனும் விஷ்ணு மொன்றென்று ஸ்மார்த்தர்கள் சொல்லுகிறார்கள்.

ஸ்மிருதி, வேதத்தின் பொருளை நினைத்துச் செய்யப்பட்டமையால் அது காரணமாக அதற்கு ஸ்மிருதியெனப் பெயர் வந்தது. அதன் வழி நிற்போருக்கு ஸ்மார்த்தரென்று பேர்.

ஸ்மிருதி மிகு சிறந்ததென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு:—

### சூதசங்கிதை புராணவரலாற் றத்தியாயம்.

அறையுமெந்நூற்குமறை பிரதானமாகிய பெரும்பிரமாணம்
பொறைதருமிருதிபுராணங்களுபபுராணமற்றுள்ளசாத்திரங்கள்
நிறைதருமறைக்கு விரோதமாகாது நிகழ்த்திடுமெனுகுணமாகி
யுறைதருமறைக்கு விரோதமா நூல்களொருவர்க்கும் பயன்படாதனவே. (கக)

ஆதிநாள்முக்கணெம்மான் அலர்மகன்தனையுண்டாக்கி
ஓதுதன்னுருவினின்ற மறையினோடுறுபடைப்புங்
காதலினவற்குநல்கக் கறைமறைப்பொருள்விளங்க
மேதகுமருளாலன்னான்மிருதியைநிருமித்தானே. (சக)

### ஷை வேதாவிரோத முரைத்த அத்தியாயம்.

மிருதிபுராணம்சைவாகமந்தருக்கம் பாரதமுன்விளம்புநூல்கள்
கருதுறுமத்துவிதபரமே யுரைக்குஞ்சிலசுருதிகடியஞ்ஞானப்
பெருநிவிர்த்திமூலமாகவும் பேசுசிலசுருதிபிறங்காநிற்கும்
ஒருவில்விதிமூலமாகவும் அத்துவிதப்பொருளை யுரைக்குமாலோ. (அ)

### பிரமகீதை ஐதரேய உபநிடதார்த்தத்தை யுரைத்த அத்தியாயம்.

தத்தமாலானபெத்தவாதியர் தாந்தங்களிற்றுங்கடர்க்கங்கள்
கத்திடாநிற்கும் பரிசெலாஞ் சுருதிமிருதிகள் கருதியதழிக்குஞ்
சுத்தமாவிருத்தமாகுமென்றே யென்றுணிவுதொல்பிறவியிற் சுழல்வார்
சித்தமானதுபோயிவற்றிலே காதல்செய்யுமுன்செய்ததீவினையால். (சு)

காதும்வாதியர்களாலே கலியுகத்துள்ளோர்கெட்டு
வேதமோதியவாசெய்யார் மிருதிசொல்லுவதுஞ்செய்யார்
பூதியுமணியார்ஞான சாதனபூதமாக
வோதுவதொன்றுஞ்செய்யா ரொழிந்ததேயுகந்துசெய்வார். (கூ௨

### ஷை கேனோபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

*தொல்லைநல்வினையால்சுருதிநன்மிருதிசொன்னவாறணிந்தவத்தூயோர்*
*ஒல்லையில்பரமாத்துவிதவேதனத்தையுள்ளவாறுணரவேயுணர்வர்*
*நல்லவிப்பரமாத்துவிதஞானியைநாராயணனுருத்திரனு*
*மெல்லையிலெல்லாத்தேவரும்பூசித்தேத்தவும்படுமிவனென்றும்.* (௫௮)

### ஷை முண்டகோபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

*சுருதியுமிருதியுஞ் சொன்னவாறுநின்*
*றிருமையுமநித்தமென்றேதும்விட்டுநெற்*
*குருவினைவழிபடிற் கோதிலாவவன்*
*அருளிமெழிவற நின்றவப்பொருள்.* (௧௧)

### ஷை பிரகதாரணிய உபநிடதத்தில் மைத்திரேயப் பிராமணார்த்த முரைத்த அத்தியாயம்.

*வேதநூல்மிருதிபுராணம்அத்துவிதமெய்ம்மையே விளம்பமெய்த்தருக்கம்*
*சாதியாநிற்கத்தத்துவஞானத்தவருமிப்பொருளையேசார*
*ஆகியாஞ்சிவனாராயணனிங்கறைந்ததுமபேதமாயிருக்க*
*வாதியாமொருவர்க்கிதையனுதரித்தல் மாயையினுடையவல்லபமே.* (௧௪)

### திருவிளையாடற்புராணம்.

*மறைவழிமதங்கட்கெல்லாம்மறைபிரமாணம்பின்சென்*
*றறைதருமிருதியெல்லாம்அவைக்கனுகுணமாம்இன்ன*
*முறையினால்மார்த்தமென்றுமொழிவது அம்மார்த்தஞ்சேர்ந்த*
*துறைகள்வைதிகமாம்மேலாச்சொல்வதிச்சுத்தமார்க்கம்.*

இனிச் சிவாவதாரமென் றிவர் கொண்டாடும் சங்கராசாரியர் விஷ்ணு புஜங்க முதலிய நூல்கள் செய்து விஷ்ணுவை வழிபட்டது சர்வாஸங்கதம் என்றா ரன்றோ? அதற்குஞ் சமாதானஞ் சொல்வோம். விஷ்ணுவை வணங்குவதனாலே குற்றமில்லை. விஷ்ணுவைப் பர தத்துவமாகக் கொண்டு வணங்கப்படா தென்ப திவர் கருத்து. சங்கராசாரியார் விஷ்ணுவைப் பரம் பொருளாகக் கொண்டு வணங்கினா ரென்பதற்கு யாதொரு ஆதாரமு மில்லை. அவர் முறை பிறழாது துதித் திருக்கிறார். அந்த முறை பிறழாமை யென்னெனின் பிரமனைத் துதிக்குங்கால் இந்திராதி தேவர்களால் வழிபடத் தக்கவ ரென்றும், விஷ்ணுவைத் துதிக்குங்கால் பிரமன் இந்திரன் முதலானவர்களால் வழிபடத் தக்கவ ரென்றும், உருத்திரனைத் துதிக்குங்கால் விஷ்ணு பிரமன் இந்திரன் முதலியவர்களால் வழிபடத் தக்கவ ரென்றும், பிரமத்தை அல்லது பிரமத்தின் பரியாய நாமமான சிவனைத் துதிக்குங்கால் பிரம விஷ்ணு ருத்திரர்களாலே வழிபடத் தக்கவ ரென்றும் சொல்லி யிருக்கின்றமையேயாம். விஷ்ணு ஸ்துதியில் விஷ்ணுவைப் பரம் பொருளாகச் சொல்லி யிருக்கின்றாரே யென்று சங்கிக்கலாம். அப்போது அதிஷ்டான ப்ரம்மத்தைச் சேர்த்துச் சொல்வர். முன் சொன்னபடி சிலம்பும் பொன்னு மொன்றாவது

போல விஷ்ணுவும் அதிஷ்டான ப்ரம்மமு மொன்றும். அதிஷ்டானத்தைச் சேர்த்து விஷ்ணுவைப் பரத்துவமாகத் துதிக்கும்போதும் ஷெ முறை பிறழாது பிரமாதி தேவர்களால் வழிபடத் தக்கவரென்று சொல்லுகிறாரே யன்றிப் பிரம உருத்திரரால் வழிபடத் தக்கவரென்று சொல்லுகின்றாரில்லை. அம்பாள் ஸ்தோத்திரத்திலும் இத்தக் கிரமம் தவறாது. லட்சுமீ ஸ்தோத்திரத்திலும் ஸரஸ்வதி ஸ்தோத்திரத்திலும் இந்தக் கிரமம் பிசகாது.

**சூதசங்கிதை பரமவிஞ்ஞான முரைத்த அத்தியாயம்.**

*பரதத்துவஅபேதபுத்தியாலிம்மூவரையும்பரமென்*
*றுரவிற்பொலிவேதாகமமாதிகடாமுரைச்சுமுறைத்தாலுந்*
*திரிமூர்த்திகளுளுருத்திரனேதிகழ்சத்துவநற்குணதேக*
*மரியதிறத்தோன்றுதலினல்விசேடனுவான்மாதவத்தீர்.* (கக)

**ஷெ விசேடசிருட்டியுரைத்த அத்தியாயம்.**

*பரதத்துவஅபேதத்தைப்பற்றிப்பிரமன்மாயனிவர்*
*விரவுசிருட்டிசெய்வரென விளம்புவார்சவுனஞ்ஞான்றும்*
*சுரவின்முனிவீர்பரமார்த்தமாகக்கடுக்கைநறுந்தொடையோ*
*டரவும்புனைந்தபரசிவனேயாற்றுஞ்சிருட்டியென்றுணர்வீர்.* (சு)

**ஷெ ஏநவசாத்திர சங்கிரக முரைத்த அத்தியாயம்.**

*திரிமூர்த்திகளுமவருடையதிகழுமவதாரங்களுநன்*
*கரியசிவத்தியானஞ்செய்தாலுமவிரும்பரமான்ம*
*வுரியதாயவிபாகத்தினுறச்சேர்ந்தவரேயல்லாமல்*
*விரியுஞ்சிவவிபாகத்திற்சேர்ந்தோரல்லர்மெய்த்தவத்தீர்.* (சு)

இந்த அர்த்தத்தைக் கொண்டு விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் அபேதங் கூறுகின்றனரே யன்றி மற்றப்படி யன்று. பிரம விஷ்ணு ருத்திரன் சிவன் இவர்களை முறையே யொருவர்க் கொருவர் மேலென்று அவரது தோத்திரங்களினால் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. இந்தக் கிரமம் தத்துவராயர் பாடிய பாடுதுறையிலுங் காணலாம்.

## புல் பூடாதிகள் பிரம ஸ்வரூப மென்ப துண்மை யென்பது பற்றி.

'புல், பூடு, புழு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர் முதலிய எல்லாப் பிறப்பும் பிரம ஸ்வரூப மென்று கொண்டாடு மிவர் மதத்தில்' என்று கூறி யிருப்பதால் அவ்வாறு கூறுவது வேத சாஸ்திர விருத்த மென்று பூர்வபக்ஷியா ரபிப்பிராயப் படுகிறதாய்த் தெரிகின்றது. புல் முதலியவைகள் ப்ரம்ம ஸ்வரூப மெனபது இவர்க் குடம்பா டில்லை; வேறென்றே சொல்ல வேண்டும் போலும். வேறென்று சொன்னால் பிரமம் அபரி பூரண மாகின்றது. இதற்கு யாது கூறுவர்? புல் முதலியவற்றில் பிரமம் நிறைந்திருக்கிற தென்னின் இதற் குவமானம் வேண்டும். குடத்தி னிறையச் சல மிருப்பதுபோ லென்னின் குட மானது சுற்றிலு முள்ள ஓடு தவிர மற்ற

திரன், உண்டாயிருக்கின்றனவும் இனி யுண்டாகப்போகின்றனவுமாகிய எல்லாம் அவரே. சாசுவதமா யுள்ளவரும் அவரே. அவரை யறிந்து மிருத்துவைத் தாண்டுகிறுன். முத்திக்கு வேறு வழி யில்லை.

### யசுர்வேதம் வராகோபநிஷத்.

சிவனே குரு, சிவனே தேவன், சிவனே வேதம், சிவனே பிரபு, சிவனே நான், சிவனே சகலமும், சிவனைக் காட்டிலும் வேறொன்றுமில்லை.

### சூதசங்கிதை

### ஞானி பணிவிடைப்பேறு சொற்ற அத்தியாயம்.

வானேவளியேயொளியேயறலேமண்ணேமற்
றூனேயுயிரேகதிரேமதியென்றேரெண்மெய்
நானேயுடையேனென்பாய்மறையுநவில்கிற்கு
மானேறுடையாயடியேன்வேறேவருளாயே. (௯௪)

### ஷ பிரமன் முன்னோர் தில்லையிறைற்று ஞானம்பெற்ற அத்தியாயம்.

உலகெலாமுருவாகியபுருடனுக்குளமா
யிலகுறுந்தரிசனஞ்செயின்முத்தியீகுவதா
யலகில்பாவமும்போக்கிநல்லருளளிப்பதுவாய்க்
குலவுபோகமும்வேண்டுவோர்க்கருள்குணத்ததுவாய். (௫௭)

### ஷ மானதயாக முரைத்த அத்தியாயம் .

விதியுநிடேதமுமருவுவித்தையுமவித்தையுமெய்ச்சபலவாதந்
துதியறாகிட்பலவாதமிருக்கிறதின்றெனச்சொல்விவகாரத்திற்குப்
பதிதருகோசரமான சகலமுமொண்பரசிவசொரூபமென்றே
கதிமருவுதியானஞ் செய்திடல்வேண்டுங்கற்றுயர்ந்தகமையின்மிக்கீர். (௪௬)

### ஷ தைத்திரிய உபநிடத தாற்பரிய முரைத்த அத்தியாயம்.

பிரமன்முதற்றுபரமீறுப்பேசாநின்றவுலகமெலாம்
பரவுமந்தப்பரமசிவனே பண்பாரந்தப்பரசிவன்றன்
சொரூபஞானமுள்ளோனே தூலங்குசீவன்முத்தனுங்
கருமமாதிகளாற்சீவன்முத்தனுகான்கடைப்பிடிமின். (அ)

### கூர்மபுராணம்

### விசுவரூப அத்தியாயம்.

அணுவாமெவைக்குமணுவாயிருத்தியகிலங்கண்மூடியொளிருந்
தணியாதவண்டவுருவாயிருத்திருபஞ்சபூதமதுவான்
மணியாமருக்கனுயர்சோமயாசிவடிவாயிருத்திமறையுங்
கணியாதிருத்திநினையார்கணிப்பர்களைகண்ணதாயபெரியோய். (உஉ)

### வாயுசங்கிதை

### பாசிவப்பிரபாவ முரைத்த அத்தியாயம்.

நிற்பனநடப்பனயாவுநேர்ந்திடிற்
பொற்புறுசடையவனுருவம்போலுமா
லற்புதப்படவிவ்வாறமர்வனென்றதைச்
சொற்படுபசுக்கடாந்தோன்றவோர்ந்திடா. (க)

## ஷ தோத்திரமுரைத்த அத்தியாயம்.

சகத்தினுக்கன்னையாகியே யுறைவோய்சகத்துருவாகியே யிருப்போய்
மிகத்திகழ்ந்திலங்குவடிவினையுளத்துள்விளையுமஞ்ஞானத்தையறுப்போய்
வகுத்திடுசமயம்யாவையுமுடையோய்வயங்கியகுணங்களையுடையோய்
தகைப்படுமேலோராவியுளுறைவோய்தழைத்துநீவென்றிடவேண்டும். (ச)

## மனு ஸ்மிருதி பிருதுவாக்கியம் தத்துவோபதேசம்.

கஉஅ. கண்ணுக்குத் தெரிகின்றனவாயும், தெரியாதனவாயுமிருக்கிற எல்லாப் பதார்த்தமும் பரமாத்துமாவினிடத்தில் வாசஞ்செய்கிறதாய் யோக தியானத்தால் பார்த்து வேறிடத்தில் மனம் வைக்காமல் பிரம சாக்ஷாத்காரஞ் செய்கிறவன் அதர்மத்தில் மனதை வைக்கமாட்டான். ஏனென்றால், எல்லாம் பிரம சொரூபமென்று அறிந்திருக்கையால் அவனுக்குச் சத்துரு மித்திரர்களில்லாமையால் இராகத்துவேஷங்களே நேரிடாதனவல்லவா?

## திருவாசகம்.

ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க.

அருவமுமுருவமு மானாய்போற்றி.

வானாகிமண்ணாகிவளியாகியொளியாகி
யூனாகியுயிராகி யுண்மையுமாயின்மையுமாய்.

நிரந்த ஆகாயம் நீர்நிலம்தீகாலாய்
அவையல்லவாய் ஆங்கேகரந்த தோர்உருவே.

பூதங்களோர்ந்தாகிப் புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப் பேதமிலாப்பெருமையனே.

கூறும்நாவேமுதலாகக் கூறுங்கரணமெல்லாம்நீ
தேறும்வகைநீதிகைப்புநீ தீமைநன்மைமுழுதும் நீ
வேறோர்பரிசிங்கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்கின்.

அட்டமூர்த்தியழகன்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்

வானாய்நிலனாய்கடலானாய்மலையானாய்.

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்றபுலனே.

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

மாயவன்சேயவன்வெள்ளியவன்விடஞ்சேருமைமிடற்ற
னாயவனாகியோரந்தரமும்மவனென்றுவரையாகந்
தீயவனீரவன்பூமியவன்திருநாரையூர்தன்னின்
மேயவனைத்தொழுவாரவர்மேல்வினையாயினவீடுமே.

குற்றநீகுணங்கள்நீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்தும்நீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

அண்டமாய்ஆதியாய் அருமறையோடைம்பூதப்
பிண்டமாய்.
ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை.
நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய்நிறைகாலாயிவையிற்றினியமமாகிப்
பாதியாய்ஒன்றாகியிரண்டாய்மூன்றாய்ப்பரமாணுவாய்.
ஐம்பெரும்பூதங்களாய்.
ஓசையொலியெல்லாம்ஆனாய்நீயே.
எல்லாவுலகமுமானாய்நீயே.
அல்லாய்ப்பகலானாய்நீயே.
ஒன்றாயுலகனைத்துமானார்தாமே.
உருமூன்றாயுணர்வின்கணொன்றானானை.
மூவன்காண்மூவர்க்குமுதலானான்காண்.

இருநிலனாய்த்தீயாகி நீருமாகியியமானனாய் எறிபுங்காற்றாகி, யருநிலைய திங்களாய் நாயிறாகி யாகாசமாயட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவும் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையாயின்றாகி நாளையாகி நிமிர்புன்சடையடிகணின்றவாறே.

மாலாகிநான்முகனாய் மாபூதமாகி.

இப்பொன் நீ இம்மணி நீ யிம்முத்துநீயிறைவனீயே
யேறூர்ந்தசெல்வன்நீயே
தானலாதுலகமில்லைசகமிலாதடிமையில்லை.

## திருமந்திரம்.

தானேதிசையொடுதேவருமாய்நிற்குந்
தானேயுடலுந்தத்துவமாய்நிற்குந்
தானேகடல்மலையாதியுமாய்நிற்கும்
தானேயுலகில்தலைவனுமாமே.

உடலாயுயிராயுலகமதாகிக்
கடலாய்க்கார்முகினீர்பொழிவானாய்
இடையாயுலப்பிலியெங்குந்தானாகி
யடையார்பெருவிழியண்ணல்நின்றானே.

## இலிங்கபுராணம் பசுபதிபாசமுரைத்த அத்தியாயம்.

பதியாகியுறைபவனேமாயையெனும்பாசத்தாற்பசுக்களாகி
வதியாநிற்பனஎவையுங்கட்டிடுவன்முகைவிரிநாண்மலர்கடூவித்
துதியாமெய்ஞ்ஞானத்தால்தொழுதிடில்அத்தொடர்ச்சியினையகற்றித்தூய
துதிமேவியமர்ந்துறையக்கண்ணிரங்கிக்கருணைபொழிந்திடுவன்றானே. (௫)

## ஷை நான்முகனு மாயனுந் துதித்த அத்தியாயம்.

நினைப்புமாய்மறப்புமாகிநினைவினுக்கெட்டாதொன்றா
அனைத்துமாய்நின்றாய்போற்றியருமறைக்கொழுந்தே ற்றி
கனைத்துவண்டிமிரவிள்ளுங்கடுக்கையங்கண்ணியோடு
புனிற்றுவெண்டிங்கட்கண்ணிபுனைந்தசெஞ்சடையா யாற்றி (௨)

ஷ சத்தசத்துமுதலானவை யுரைத்த அத்தியாயம்.

பன்னுகின்றசத்தாகியசத்தாய்அவற்றினபதியாகி
மன்னியுறைதலாற்சிவனைசதசத்பதியாமெனவுரைப்பார்
முன்னிலவியத்தானறியேயுறைந்தவதனுன்முதுமறைதேர்
நன்னுமுனிவரவ்வியத்தரென்றுநாடிநவின்றிடுவோர். (உ)

புல், பூடு, விலங்கு, பறவை, மனிதர்களைப் பிரமஸ்வரூபமென்று சொன்னால் அவைகளெல்லாம் சட மாயினவே; அன்றி அவ் வுயிர்கள் படும் ஜனன மரண முதலியவற்றால் உண்டாகுந் துக்கமெல்லாம் அப்பிரமத்தைச் சாருமே என்று சங்கை பண்ணக் கூடும். அதையும் பரிகரிக்கிறோம். சொப்பன வுலகு சடம்; அது சித்தாகிய மனத்தி னின்றுந் தோன்றுகின்றது; அன்றி அச்சொப்பன வுலகினுள்ள பல வுயிர்கள் படும் சுக துக்கங்கள் அம்மனத்தைத் தொடுவதில்லை. சொப்பன வுலகங் காரியம்; மனம் காரணம். காரிய முண்டாதற் கேதுவான சக்தி காரணத்தி னிட மிருப்ப தியற்கை; கட சக்தி மண்ணின்கண்ணும் படசத்தி நூலின்கண்ணு மிருப்பதுபோல. அந்தச் சத்தி யிரு வகை: பின்னு சத்தி யென்றும், அபின்னு சத்தி யென்றுமாம். மனத்தினிடத்து அப்படிப்பட்ட பின்னு சத்தி யிருக்கிறது. அந்தச்சத்தியின் காரியந்தான் சொப்பனவுலகு. பின்னு சத்தியின் காரிய மாகலின், அச்சொப்பன வுலகி னுள்ள வுயிர்கள் படும் துக்க சுகங்கள் மனத்திற்குப் படுவ தில்லை அப்படியே சிவ னிடத்துப் பின்னு சத்தி யென ஓர் சத்தி யுள்ளது. அது காரியமாய்க் காரியப் பொருள்களைப் பின்ன மாகவே தோற்று விக்கும். அப்படித் தோற்று விப்பதால் இச் சாக்கிரத்தி னுள்ள வுயிர்கள் அநுபவிக்கும் துக்கசுகங்கள் சிவத்தைத் தொடுவதில்லை. மாயையானது சிவத்தின்கண் அவாந்தரமாயுள்ளது. அது பிரமத்தைத்தவிர இல்லவுமில்லை; அதனால் ஒருவாறு அபேதஞ் சொல்லவும் படுகின்றது. அப்படியிருந்தாலும் பிரமத்துக்கு விரோதமான பொருள்களைப் பேதமாக வுண்டுபண்ணும் சத்தியைப் பெற்றது.

சூதசங்கிதை பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயம்.

முன்னுமவித்தையாற்பசுபேதமுமொய்வலியமாயையாற்
பன்னுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டதுவான்
மன்னுதேகேந்திரியாதிவாசனுபேதத்தாலே
பின்னுபேதமாமவித்தைபேசுபசுபேதத்திற்கும். (சு)

குணங்களுடையவாசனுபேதத்தாற்கொள்பேதமா
யிணங்குவிருக்குமாயையியைபரதத்துவபேதத்திற்கு
முணங்கலறுகாரணமாகுமொழியாப்பவஞ்சமயக்கொழியப்
பிணங்கலறுநன்னெறிநின்றபெரியீர்காண்மும்மூர்த்திகளுள். (எ)

ஷ வேதப்பிரமாணிய விசார முரைத்த அத்தியாயம்.

நோயவுடதங்கள்போலப்பாத்தியபாதகபாவத்தாற்சைத்தியமு
மாயதோர்சித்துநான்மறையதனிலறைதரப்படும்பரசிவத்தின்

வாய்சக்கியகாரியஞ்செய்யவல்லமாயையான் மாமறைப்பொருளிற்
பாயவிரோதமாகவும்விரோதமாகவுந்தோன் றுமாற்பனவீர். (௧௨)

## ௸ விசேஷசிருட்டியுரைத்த அத்தியாயம்.

கருத்தாவாயபரசிவன்றன்மாயையொடுவேறறக்கலப்புற்
றிருப்பானெனினும்பூருவகற்பத்தினியைவாசனையானுங்
கருச்சாய்ந்துயர்ந்தீர்செறிகாலகருமவனுருணமதாயுந்
தருக்காநின்றமாயைக்குந்தனக்கும்பேதங்கற்பிப்பான். (௨)

அறையாநிற்குங்கற்பிதமானதுவாத்துவமல்லாமையாற்
குறைதீர்ந்தீர்கற்பிதபேதங்கூறுஅபேதமயாதியா
திறைபின்பூருவேட்சணவாசனையாவீட்சிதாவுமாய்
மறைதன்மாயையொடுகூடிமாயாகுணபேதங்களால். (௩)

திரிமூர்த்திகளைப்படைத்தவர்க்குந்திகழுந்தரியாமியாயிருப்பான்
றரிசிலவரும்பரதத்துவபேதத்தான்முத்தொழில்செய்வா
ருரியவிசேடரூபத்தொவ்வொருவரொவ்வோர்காரியத்தைப்
பிரியமருவச்செய்வார்கள்பேணியுணர்மின்மாதவத்தீர். (௪)

தூலபூதங்களண்டபேதங்கள்சொற்றிடுமுலகபேதங்கள்
சீலமார்சீவதேகபேதங்கள்செப்புறுசூக்குமபூதத்
தேலமுன்கற்பம்போலவுண்டாகுமிசைத்திடுசீவர்கட்கம்மா
பாலபோகார்த்தமாகவனேகபௌதிகங்களுமுண்டாமாதோ. (௧௧)

நிருமலசிவன்றன்மாயையாற்கனப்போனிருமிக்கப்பட்டனவெல்லா
மருவுகாரியங்காரணத்திற்குவேறாகாமையின்மாயைரூபந்தான்
பெருகுமாயையுமற்றதிட்டானமாகும்பிரமத்தின்வேறானதன்று
குருபரனருள்கைக்கொண்டுமுக்குறும்புங்கொன்றுயர்ந்தோங்கியமுனிவீர்௧௨

தத்துவஞானத்தாற்பரசிவமேசகமாயைசீவன்முன்னை
கொத்துறுசொரூபமாகவேதெரியுங்குறித்திடின்வேறொன்றுமிலைச்ச
கத்துவேறாகப்பார்ப்பவன்பந்தக்கடுந்தளைநீங்குறானென்றும்
பொத்துமாமலத்தினீங்கியின்னருளைப்புணர்ந்தின்பமார்தருமுனிவீர். (௧௩)

ஆதலாலளவைதருக்கமெய்க்குரவனருண்மொழியனுபவஞ்சிறிது
மேதமிலாதசிவப்பிரசாதமிவைகளினுலுறவெல்லா
மேதகுசிவமேயென்பதுதெரிந்துமேவுகேவலமதாயிருப்போன்
சாதலின்முத்தியடைவனலென்றுசாற்றிடுமாமறையனைத்தும். (௧௪)

சகமெலாஞ்சிவமேயெனத்தெரிகின்றதண்ணியஞானமுஞ்சிவமென்
றகமில்கேவலநிற்சலமரீஇயிருக்குமவனுக்குநிட்டைதமேசித்தி
தகவுறுமசித்தியிவற்றொன்றுமில்லைசகமிலையஞ்ஞானமில்லை
யுகவிலாஞானமில்லைமற்றொன்றுமில்லையென்பாருணர்வுடையோர். (௧௫)

இந்தப் பிரமாணங்களால் மாயையினது உண்மையை யுணர்ந்து கொள்ளலாம். சொப்பன வுலகு மனத்தைத் தவிரவு மில்லை; மனத்துக்குச் சம்பந்தமு மில்லை. ஆதலால் மனமே சொப்பன வுலகென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. கயிற்றைத் தவிரப் பாம்பு மில்லை; பாம்பு கயிறுமல்ல. விவர்த்த உபாதான காரண காரியங்க ளெல்லா மிப்படித்தானிருக்கும். இச்சாக்கிரவுலகான காரியத்துக்குச் சிவன்

விவர்த் தோபாதான காரணம். சொப்பன வுலகி லுள்ள புல், பூடு முதலியவைகளெல்லாம் மனத்தைத் தவிர எப்படி யில்லையோ, அப் பொருள்களெல்லாம் மனந்தானென்று எப்படிச் சொல்லப்படுகின்ற னவோ, அப்படியே சிவனைத் தவிர வுலகு இல்லாமையால் சிவனே புல், பூடாதிக ளெனச் சொல்லப் படுகின்றான். கடாதிக ளெல்லாம் மண் சொரூபமென் றெப்படிச் சொல்லப் படுகின்றனவோ, அப்படி யே இச்சாக்கிரவுலகிலுள்ள புல், பூடு, மரம் பறவை, மனிதர், தேவர் முதலிய எல்லாப்பிறப்பும் பிரம ஸ்வரூபமென்று சொல்லப்படுகின் றது. இது நியாயமே. இதற்குச் சுருதி யுக்தி யனுபவங்களும் காட் டினோம். இதற்கு மாறாகப் பேசுபவர்கள் சுருதி யுக்தி யனுபவ ங்களுக்கு விரோதமாகப் பேசும் தான் றோன்றித் தம்பிரான்களாம். இவர், துரிய சிவனுக்குப் பிறப் பில்லை யென்று கூறி, அதற்கு மேற்கோளுங் காட்டினார். துரியசிவனுக்குப் பிறப்புக் கூறுபவரிவரே யன்றி நாமன்று. பிறப் பென்பது ஒன்றி னின்றும் தோன்றுவது. இவர் துரிய சிவ னிடத்தி னின்றும் சிவ னடியார் தோன்றியதாகக் கூறுகின்றார். ஆதலால் இவரே குற்றவாளி. நாம் துரியசிவன், சிவ னடியாராகவாவது சங்கராசாரியராகவாவது தோன்றியதாய்க் கூற வில்லை. உருத்திர மூர்த்தியின் அம்சமே பிறந்ததாகக் கூறினோம். உருத்திர மூர்த்தி பிறந்தார் என்பதற்குப் பிரமாணமுங் காட்டி னோம். அப்படிப் பிறந்தாலும் அவர்க்குப் பிறப்புத் துன்ப மில்லை யென்றும் மாயாசம்பந்த மில்லையென்றும் சிவகாருண்யத்தால் பிற ந்தனரென்றுங் கூறினோம்.

## உவமானஆபாசம்.

இவர், "பிரமம், மாயை ஈஸ்வரன், கூடஸ்தன், அவித்தை, சீவன் முதலிய விவிதப் பொருள்கள் விர்த்தியாக இடந் தேடித் தமது ஏக வாதத்துக் கிடர் தேடிக் கொண்டது (பஞ்ச பாண்டவ ரென் றால் அறியேனோ? கட்டில் கால்போல வென்று வாயாற் கூறி மூன்று விரல்களை விரித்து, இரண்டு விரல்களைக் காட்டி, ஒரு விர லால் கீழே கோடிழுத்தவன் கதையோடொனே) இனமாயதென்க." என்று கூறி, கற்றவர் நகைக்க உவமான வுவமேயப் பொருத்தந் தெரியாதவ ரென்று தம்மைத்தாமே வெளிப் படையாய்க் காட்டிக் கொண்ட விந்தையை யெடுத்து விளம்புவாம். அத்வைத மதத்தில் பிரம முதலியவைகளை விவிதப் பொருள்கள் என்று, அத்துவித சித் தாந்தமுணராது ஆரம்பமாய்ப் படிப்பவரில் சிலர் சொல்லுவார்கள். இவர், அத்துவிதிகள் பிரமம் ஒன்றே என்று சொல்லுவதாய்ப் பல விடங்களி லெழுதியிருக்கிறார். இங்குப் பலபொருள்களென்று சொல் லுகிறார். இரண்டிலொன்று புத்திமருட்சியால் சொன்னதாகவேண் டும். அத்துவித மதத்தில் பிரமம் ஒன்றே முக்காலத்து முள்ளசத்துப் பொருள். இவர் கூறிய பஞ்ச பாண்டவர், கட்டில் கால், மூன்று

விரல், இரண்டுவிரல், ஒருவிரல், ஒருகோடு எல்லாம் சத்துத்திருட்டாந்தம். பஞ்சபாண்டவர் ஐவரும் ஐந்து பொருள்கள். அந்த ஐந்து பொருள்களை நாலென்றாவது மூன்றென்றாவது இரண்டென்றாவது ஒன்றென்றாவது கூறுவது எவ்வளவு பேதைமையோ, அவ்வளவு பேதைமை, சத்தான ஒரு பிரமத்தைப் பல சத்துப் பொருளாக வைத்து, உவமானங்கூறிக் குற்றங் கூறுவோரிடத்திருக்கிறது. "விரிக்கிற் பெருகும்" என்றுங் கூறுகின்றார். அதை விரித்தால் அதனது ஆபாசந்தான் விரியும் தருமநந்தனர் முதலியவர் அயோக்கியரென்றும், துரியோதனாதியர் யோக்கியரென்றுங் கூறி, அதை விரித்தால் எவ்வளவு மணம் பெறுமோ அவ்வளவு மணந்தான் பெறும் அதை விரித்தால்.

## ஆன்மாவே பிரமம்.

"இவர் மதத்தில் ஆன்மா வாகிய தானே பிரம மென்றும், தன்னிடத்தில் ஜக ஜீவ பரங்கள் கற்பித மென்றும் சொல்லும் வழக்குண்மையால், தன்னை நோக்க அச் சக ஜீவ பரங்கள் இழிந்தனவாம். இங்ஙனமாக, பரம் அல்லது ஈசனது அவதாரமாக (தன்னைத் தவிர வஸ்து வில்லை யென்று சாதித்த) சங்கராசாரியரை நமதன்பர் கூறியது அச் சங்கராசாரியாரைத் தூஷித்த தாகவே முடியும்" என்று தமது விசாரணை யின்மையைக் கூறி, விசாரணை யற்ற ஏனையோரை ஏமாற்றப் பார்க்கிறார். ஆன்மா பிரம மென்பதற்குச் சந்தேக மில்லை. ஆன்மா என்பது இவ்விடத்துப் பர மான்மாவை; ஜீவான்மாவை அன்று. ஜீவன் பிரதிபிம்பனாதலால் சத்துப் போலியே யன்றிச் சத்தன்று; பரமான்மா வொன்றே சத்து. இரண்டுஞ் சத்தென்று கூறுவதிவர்மதம். இது சுருதி யுக்தி அநுபவங்கட்கு முற்றும் விரோதம். முன்பு யுக்தி அநுபவங்கட்கு விரோதமெனக் காட்டி, பின்பு சுருதி முதலிய பதினான்கு வித்தைகட்கும் விரோதமாதலைத் தெரிவிப்பாம். இவர்மதத்தில் பரமான்மாவுக்குச்சிவனென்றும், சீவான்மாவுக்குஆன்மா வென்றும் சொல்லப்படுகின்றன; இவ் விரண்டும் வியாபக மென்றுஞ் சொல்லப்படுகின்றன. இரண்டு வியாபகப்பொருள் ஒருஇடத்திலெப்படி யிருக்கும்? ஒன்றுக்கு மற்றொன்று மேலே யிருக்கிறதா? கீழே யிருக்கிறதா? பக்கத்தி லிருக்கிறதா? எங்கே யிருக்கிற தென்று சொன்னாலும் சரி; இரண்டுங் கண்டப் பொருளாய் விடும். ஆன்மாவும் அகண்டப் பொரு ளென்று சொல்லி, அத்துடனே சிவனையும் அகண்டப் பொருளென்று சொன்னால் எப்படிப் பொருந்தும்? சிவனைப் பரி பூரணப் பொருளென்று சொல்லி, ஆன்மாவைக் கண்டப் பொரு ளென்று சொன்னாலும் பொருந்தாதே. பரிபூரணமான பொருளில் ஏகதேசமாகவாவ தொரு பொரு ளெப்படி யிருக்கச் சாத்தியமாகும்? ஆதலால் சிவன் எவ்வளவு சத்தோ அவ்வளவு சத்தாகச் சீவான்மாவைச் சொல்லுதல் கூடாது. சொல்

வின் சிவனுக்கு அபரி பூரண தோஷ முண்டாம். இந்தத் தோஷ மில்லாதபடி சொல்லுகின்றோம். எங்கும் பரிபூரணமாய் நீக்கமின்றி யிருப்பது பிரமம் அந்தப் பிரமத்தை ஆன்மா வென்றும், பர மான்மா வென்றும், சிவனென்றும் இன்னும் பல பேராகவுஞ் சொல் லுகின்றன வேத முதலிய நூல்கள். அப்படிப்பட்ட சிவ னிடத்துள்ள மாயையின் சத்துவ குணத்தில் பிரமா, விஷ்ணு, உருத்திரர்கள் பிரதி பிம்பிக்கின்றார்கள் ; ரஜோ குணத்தில் சீவர்கள் பிரதி பிம்பிக் கின்றார்கள்; தமோ குணத்தி லிருந்து அந்தக் கரண ஞானேந்திரிய கருமேந்திரிய வாயு பஞ்சபூத பௌதிகங்க ளுண்டாகின்றன. சீவர் கள் ஈசுவரனை யுபாசித்து, உபாசித்த உபாசனை பலத்தால் பிரம ஞானம் பெற்றுப் பிரமமாய் அல்லது சிவமாய் விளங்குகின்றார்கள். அஞ்ஞான காலத்தில் நானென்பதற்குப் பொருள் சீவனும் அஞ் ஞான நீங்கிய ஞான தசையில் நானென்பதற்குப் பொருள் பிரமம் அல்லது சிவனுமு மாகின்றன. அஞ்ஞான தசையில் அதாவது சீவன் நானாக விளங்குங் காலத்துச் சிவன் நானென்றாவது பிரமம் நானென்றாவது கூறுதல் கூடாது. ஆனால் ஞான சாதனத்தில் நான் சிவன், நான் பிரமம் என்றே அநுஷ்டானஞ் செய்ய வேண்டியது. இதுவே வேதாகம புராண இதிகாசங்களின் கருத்து. அப்படிப் பட்ட பிரம நிலையில் அல்லது சிவ நிலையில் சரீர இந்திரிய அந்தக் கரண ஜீவர்களும் ஞாதுரு ஞான ஞேயங்களும் சாக்கிர சொப்பன சுழுப்திகளு மில்லை. அது தான் துரியாதீத நிலை. அந்த நிலையி லுள்ள பொருள் பிரமமென்றும், சிவனென்றும், ஆன்மா வென்றும் சொல்லப் படுகின்றது. (ஆன்மா வென்பதற்கு இவ்விடத்தில் பர மான்மா வென்றே கொள்ள வேண்டும்; சீவான்மா வென்று கொள்ள ப்படாது. சுருதி முதலிய கிரந்தங்களிற் சிவ னென்றும், பிரம மென்றும் சொல்லுகிற விடங்களில் ஆன்மா வென்றுங் கூறி யிருக் கிறதைப் பிரமாண மூலமாகவுங் காட்டுகிறோம்.) அப்படிப் பட்ட பிரமம் அல்லது சிவம் அல்லது ஆத்மா வானது உலகிலுள்ள எல் லாப் பொருள்களுக்கும் ஜீவர்களுக்கும் பிரம விஷ்ணு உருத்திரர்க ளுக்கும் அதிஷ்டானமாய் விளங்குகின்றது. உலகி லுள்ள எந்தப் பொருள்களுக்கும் மூலமாயுள்ளது எப்படி அணுவோ, அந்த அணு க்களுக்கு மூலமா யுள்ளது எப்படி ஆகாயமோ, வஸ்திரங்களுக்கு மூலமா யுள்ளது எப்படிப் பஞ்சோ, பஞ்சுக்கு மூலமாயுள்ளது எப் படி அணுவோ, அணுக்களுக்கு மூலமா யுள்ளது எப்படி ஆகாய மோ, சொப்பனப் பிரபஞ்சத்திற்கு மூலமா யுள்ளது எப்படி மன மோ, அப்படியே சீவர்கள், பிரம விஷ்ணு உருத்திரர், உலகம் இவர் களுக்கு மூலமா யுள்ள பொருள் ஷை பிரமம் அல்லது சிவம் அல் லது ஆன்மாவாம். அந்தப் பிரமப் பொருள்தான் தத்துவ மசி லட்சி யார்த்தத்தில் நிலைத்தது. ஜீவர்களானாலும் சரி, ஈசுவரர்களானாலும் சரி, உலகமானாலும்சரி, கடைசிமுடிவில் அந்தப் பொருளில் இலய

மாக வேண்டுமே. அதுதான் மிஞ்சின பொருள். இப்படி யிருக்க, அந்த ஆன்மாவென்னும் பொருளை ஜீவனைப்போல வேதாந்த சாஸ்திரங்களில் பரிச்சிய மில்லாதவர் நினைக்கும்படி காட்டி, பிரமமென்றும் சிவனென்றும் சொல்லாமல் ஆன்மாவென்னுஞ் சொல்லை மாத்திர மெடுத்துக்கொண்டு, அந்த ஆன்மாவில் ஜகஜீவபரங்கள் கற்பிதமென்று திட்டி, ஆன்மாவென்னும் பொருளைத் தானாகவைத்து, தன்னை விட ஜக சீவ பரங்க ளிழிந்தனவென்று கூறி ஏமாற்றுகின்றார். தான் என்று கொள்ளவேண்டியது துரியாதீத நிலையில் பிரமமே. அந்தப் பிரமத்துக்கு ஆன்மா வென்றும் சிவனென்றும் பேர்தான். அப்படிப்பட்ட நிலையிலேதான் அத்துவிதஞானவான்களெல்லாமிருந்தார்கள். அப்படிப்பட்ட பிரம நிலை, அல்லது சிவ நிலை, அல்லது ஆன்ம நிலை யானது நானென்பதற்கும் அவனென்பதற்கும் அவள் அது என்பதற்கும் நீ என்பதற்கும் பொருளாய் நிற்பது. இந்தத்தன்மை முன்னிலை படர்க்கை யிம்மூன்றுகளைக் கடந்திருப்பதும் அதுதான். உலகிலுள்ள எந்தப்பொருளை விசாரித்தாலும் கடைசியில் முடிவாய் நிற்பது அந்தப் பொருள்தான். நான் என்பதை மாத்திர மிவர் எடுத்துச் சொன்னாரேயன்றி முன்னிலைபடர்க்கைகளைச் சொல்லவில்லை; மூன்றிடத்திற்கும் விலட்சணமா யிருப்பதையுஞ் சொல்ல வில்லை. மூன்றிடத்திற்கு விலட்சணமான பொருளை நானென்றும் நீ யென்றும் அவ னென்றுஞ் சொல்வது கற்பனை. இவர், பிறரைத் தூஷிக்கும் நிமித்தம் பல பூர்வபக்ஷங்களி லொன்றை யெடுத்துக் கூறுகிறார். சிவன், அல்லது ஆன்மா, அல்லது பிரமமான பொருள் ஒன்றே முக்காலத்து முள்ள பரி பூரண சத்துப் பொருள் ; மற்றப்படி ஜக ஜீவ பரங் (பிர்ம விஷ்ணு உருத்திரர்) கள் சிருட்டி காலத்தில் தோன்றிச் சங்கார காலத்தில் இலயமாகின்ற வோர் காலப்பொருள்கள். பிரமத்தை நோக்க அவை சத்துப்போலிக் கற்பிதப்பொருள்கள்தான். இவைகளையும் சத்தாகச் சொன்னாலென்னையெனின் பிரமத்தைக் கண்டப் பொருளாகச் சொல்லி, அவைகளுக்கு உற்பத்தி ஸ்தானம் பிரமமல்லாத வேறுபொருளைச் சொன்னால் சொல்லலாம். இப்படிச் சொல்லாவிடில் நாம் சொன்னபடி தான் சொல்ல வேண்டும். சங்கராசாரியார் தன்னைத் தவிர வஸ்து வில்லையென்று சொன்னது பிரமத்தைத் தவிர வஸ்து வில்லை யென்று பொருள்கொள்ளத் தெரியாமல், உலகில் காணப்படும் சரீர இந்திரியாதிகளை, தான் என்பதற்குப் பொருளாக வைத்துக்கொண்டு இகழ்ந்தது அவ ரியற்கையேயாம். ஆதலால் 'சங்கராசாரியரைத் தூஷித்ததாகவே முடியும்' என்று கூறிய கூற்றுக் கூற்றாகவே முடிந்ததென்க. இவைகளுக்குப் பிரமாணங்கள் வருமாறு:—

### யசுர்வேதத்தில் கைவல்யோபநிஷத்.

"சர்வ ஸ்வரூபியாயும் இந்தப் பிரபஞ்சத்திற்கு முக்கிய இருப் பிடமாயும் சூட்சுமத்திலும் அதிசூட்சுமமாயும் நித்தியமாயு மிருக்கிற பரப்பிரமமெதுவோ

அது நீ; நீயே அது. ஜாக்கிரசுவப்நசுஷுப்திமுதலியவைகளில் எந்தப்பிரபஞ்சம் விளங்கிக் கொண்டிருக்கிறதோ அது பிரமமே. அது நானே யென் றறிந்தால் சகல பந்தத்திலிருந்தும் விடுபடுகிறான்.

சாட்சியாயும் சின்மாத்திரமாயு மிருக்கிற சதாசிவன் நான்தான் என்னி டத்திலிருந்தே சகலமு முண்டாகின்றன; என்னிடத்திலேயே சகலமு மிருக் கின்றன, என்னிடத்திலேயே சகலமும் லய மடைகின்றன. அந்த அத்துவய மான பிரமம் நானே.

☞ (நான் சிவன் என்ற விடத்தில் சங்கற்ப விகற்பமும் ஜீவனும் அவ ஸ்தாத்திரயங்களும் ஞாதுரு ஞான ஞேயங்களு மில்லை. அது சிவன் மாத்திர மாய் நிற்கும் துரியாதீத நிலை.)

### யசுர்வேதத்தில் அமிர்தபிந்தூபநிஷத்.

அந்தப்பிரமமே 'நான்' என்று அறிந்தால் பிரமமே யாகிறான்...அந்தப் பிரமமே நான் என்று நினைக்கப்பட்டிருக்கிறது.

### ஸாமவேதத்தில் மைத்திராயண்ணி யுபநிஷத்

### ௫ வது பிரபாடகம் ௩௫.

எப்போது முண்டாக்கப்பட்ட ஜீவாத்துமாக்கள் பிரம்மத்தினுடைய தேஜஸின் பிரதிபிம்பமாக விருக்கிறார்கள்.

### மைத்திரேயோபநிஷத் ௨-வது அத்தியாயம்.

மேலும் பகவானுன மைத்திரேயர் கைலாசத்திற்குப்புறப்பட்டு அவ்விடஞ் சென்று, ஒ பகவானே! பரம தத்துவ ரகசியத்தைச் சொல்லுமென்று கேட் டார். மகாதேவர்சொன்னதாவது:—தேகமானது தேவாலயமென்று சொல் லப்படுகிறது; அதிலிருக்கிற ஜீவனனவன் சிவனே; அஞ்ஞானமாகிய நிர்மாலி யத்தைத் தள்ளி (ஸோஹம்) 'அவன் நான்' என்கிற பாவனையினுலே பூஜிக்க வேண்டியது. ☞ (ஜீவனானவன் பிரதிபிம்பன் என முன் சொல்லப்பட்டிரு க்கிறது. அப்படி யிருக்க எப்படி ஜீவன் பிரம மாகலா மென்று சங்கிக்கலாம். பாம்பு கயிறாகத் தோற்றுவதில் பாம்பு என்கிற மயக்கம் போனால் இருப்பது கயிறுதான். அப்படியே துரியாதீத நிலையில் ஜீவன் நஷ்டமாய்ப் போகிறான். போனால் உள்ளது சிவனே தான். இந்த அர்த்தத்தின் பேரில் ஜீவன் சிவனாகி றான் என்று சொல்லப்படுகிறது.)

### யஜுர்வேதத்தில் ஸ்கந்தோபநிஷத்.

அவனே பரமேசுரன், அவனே பிரமம், அந்தப் பிரமந்தான் நான். சமு சயமில்லை. ஜீவனே சிவன்; சிவனேஜீவன். அந்த ஜீவன் சிவனே தான். உமி யினால் கட்டுப் பட்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது. உமியற்றதானால் அது அரிசியாகிறது. அப்படித்தான் ஜீவனுங் கட்டுப்பட்டிருக்கிறான். கரும நாசமா னால் எப்போதும் (மங்களசுவரூபியாகி) சிவனாயிருக்கிறான். [கரும] பாசத் தினால்கட்டுப்பட்டிருக்கிற வரையில் ஜீவனா யிருக்கிறான். பாசத்திலிருந்து விடு பட்டால் அப்போது சிவனாயிருக்கிறான். ☞ (சிவனே ஜீவனென்பது எப் படிக் கூடுமெனின் கயிறே பாம்பாவது போலவும், பிம்ப சூரியனே பிரதி பிம்ப சூரியனாவது போலவும்; மனமே சொப்பன வுலகமும், அவ்வுலகத்தி லுள்ள ஜீவர்களு மாவது போலவுமாம்.

### சுக்கில யசுர் வேதத்தில் பைங்களோபநிஷத் ௪ வது அத்தியாயம்.

*"நானே பிரமம்" என்றறியாதவனுக்கு முத்தி யுண்டாகிறதில்லை.*

### யசுர்வேதத்தில்வராகோபநிஷத்

### *௨-வது அத்தியாயம்.*

*என்னுடைய பூரணன்மாவைத் தவிர ஜகத் ஜீவன் ஈசுவரன் மாயை முதலியவைக ளில்லை. அவர்களுக்கு நான் விலட்சணன். (இவ்விடத்தில் ஆன்மா வென்பது பிரமத்தை. அதிலிருந்தே ஜகத் ஜீவன் ஈசுரர்கள். உற்பத்தி.)*

*சத்தியமான பரப்பிரமம் நான், என்னைத் தவிர வேறே யாதொன்று மில்லை.*

*மஹாகாசத்தில் கடாகாசம் மடாகாசம் போலச் சிதாகாசமாயிருக்கிற என்னிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப் பட்டிருக்கிறார்கள். (ஜீவேசுவரர்களாகிய) ஆன்மாவின் சிருஷ்டிக்கு முந்தி எதானது இல்லையோ, அப்படியே முடிவிலும் எதானது தள்ளப்பட்டதோ, அதானது மாயை யென்று விவேகத்தினாலே ப்ரம்ம ஞானிகளால் சொல்லப்படுகிறது. மாயையும் அதன் காரியமும் நசித்துப்போனால் ஈசுவரத்துவமு மில்லை, ஜீவத்துவமுமில்லை. ஆகையினாலே நிருபாதிகமான ஆகாசம்போல நான் சுத்தனாகவும் சித்தாகவு மிருக்கிறேன்.*

*(இவ்விடத்தில் ஆன்மா என்பது பிரமம். நான் என்பது ஜீவத்துவங் கழன்ற துரியாதீதமான பிரமநிலை.)*

### ஷை ௩-வது அத்தியாயம்.

*அந்தப் ப்ரம்மம் நானே (நீயே) என்று எப்போதும் மௌனத்தை ஆசிரயி.*

### ஷை ௪-வது அத்தியாயம்.

*சிவனேகுரு, சிவனே தேவன், சிவனே வேதம், சிவனே பிரபு, சிவனே நான், சிவனே சகலமும், சிவனைக்காட்டிலும் வேறொன்றுமில்லை.*

### வாயுசங்கிதை ஞானநிலைமையுரைத்த அத்தியாயம்.

*அறையமகேச்சுரன் சத்திமாயையாமார்மலத்தா*
*னிறையமுனமேமறைந்துநின்றுறையுமான்மாவை*
*முறையிலந்தமாயைதான்மூடுமலமாயைகெட*
*வுறைவதுவேசிவமென்னவுரைப்பராலெனவுரைத்தான்.* (௪0)

*பாவகத்தாலழியாதசிவஞானருள்பயக்குமான்*
*மேவியஅவ்வருளினால்மலமாயும்வீந்ததற்பின்*
*ஓவலில்அப்புருடனேசிவனென்னவுறைவனெனத்*
*தாவில்தவத்தோர்பின்னுமிவையெடுத்துச்சசாற்றினரால்.* (௧௮)

### சூதசங்கிதை ஞானயாகவைபவ முரைத்த அத்தியாயம்.

*மல்லலான்மா பலவாய்த்தோன்றுவதுஞ் சீவான்மா பரான்மா வெனும் பேதந்தோன்றுமதுவுஞ், சொல்லுறின் உபாதியாலன்றி மாமுனிவீர் சுபாவத்தினின்று அஃதெப்படி யென்னிற்கேண்மின், வல்லகடமுதலாய வுபாதி சம்பந்தத்தால் வான்பேதமாய்த் தோன்றும் அதுபோலும் உணர்வீர், செல்லலில் வேதாந்த வாக்கியங்களெலாம் பரமசிவனொருவனே யென்னத்தெரிவிக்குநாளும்.* (௨௪)

முன்னுரைத்தசேதன அசேதன வாகாரங்கண் முதன்மையாகப்
பின்னுரைத்தவிருப்பதிலையெனுமளவும்பிறங்கநிரூபணஞ்செய்துகாலை
மன்னுமொளிப்பரசிவனோடபேதமேயாஞ்சுருக்கிவகுத்தாம்யாவும்
பன்னுசிவமேயன்றிவேறில்லைநன்குணர்வீர்பண்புளீரே. (௯)

## ஷை சூதகீதை விசேடசிருட்டியுரைத்த அத்தியாயம்.

தத்துவஞானத்தாற்பரசிவமேசகமாயைசிவன்முன்னா
கொத்துறுசொரூபமாகவேதெரியுங்குறித்திடின் வேறொன்றுமிலைச்ச
சத்துவேறாகப்பார்ப்பவன் பந்தக்கடுந்தளைநீங்குறானென்றும்
பொத்துமாமலத்தினீங்கியின்னருளைப்புணர்ந்தின்பமார்தருமுனிவீர்.

## ஷை ஷை ஆன்மானான்மவிவேக முரைத்த அத்தியாயம்.

ஆதலால்பரமார்த்தமாப்பிரத்தியக்கான்மாபரமேயம்ம
போதகுருவுபதேசமாதிகளாலனான்மாவாப்பொலிந்து தோன்றுங்
காதலுறுமெவற்றையுமான்மாவாசத்தெரிந்துகொண்டான்மாவையுங்கற்
றோதலருந்தவத்தீர்சுத்தப்பிரமமென்றுள்ளேநிச்சயித்து. (௨௧)

அக்குருகடாட்சமுஞ்சிவப்பிரசாதத்தாலேயமையமேவு
சுக்கசத்துச்சீவன்முதலானதெல்லாஞ் சிவமென்னும்ஞானந்தானே
தக்கசிவப்பிரசாதமாகுமந்தஞானமுள்ளதலைமையோனே
மிக்கசிவஞானியாவானென்றுநான்மறையும்விள்ளுமாலோ. (௨௯)

## பிரமகீதை ஐதரேய உபநிடதார்த்தமுரைத்த அத்தியாயம்.

சின்மாத்திரமாயுள்ள வெறுஞ்சிவனேதிகழ்வானியாதுக்கும்
முன்மாத்திரமும்வேறில்லைமுற்றுமவனேமொழிவுற்ற
நன்மாத்திரமாயான்மாவென்றுரைக்கும் நாமத்தினையுடையான்
தன்மாத்திரமேயாகிய அத்தன்மையானசங்கரன்றான். (௨)

## ஷை தைத்திரிய உபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

செய்வான்செய்விப்பவன்செய்யும் பொருள்செய்கருவிசெய்தொழிலென்
றைவாய்ப்பொருளும்வெறுமான்மாவாகித்தோன்றுமிறையருளா
லெய்யாமானமறிபொருளுமறிவோனென்னப்படும்பேத
மெய்யாமிறைவன்றிருவருளாலெல்லாந்தானாய்விளங்குமால். (௯௮)

அறையுமறையாலாகமத்தாலறியானிகன்மற்றுந்தா
னறிவதொருபாடையினாலேயறைவானென்றுமமைவுறவே
யிறையையடைதற்கேதுவிதுவிதனாற்பரமயோகெய்தும்
பிறிவொன்றறவேசிவன்றன்னையோகத்தாலேபெறலாமால் (௪௯)

## ஷை கேனோபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

தொல்லைநல்வினையாற்சுருதிநன்மிருதிசொன்னவாதுணிந்தவத்தூயோ
ரொல்லையிற்பரமாத்துவிதவேதனத்தையுள்ளவாறுணரவேயுணர்வர்
நல்லவிப்பரமாத்துவிதஞானியைநாராயணனுருத்திரனு
மெல்லையிலெல்லாத்தேவரும்பூசித்தேத்தவும்படுமிவனென்றும். (௫௮)

ஈசனும்ஞானியிருந்துளவிடத்தேயிருப்பதுமுத்திதானந்தத்
தேசிகனேவல்செய்பவன்காலென்சென்னியிலிருப்பதுமன்னி
மாசிலாப்பரமஞானியாமுனிக்குமகேசனுமொப்பலன்மதிக்கி
லாசிலாவரியுமொப்பலனுமொப்பலனேவரொப்பாரே. (௫௯)

இவ்விரண்டு செய்யுட்களும் அத்துவித ஞானியினது பெருமை கூறு கின்றன.

## ஷை சாந்தோக்கிய உபநிடதத்தி னாறமத்தியாயத்தி னர்த்த முரைக்கும் அத்தியாயம்.

காண்பவனொன்றேயாகுங்காண்பவையென்றயாவுங்
காண்பவன்றன்னில்வேறென்றின்மையிற்றனையேகாணும்
பூண்பதொன்றின்றிநின்றபூரணமதுநீயென்ற
மாண்டவார்த்தைக்குமுள்ளபொருளிதுமற்றொன்றில்லை. (௫௨.)

நீயென்கின்றவார்த்தைக்கும்பொருளாயென்றுநிற்பதுவே
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நின்றுநாடுவது
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நாடிநிற்பதுவே
நீயென்கின்றவாசகத்தினிற்கும்பொருளுநிலைபெறவே. (௫௯)

நானேமுழுதுமெனையொழியநாடிற்சிறிதும்வேறில்லை
யானபொருளையருமறைதானறையும்படியானதனாலும்
யானுமிசைத்தபடியாலுமிதுவேதிடமாயுளபொருடா
னானமின்றிநான்முகனுமுரைத்ததுங்கட்குண்மையிதே. (௪௨௪)

தன்னிலேயாக்கப்பட்ட கனவினிலுலகமெல்லாந்
தன்னுணர்நனவதாகத்தனிலவையடங்குமாபோற்
றன்னிலேதோன்றுமெல்லாப்பொருள்களுந்தானேயாகுந்
தன்னிலேதன்னிற்றானேயாமதேதனிலவேறின்றே. (௧௯௯)

## ஷை முண்டகோபநிடதார்த்த முரைக்கும் அத்தியாயம்.

இந்தவுடம்புறைசீவபரங்களெனப்படுமென்னமிரண்
டந்தவிரண்டிலுமொன்றுவினைப்பயனங்குநுகர்ந்திடுமோங்
கொர்தமறும்பரமொன்றுமுணுதசொலப்படுபேதமில்வான்
வந்தகடத்திலகப்படுபேதமெனப்படுமாமையினால். (௨௫)

தற்பரனுருவஞ்சித்தேதற்பரனிடையேயக்
கற்பிதசீவன்றானுமதானக்காலந்தச்
சிற்பொருளொன்றேவேறெனின்மற்றதுசித்தாமோ
வற்பமும்வேறுகாதுசித்தாகாரத்தாலே. (௨௬)

பாவபுண்ணியங்களிரண்டையுமுதறிப்பற்றுதலொன்றுமின்றி
யாவையுந்தானய்வேறிலாதவனைப்பெய்துமற்றிப்பொருளறிந்தான்
சீவனும்பரனுஞ்சின்மயமாகுமாதலாலொப்பெனச்செப்பட்ன்
மேவியொன்றாகிவிடுதலேயன்றிவேறுவேறாகுமோவீடு. (௯௧)

உடம்புடன்புணர்ப்பார்சீவனுக்கிறையோடொப்புளதென்னிலொப்பில்லை
கடந்திகழ்வானின்வானம்வேறுகக்கருதியொப்புரைப்பரோவொப்பா
விடுந்திறங்கன்மத்தாலெனிற்கன்மமிறக்குமேவிச்சையாலென்னிற்
றிடம்படமுன்பேயுள்ளதேஞானந்திகழ்த்துவதல்லதுநிகழ்த்தா. (௯௨)

எப்படியாலும்பண்டுமிப்போதுமெப்பொழுதுஞ்சிவசீவர்க்
கொப்புளதாகுமுருவமொன்றெனவுண்மையால்வேறுதொன்றே
அப்படியுள்ளசிவன்பிறர்போலவவிச்சையாதிசமுமவ்வவிச்சை
மெய்ப்பாவிச்சையானசித்தொன்றாய்விடுதலொப்படைதல்வேறன்றே. (௯௯)

சிவன்றன்னுருவானசிவத்தைத்தெளியிற்றான்
மேவும்பலதொழிறன்னிடையாகவிளையாடும்
யாவுந்தன்னுருவாகிநிகழ்ந்தாலிவன்முத்த
னவன்பண்டவனாகாமையின்முத்தனுமாகான். (௧௪)

### ஷை கைவல்லிய உபநிடதார்த்த முரைக்கும் அத்தியாயம்.

நீயெனும்பொருளேயதென்றநிகழ்த்திடும்பொருளாவதூஉந்
தூயசிற்பரமேபதங்களிரண்டினுந் துணிவாதலான்
மாயையென்றும்அவித்தையென்றுமுபாதிபேதவழக்கினா
லாயகற்பிதபேதமல்லதபேதமேபொருளாவதே. (௨௧)

### ஷை பிரகதாரணிய உபநிடதத்தில் மைத்திரேய பிராமணார்த்த முரைக்கும் அத்தியாயம்.

வேதநூல்மிருதிபுராணமத்துவிதமெய்ம்மையேவிளம்பமெய்த்தருக்கசு
சாதியாநிற்கத்தத்துவஞானத்தவருமிப்பொருளையேசார
வாதியாஞ்சிவனாராயணனென்கிறைந்ததும் அபேதமாயிருக்க
வாதியாமொருவர்க்கிதையனுதரித்தன்மாயையினுடையவல்லபமே (௧௪)

### ஷை கடவல்லி சுவேதாசுவதர உபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

ஏபேருலகில்வினைப்பயனுகர்ந்தங்கிதயமேமருவுவாரிருவர்
சாயையாதபமாகின்றனர்சீவசங்கரரென்றிடத்தகுவா
ரோயுமாறறவேயுண்பவன்சீவனூட்டுவான்சிவனிவர்தமக்கிங்
காபேதந்தானுபாதியால்வந்ததல்லதபேதமேயாகும். (௫.)

### கூர்மபுராணம் இந்திரத்துய்ம்மன் முத்திபெற்ற அத்தியாயம்.

ஆங்கவன்றானுந்துயிலுணவருந்தலரும்பெறற்குமரர்மேலாசை
சோங்கெழில்கவற்றிச்சுணங்குபூத்தலர்ந்தருவிமுலைமகளிரின்புறுக
லீங்கிவைமுதலயாவையுநீத்திட்டியானெனதென்பவைநீக்கி
யோங்குசீவான்மாவினைப்பரமான்மாத்தன்னொடும்பிறிதறவெ[illegible]

### ஷை சாங்கிய யோக முரைத்த அத்[illegible]

நித்தியமாகியொன்றாய் வியாபியாய்நிறைந்துநின்[illegible]
சுத்தமாய்ப்பரமமாகிச் சுயம்பிரகாசமாகித்
தத்துவங்கடந்துநின்ற புருடனங்காரந்தன்னோ[illegible]
டொத்துத்தான்வேறென்றெண்ணன் கருத்தன்[illegible]ன்னவோதும்.

நித்தியமாகுமான்மா ஏகமாய்நிகழ்த்துமாய[illegible]
சத்தியாயளப்பில்பேத மாமுறும்பேதஞ்சாற்றி[illegible]
வைத்தநீர்க்குடங்கடோறுந் தோன்றிடுமதியம்போல
வுய்த்திடுமுபாதிதன்னாற்பற்பலவுருவுந்தோன்றும். (௪௭)

ஆதலாற்பிரமமொன்றேநித்தியம்அலகைத்தேரிற்
பேதுறத்தோன்றும்நீரிற் பிரபஞ்சமருண்டுதோன்றுந்
தீதுறுமனத்தர்கிய பிரபஞ்சம்பிரமம்வேறென்
றோதுவர்ஒக்கநோக்கும் யோகியர்ஒன்றாய்க்காண்பர். (௨௫)

25 MAR 1989

## திருவாசகம்.

சிவமேபெறுந்திருவெய்திற்றிலேன்.
நாமொழிந்துசிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினும்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கும்.
பேதமில்லதோர்கற்பளித்தபெருந்துறைப்பெருவெள்ளமே.
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட.
பேதங்கெடுத்தருள்செய்பெருமை.
உயிருண்கின்றஎம்மானே.
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
அத்தன்அருளியவாறார்பெறுவாரச்சோவே.

## திருமந்திரம் மகாவாக்கியம்.

நீயதுவானாயெனநின்றபேருரை
யாயதுநானானேனென்னச்சமைந்தாச்
சேயசிவமாக்குஞ்சீர்நந்திபேரருள்
ஆயதுவாயனந்தானந்தியாகுமே. (க)

உயிர்பரமாகவுயர்பரசிவன்
அரியசிவமாகஅச்சிவவேதத்
திரியிலுஞ்சீராம்பராபரனென்ன
வுரியவுரையற்றவோமயமாமே. (உ)

## ஷை தத்துவமசிவாக்கியம்.

ஆகியஅச்சோயந்தேவதத்தன்னிடத்
தாகியவிட்டுவிடாதஇலக்கணைத்
தாருபசாந்தமேதொந்தத்தசியென்ப
வாகியசிவன்பரன்சிவனுமே. (ங)

தொம்பதந்தற்பதஞ்சொல்லும்அசிபதம்
நம்பியமுத்துரியத்துமேனாடவே
யும்பதமும்பதமாகுமுயிர்பரன்
செம்பொருளானசிவமெனலாமே. (ச)

## ஷை முத்திப்பதம் கருமநிவாரணம்.

ஓதியமுத்தியடைவேயுயிர்பர
பேதமிலச்சிவமெய்துந்துரியமோ
டாதிசொரூபச்சொரூபத்ததாகவே
பேதமிலாநிருவாணம்பிறந்ததே. (க)

## ஷை போதன்.

சீவனெனச்சிவனென்னவேறில்லை
சீவனார்சிவனாரையறிகிலர்
சீவனார்சிவனாரையறிந்தபின்
சீவனார்சிவனாயிட்டிருப்பரே. (க)

ஷை அநுக்கிரகம்.

அவன்றானகலிடமேழுமொன்றாகி
இவன்றானெனநின்றெளியினுமல்லன்
சிவன்றான்பலபலசீவனுமாகி
நவின்றானுலகுறுநம்பனுமாமே.

ஷை பலவிடங்களில்,

சாயுச்சியம்சிவமாதல்.
திரிமலந்தீர்ந்துசிவனவனாமே.
சிவனேசிவஞானியாதலால்.
குருவேசிவமெனக்கூறினனந்தி.
சிவோகமேசேர்தலால்.
தானவனாகி.
மாசற்றவென்னைச்சிவமாக்கி.
தானேதனக்குத்தலைவனுமாமே.
தாமேசிவமானதன்மைதலைப்பட.
சேருஞ்சிவமானாரைம்மலந்தீர்த்தவர்.

பின்னர் "நமதன்பரும் அவர்குருவாகிய சிவகுருமைந்தரும் சிவ பெருமானை (தம்பாற் கற்பிதமாய ஜக ஜீவ பரங்களி லொன்றென) நிஷேதித்துத் தாமே மெய்ப்பொருளென்று கொண்டு வாழ்கின்றவர்கள்" என்று கூறினார். இதில இவருடைய விபரீதத்தையும் சுருதி யுக்தி அநுபவங்களுடைய வுண்மையையும் காட்டுவோம். தம்மிடத்தில் ஜக ஜீவ பரம் கற்பிதமென்று அத்துவிதிகள் சொல்லுவதாய்ச் சொன்னாரேயன்றி, அவனிடத்திற் கற்பிதமென்றும் உன்னிடத்திற் கற்பித மென்றும் சொல்வதை யெடுத்துச் சொன்னா ரில்லை. வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சி யில்லாதவர்களை மருட்ட ஒன்றை மாத்திரஞ் சொல்லி ஏய்க்கப் பார்க்கின்றார். ஜக ஜீவ பரங்கள், தன்மையில் தம்பால் கற்பித மென்பது முண்மையே; முன்னிலையில் உன்பால் கற்பித மென்பது முண்மையே; படர்க்கையில் அவன்பால் கற்பித மென்பதுமுண்மையே. தன்மைக்குத்தன்மையாகவும் முன்னிலைக்கு முன்னிலை யாகவும் படர்க்கைக்குப் படர்க்கை யாகவுங் கூறி, இம்மூன்றையுங்கூடக் கற்பனைப்படுத்தி, இம்மூன்றுக்குமதீதமான பரம் பொருளின்கண் ஜக ஜீவ பரங்கள் கற்பித மென்பது முண்மையாம். தம்பால் ஜக ஜீவ பரங்கள் கற்பிதமென்று சொன்னால் தானென்ற சொல்லுக்கு மனிதனென்று பொருள்கொண்டு, மனிதனிடத்திலே பரம், அதாவது ஈசுவரன் கற்பிதமென்று அத்துவித மதம் சொல்லுகிறதாகும்; அத்துவித மத மிவ்வளவு ஆபாச முள்ளதாவென ஜனங்கள் அம் மதத்தை வெறுக்கட்டு மென்கிற எண்ணத்தோ டெழுதினாரென்றாவது கொள்ள வேண்டும்; அல்லது விசாரணை யின்மையினால் தெரியா தெழுதினா ரென்றாவது கொள்ள வேண்டும். தம்பால் ஜகஜீவபரமூன்றுங் கற்பனையென்பதில், தான் என்ற சொல்லுக்குப்

பொருளெனுவாகக்கொண்டார்? ஜீவனென்று கொள்வதற்கு நியாயமில்லை; ஜீவனைக் கற்பிதமென்று வரைந்தமையானென்க. பரத்தையுங் கற்பிதமென்றுவரைந்து விட்டமையால் ஈசுவரனும் தானென்ற சொல்லுக்குப் பொருளல்ல. ஈசுவரனும் ஜீவனுமல்லவென்றதனால் பிரம்மம் அல்லது அதன் பரியாய நாமமான சிவன் அல்லது ஆன்மாவே பொருளாம். இவ்விடத்தில் ஆன்மாவென்றது பிரம்மம் அல்லது சிவனும். சிவனுக்கு ஆன்மாவென்னுஞ் சொல் உண்டென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

**பிரமகீதையில் ஐதரேய உபநிடதார்த்த முரைக்கும் அத்தியாயம்.**

*சின்மாத்திரமாயுள்ளவெறுஞ்சிவனேதிகழ்வான்யாதுக்கு*
*முன்மாத்திரமும்வேறில்லை முற்றுமவனேமொழிவுற்ற*
*நன்மாத்திரமாஆன்மாவென் றுரைக்குநாமத்தினையுடையான்*
*றன்மாத்திரமேயாகியஅத்தன்மையானசங்கரன்றான்.* (உ)

நான் என்ற சொல்லுக்குப் பொருள் ஜீவனாயிருக்கச் சிவனென்றெங்ஙனங் கூறற்பாலதென்னின், ஜீவன் வாயிலாகச் சிவனென்று பொருள் கொள்ள வேண்டும். ஜீவனென்பது பிரதிபிம்பப்பொருள்; சிவன் பிம்பப் பொருள், பிரதி பிம்பப் பொருளுக்குப் பிம்பப் பொருள்தான் உண்மைப் பொருள். இரண்டுமே தனித்தனி யுண்மைப் பொருளென்று கொண்டாலென்னை யென்னின், அப்போது சிவனும் கண்டப் பொருள்; ஜீவனுங் கண்டப் பொருளாகும். இவர் மதப்படி சிவனும் அகண்டப் பொருள்; ஜீவான்மாவும் அகண்டப் பொருள். ஒரு அகண்டப் பொருளினிடத்து மற்றொரு அகண்டப் பொருளிருத்தல் அமையாதெனின் ஒரு அகண்ட பரிபூரண சிவனிடத்துப்பலகோடி அகண்ட பரிபூரண ஜீவான்மப்பொருள் பந்தத்திலாவது முத்தியிலாவது இருத்தல் எங்ஙனமாகும்? இரண்டு சத்துப்பொருள் ஒரு இடத்தில் இருத்தல் கூடாது. அங்ஙனமாகச் சத்தான ஒரு சிவனிடத்துப் பலகோடி ஆன்மசத்துப் பொருள்களிருத்தல் எப்படிக் கூடும்? சத்துப் போலிப் பொருளாயின் எத்தனை கோடியானாலும் குற்றமில்லை. ஆதலால் வேத முதலிய சகல கலைகளும் சிவனைச் சத்துப் பொருளாகவும் ஜக ஜீவ பரங்களைச் சத்துப் போலிப் பொருளாகவுங் கூறுகின்றன. இதற்குச் சுருதி முதலிய பிரமாணங்களை முன்னரே நன்கு விளக்கிக் காட்டினும். சகல ஜீவர்களும் ஒரு சிவனிடத்தி லிருந்தாலும் சிவனும் சத்து, ஜீவர்களும் சத்தென்றுகூறப் பொருந்தாமையானும் ஆராய்ச்சியில் சிவனே சத்துப் பொருளாக முடிதலானும் முத்தியில் ஜீவர்களெல்லாம் சிவனிடத்து லயப்பட்டுச் சிவனாய் விளங்குதலானும் அஞ்ஞானதசையில் நானென்னுஞ் சொல்லுக்குப் பொருள் ஜீவனேயாயினும் ஞானதசையில் சிவனே பொருளாகுமென்க. சிவனே பொருளாதலால் அதன்கண் மற்றச் சக ஜீவ பரங்கள் கற்பிதமென்பதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை.

"அன்றியுமிவர் சங்கராசாரியார் சிவனடியாராதலிழுக்கும். விவ காரத்தி லவ ரடியவ ராதல் சாலுமெனின், அவ்விவகாரம் அவர்க்கு மிச்சை யாகலின், அவ ரடியவ ராதலு மிச்சையா யொழியும். இம் மிச்சை யடியார், அல்லது பொய்யடியாரைச் சிவரகசியம் எடுத்துப் புகழ்வது பொய்யே யாம்" என் றொன்று கூறினார். முன் சொன்ன காரணத்தினால் சங்கராசாரியர் சிவனடியாராதலிழுக்காகாது; சிறக்கு மென் றறிந்திடுக. விவகாரத்தில் அவரடியவராம் என்று கூறி, விவ காரம் பொய்யாதலால் அவரடியவராதலும்பொய்யென்கிறாரன்றோ? இது சுத்த பைத்தியம். பொய்யை உபயோகிக்கும் இட மிது வென் றும், மெய்யை உபயோகிக்கு மிட மிதுவென்றும், இது பொய், இது மெய் யென்று ஆராய்வதற்கு முன்னர், ஆராய் கின்றவர் எப்படிப் பட்டவர், ஆராயப் பட்டவர் எப்படிப்பட்டவர், ஆராயப் பட்ட பொருள் எப்படிப்பட்டது என்று அறியாது, "எல்லசட்டிலக்க ஏக லக்க" வென்பவர்க் கிணை யாகின்றனர். இதைச் சற்று உவமான வாயிலாக விளக்கி அதன்பேரி லுவமேயத்தைக் கூறுவாம். சொப்பனத் தில் "சாத்தன் என்பவன், கயிற்றின்கண் அரவைக் கண்டு பின் தெளிந்து பாம்பு பொய்யென்றறிந்தான்" என்று வைத்துக் கொள் வோம். சொப்பனவஸ்தையில் அரவுபொய்; சாத்தன்மெய். அரவை மெய்யென்று கூறினால் எவரு மொப்பார். இனி யுண்மையில் அரவு தோற்றுதற்கிடமான கயிறு பொய்யா? மெய்யா? என்ற விடத்து, சொப்பனத்திற் றோன்றிய கயிறாதலால் பொய் யென்றே சொல்ல வேண்டும். சொப்பனத்தில் சாத்தன், கயிற்றி னிடத்து, அரவை யுண்மையென அறியுங்கால் அறிகிற சாத்தன் ஒன்று, அதிஷ்டான மான கயிறு ஒன்று, ஆரோபமான அரவு ஒன்று ஆக முப்பொருள்க ளிருக்கின்றன. அரவு பொய் யென்பது சொப்பனத்திலேயே தீர்மா னம். கயிற்றையும் அவ்வாறு பொய் யென்று சொல்ல முடியாது. கயிறு பொய்யெனில் அதை யறிகிற சாத்தனும் பொய்யாதல்வேண் டும். பொய்யானாலும் கயிறு சாத்தன் பொய்க்கும் அரவு பொய்க்கும் வித்தியாச மிருக்கிறது. சொப்பனவஸ்தையில் அரவைப் பொய்யெ ன்றால் சரி யென்று ஒத்துக்கொள்வார்களே யல்லாமல் கயிற்றையும் சாத்தனையும் பொய் யென்றால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். உண் மையில் சொப்பனமும் சொப்பன சாத்தனும் சொப்பன கயிறும் பொய்யேயன்றி மெய்யல்ல. சொப்பனவஸ்தையைப் பொய்யென்று கொள்ளாது மெய்யென்று கொள்ளும்போது: சாத்தன், கயிறு மெய்; அரவு பொய். சொப்பனம் பொய் யென்பது சாக்கிராவஸ்தையை நோக்க. சாக்கிரத்தைநோக்கா விடத்து மெய்யாகவேதான் தோன்றும். சொப்பன கயிற்றின்கண் தோன்றும் அரவு பொய்யான போது சொப்பனமலடிமகனும் சொப்பன ஆகாயதாமரையும் பொய்யென்று சொல்லக் கேட்பானேன்? இனிச்சாக்கிரத்தில் மலடிமகனும் ஆகாய தாமரையும் சுத்த பொய்; கயிற்றின்கண் அரவோ மருண்ட போது

பொய் ; கயிறும் அதைக் கண்ட சாத்தனும் மெய் யாகின்றார்கள். இப்படியே கயிறு ஸ்தானத்தில் உலகும், சாத்தன் ஸ்தானத்தில் ஜீவனுமாம். சொப்பன வஸ்தையில் கயிறும் சாத்தனும் உண்மை யானாலும் சாக்கிராவஸ்தையை நோக்க எப்படிப் பொய் யாமோ, அப்படியே சாக்கிராவஸ்தையில் சாக்கிர வுலகும் ஜீவனு முண்மை யானாலும் துரிய சிவாவஸ்தையில் பொய்யாம். துரிய சிவனை நோக்கா விடத்து ஜக ஜீவ பரங்க ளான முப் பொருள்களு முண்மை தான். ஷ முப்பொருள்களும் சிருஷ்டிகாலத்தில் துரிய சிவனிடத்திலிருந்து தோன்றி, லயகாலம் வரையிலிருந்து, லயகாலத்தில் தோன்றிய முறையே லயமாகின்றன. இம்மூன்றுங் காரியப்பொருள்கள். துரிய சிவன் காரணப் பொருள். காரணப் பொருள் முக் காலத்தி லுள்ள பொருளாகலின் சத்தே. காரியப்பொருள் ஓர்காலப்பொருளாகலின் சத்துப்போலியாம். காரியப்பொருள் முற்றும் சத்துமன்று, முற்று மசத்துமன்று சத்தானால் துரிசிவனைப்போல் முக்காலத்து மிருத்தல் வேண்டும்; அசத்தானால் வான்மலர் வந்தியா புத்திரனைப்போ லில்லாதிருத்தல்வேண்டும்; சதசத்தெனின் ஒன்றுக்கொன்று எதிரான இலக்கணமுள்ள பொரு ளிருத்தல் அரிது. அதுபற்றி ஜகஜீவபரங்களைச் சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்று சொல்வது தகுதியாம். இந்த ஜக ஜீவ பரங்களை வான்மலர் வந்தியா புத்திரனைப்போல் சொல்வது குற்றமாதலால் அசத் தென்று சொல்லப்படாது. ஆனது பற்றியே வியாவ காரிக சத் தென்று கூறப் படுகின்றது. சங்கராசாரியரைத் துரியசிவனென்றுகொள்ளாமல் உருத்திரமூர்த்தியினவதாரமென்று கொள்ளுகின்றமையால் மேற்சொல்லியபடி ஜக ஜீவ பரங்களுக்குச் சொல்லும் இலக்கணத்தைச் சங்கராசாரியர்க்குங் கூறுவது தகுதியாம். ஜகஜீவபரங்கள் துரியசிவனை நோக்க வியாவகாரிக சத்தியமாதலால் சங்கராசாரியரையும் வியாவ காரிக சத்திய மென்றே சொல்வதில் யாதொரு பாதகமு மில்லை. துரிய சிவனைப்போல் ஜக ஜீவ பரங்களையும் பாரமார்த்திக சத்தாய்க்கொண்டால் அப்போது சங்கராசாரியரையும் பாரமார்த்திக சத்தாய்க்கொள்ளலாம். அப்படிக் கொள்வதால் நேரிடும் கணக் கற்ற ஆக்ஷேபங்கள் இது வரையில் செய்திருப்பதாலும்; சுருதி, யுக்தி, அநுபவங்கட்கு மாறாயிருப்பதாலும் அவ்வாறு சொல்லப்படா தென்பதாம். "இம் மிச்சை யடியார் அல்லது பொய்யடியாரைச் சிவரகசியம் எடுத்துப் புகழ்வது பொய்யேயாம்" என்று கூறியதி லுள்ள குற்றங்களையும் சொல்லுகின்றோம். சிவரகசியம் துரியசிவனொன்றே முக்காலத்துமுள்ள சத்துப்பொருளென்றும் மற்றப் பொரு ளெல்லாம் சத்துப் போலிப் பொரு ளென்றும் கூறி, சத்துப்போலிப் பொருளை யெல்லாம் சத்துப் பொருளென்று சொல்லும் துவிதமதங்களைத் தூரீகரணஞ் செய்யவே கறை மிடற்றண்ணல் அவதரிப்பதாகச் சிவரகசியங் கூறுவதாலும், அதில் அனேக அத்துவித கீதைகள் சொல்லுவதாலும், அது பொருளைப் பொரு

ளாகச் சொல்லும் நூலே யன்றிப் பொருளல்லவற்றைப் பொருளாகச்சொல்லும் நூலல்லவாதலாலும், சங்கராசாரியரைப் புகழ்ந்தேயிருக்கின்றமையாலும், அதோடு அவரது அத்துவித சித்தாந்தத்தையே உண்மையென்று சொல்வதாலும் இவருடைய சொல்லே பயனற்றுப் பொய்யாயினமை காண்க. சங்கராசாரியரை உருத்திராவதாரமென்று யாம் கூறுகின்றோம். இவர், அவரைப் பொய்யடியாரென்கிறார். யாரைநோக்கிச் சொல்லுகிறார். சொல்லுகின்ற இவர் யார்? இவ்விருபாலரும் சீவவர்க்கத்திற் சேர்ந்தவர்கள். சீவர்களெங்கிருக்கிறார்கள்? துரியசிவ ஆதாரத்திலிருப்பதாய்ச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார். துரிய சிவன் முக்காலத்துள்ள சத்துப் பொருள்; அன்றி எங்கும் நீக்கமின்றி யிருக்கும் பரிபூரணப் பொருள். இந்தப் பரிபூரண துரியசிவப் பொருளில் சீவாத்துமாக்கள் சத்துப் பொருளாயிருக்கின்றனரா? அசத்துப்பொருளாயிருக்கின்றனரா? சிவனும் பரிபூரணப் பொருள்; இவர் மதப்படி சீவாத்துமாக்களும் தனித்தனி பரிபூரணப்பொருள்கள். ஒரு சத்துப் பொருளினிடத்து மற்றொரு சத்துப் பொருளே யிருத்தல் அமையாதென்றால் பலகோடி சத்துப்பொருள்களிருக்கின்றனவென்பதெங்ஙனம் பொருந்தும்? பொருந்தாவிடில் அசத்தென்று சொல்லலாமெனின், அசத்தென்பது இல்லையென்று பொருள்படுதலால் மலடிமகன் வான்மலர்போல் இல்லாமற் போதல்வேண்டும். சீவர்களிருந்து சத்த பரிசரூப ரச கந்தங்களை அநுபவிக்கக் காண்கிறோம். சதசத்தெனின் மேற்படி இருவித தோஷங்களும் வந்து பொருந்தும். அன்றி விரோதமான இரு இலக்கணம் ஒருபொருளுக்குக் கூறுதல் கூடாது. பின்னைப் போம் வழி யாதெனின் சதசத் விலக்ஷண அநிர் வசனீயமென்றே கொள்ளற்பாலதாம். இதனால் சீவர்களைச் சத்தெனச் சொல்லப்படாதென்றேற்படுகின்றது. சங்கராசாரியரைப் பொய் யடியாரென்கிற இவர், தம திலக்கணத்தையும் இவருடைய சொல்லைக் கேட்பவருடைய இலக்கணத்தையும் கவனித்தாரா? ஆராய்ச்சிசெய்தாரா? கவனித்து ஆராய்ச்சி செய்திருந்தால் சங்கராசாரியரைப் பொய்யடியாரென்று சொல்லத் துணிய மாட்டார். சாக்கிராவஸ்தையைநோக்கச் சொப்பனவஸ்தை சத்து மல்ல; அசத்து மல்ல; சதசத்துமல்ல; அநிர்வசனீயமேயாம். இப்படியே துரியசிவனை நோக்கச்சக சீவ ஈசுவரர்கள் சத்து மல்ல; அசத்து மல்ல; சதசத்து மல்ல; அநிர்வசனீயமேயாம். இந்த லக்ஷணந் தெரியாது அத்வைதிகள் ஜகசீவபரங்களைப் பொய் யென்று கொள்வதாகப் பிரமித்துத் தடுமாறிப்பேசுகின்றார். துரியசிவனை நோக்க ஜக சீவ ஈசுவரர்கள் கற்பனையென்றும் பொய்யென்றும் சொல்வதற்குப் பொருள் அநிர்வசனீயமாம். தம்பால் ஜக சீவ பரங்கள் கற்பிதமென்று சொல்வதற்குப் பொருள் துரிய சிவனிடத்தில் ஜக சீவ பரங்கள் அநிர்வசனீயம் என்பதாம்.

சங்கராசாரியரைப் பொய்யென்று கொண்டவர், ஜீவர்களையும்
அவ்வாறல்லவோ கொள்ள வேண்டும்? கேட்பவரும் சொல்லுகிறவரு
மான ஜீவர்களையும் துரிய சிவனைப்போல் சத்தாக வைத்து, சங்கரா
சாரியரை மாத்திரம் அசத்தாகக் கொள்ளுவ தென்னே! ஒரு சாதி
யிலக்கணம் பெற்ற இருவரில் ஒருவரை ஒரு இலக்கண முள்ளவ
ராகவும், மற்றவரை அதற்கு மறுதலையான இலக்கண முள்ளவராகவும்
கூறுதல் நன்றன்றே. இது எப்படியிருக்கின்ற தென்னில் சாத்
தான், கொற்றன், முத்தன் ஆகிய மூன்று மனிதரில், சாத்தன், கொற்
றனை நோக்கி: "முத்தன் மனிதன்" என்று சொல்வதுபோ லிருக்கி
ன்றது. சாத்தனும் மனிதன்தான்; கொற்றனும் மனிதன்தான்;
முத்தனும் மனிதன்தான். இம்மூவரில் ஒருவன் மற்றொருவனை
நோக்கி: இன்னொருவனைக் காட்டி: 'இவன் மனிதன்' என்றால்
கேட்பவனும் சொல்லுகிறவனும் மனித னல்லவோ! இம் மூவரில்
சாத்தனுடைய புத்திக் கூர்மைக்கும் இப்பிரதிவாதியின் புத்திக் கூர்
மைக்கும் வித்தியாச மிருப்பதாய் எமக்குத் தோன்ற வில்லை. முத
லாவது ஈசுவராம்சமான சங்கராசாரியரைப் பொய்(அசத்து)என்று
சொல்லுவதே தவறு; அதோடு கேட்போரையும் சொல்வோரை
யும் துரியசிவனைப்போல் மெய் (சத்து) என்று கொண்டது பெருந்
தவறு.

இன்னும் மிவர் பேசும் விஷயத்தைக் கவனிப்போம். "உருவமற்ற
(ஏக மாகிய) பிரமத்துக்கோ இரண்டாவது பொரு ளில்லை. அது
பொய்யாகிய மாயையிற் பிரதி பலித்தலும் அந்தப் பிரதிபலனம் மெய்
யாயிடுதலும் யாங்ஙனம்?" என்று ஒரு கேள்வி கேட்கிறார். பிரமம்
ஏகமாயிருப்பதோடு பரிபூரணமா யிருப்பதால் இரண்டாவது பொரு
ளில்லை யென்பது வாஸ்தவமே. அது பொய்யாகிய மாயையிற் பிரதி
பலித்த லெப்படியென்று கேட்கிறாரன்றோ? மாயையை வான் மலர்
போல் பொய் யென்று கருதுகின்றார். அது கூடாது. அநிர் வசனீய
மென்றறிந்தால் இந்த ஆக்ஷேபஞ் செய்ய மாட்டார். மேலும் பிரதி
பலித்த லென்பது அத்துவிதிகளுடைய சித்தாந்தமன்று. பூர்வபட்ச
மாய்ச் சொல்லப்படுகின்றது. அத்துவிதிகள் பிரதிபிம்ப திருஷ்டாந்
தம் சொல்வது பிம்பத்தைப்போல் பிரதிபிம்பம் சத்தல்ல வென்பது
வரையில் மாத்திரமேயாம்; முற்றுமன்று. இந்த விஷயத்தைப்பற்றி
*"ஓர் நண்பர்?" என்பவர் 1888வரு அக்டோபர்மீ 31உ ப்ரம்மவித்
தியாவில் இவருக்கே நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். காட்டி ஐம்
பது மாசங்களுக்கு மேலாயும் பினனும் "சொன்னதையே சொல்
லும் கிளிப்பிள்ளை" என்பதற் கினமாய்ப் பேசுகின்றார். மெய்யென்று
சொன்னவ ரிருந்தாலன்றோ மெய்யாயிடுதல் யாங்ஙனமென்கிற கேள்வி
கேட்கலாம்! அப்படிச் சொன்னவரு மில்லை; இவர் கேள்வி கேட்க
வேண்டிய ஆவசியகமு மில்லை. வேத முதலிய கலைகளில் பரிணாம

---

* தத்துவவாதத்தினிறுதியிலிருக்கிறது.

வாதம், பிம்பப்பிரதி பிம்பவாதம், காரணகாரி வாதம், விவர்த்தவாதம், அம்சாமிக வாதமுதலிய பல திருட்டாந்தங்கள் கூறுவதுண்டு. அவற்றி லெந்தத் திருட்டாந்தம் எதற்காக எதுவரையில் சொல்லப்படுகிற தென்றுணரவேண்டும். அது தெரியாமல் அத்துவிதிகள் பூர்வபக்ஷமாய்ச் சொல்லிப் பின் தாங்களே கண்டிக்கும் பூர்வபக்ஷ திருட்டாந்தங்களைச் சித்தாந்த மென்று நம்பி ஆக்ஷேபிப்பது ஆழமறியாமல் காலை வைப்பதற் கிணைமாமெனக. "இவ்வசம்பாவித நிலையிற் கேட்கப் படும் பொய்ச் சிவனாது அவதாரமாகிய சங்கராசாரியரையும் எப்படியோ ஒரு சத் பதார்த்தமாகக் கொள்வது" என்று பேசுகின்றார். சத்து இன்னது, அசத்து இன்ன தென்று தெரியாத வரையில் இவரெழுதுவதெல்லாம் மணற்சோற்றிற் கல் லாராய்வதுபோலத்தான். பொருளைப் பொருளாகவும் பொருளல்லவற்றைப் பொருளல்லனவாகவும் கொள்ளும் நுட்பவிவேகம் இவர்க்குவாராத வரையில் இவருடன் பேசுவது நீரின்றிச் சந்தன மரைப்பதொக்கும்! சிவனும் பொய்யாதலில்லை, சங்கராசாரியாரும் பொய்யாதலில்லை யென்பதை முன்னரே எழுதினோம். "இவ்வவித்தையும் பொய்ப்பொருள். அதனால் இவ்வவித்தையிற் பிரதிபலனமாய்த் தோன்றிய ஜீவனும்பொய்ப்பொருளாகத் தட்டில்லை. இந்தச் சிவனுக்கதிஷ்டான மிவரது சித்தாந்தத்திற் கூடஸ்தனைச் சொல்லப்படுகிறது" என்கிறார். பொய்க்கும் மெய்க்கும் விலக்ஷணமான அவித்தை, ஜீவர்களைப் பொய்ப்பொருளென்று சொல்வது சரி யன்று. "பிரமம் மாயையிலும், கூடஸ்தன் அவித்தையிலும் தோய்ந்த ஞானம் இவரது சித்தாந்த ஞானமாம்" என்று பேசுகின்றார். இது உண்மைதான். வேதமுதலிய பதினுன்கு வித்தைகளுடைய சித்தாந்தமு மிதுதான்.

"இவரது சங்கராசாரியர் சிவகுருமைந்தராக ஆரியாம்பாளது கர்ப்பயோனி ஸ்பரிச முற்றுப் பிறந்தா ராகையால் இவரைச் சிவரென்று கூறுவதிலும் இவர் பிறந்த பின்னர் உலகில் பல துன்பங்களிலழுந்தி மொத்துண்டு வருந்தினார்" என்றுங் கூறினார். இந்தத் தோஷம் சிவனடியாராய் வருவதினு முண்டாமென்றும் உண்மையில் அவதாரத்திற்குத் துன்ப மில்லை யென்றும் காட்டினோம். ஜீவர்களாய்ப் பிறந்து வைராக்கிய வுபரதிகள் பெற்ற ஆரூட ஞானிகளுக்கே ஜனன் மரணத்துன்பமில்லை யென்னின்இயற்கையாகவே ஞானவடிவாய்விளங்கும் உருத்திரமூர்த்திக்கும் அவ ரவதாரத்திற்கும் இல்லை யென்று நாம் கூறவும் வேண்டுமோ? இவர், தமிழி லச்சிட்டிருக்கும் "சங்கர விஜயம்" என்னும் புத்தகம் இரண்டா மத்தியாயத்தைச் சற்று வாசிப்பாரானால் இவர்க் கிது விஷயமாய்த் தோன்றிய ஆக்ஷேபங்களொழிந்துபோம். "துரிய மூர்த்திக்குப் பிறப்பில்லையென்று அனேக ப்ரமாணங்கள் காட்டி, இத்தியாதிபிரபல பிரமாணங்களுக்கு விரோதமாக இத்துரிய மூர்த்தியினது அவதாரமா யுள்ளவர் சங்கரா சாரியரென்று கூற இவரான் முடியாது" என்றதிலு முள்ள ஆபாசத்தைத

யுஞ் சிறிது சொல்வாம். முடியுமென்றிவர்க்குக் கூறியதியார்? தாமே இல்லாததைச் சொல்லிக் கொண்டு, அதைச் சாதிக்க இவரால் முடியாதென்று பேசுவதென்ன? துரிய சிவனுக் கவதாரஞ் சொல்ல அத்துவிதிகளாலு மாகாது ; அவர்கள் சொல்லவு மில்லை; சொல்லவு மாட்டார்கள். இந்தப் பூர்வ பக்ஷியாரோ, துரிய சிவன் சிவ னடியாராய் மானிட வுருவந் தாங்கி வந்தார் ; அல்லது வருவார் என்கிறார். இது அவராலாவது இன்னு மெவரா லாவது சாதிக்க ஆகாது. சாதிக்கவரின் அதைமறுக்க அத்துவிதிகளாலாகும். துரியமூர்த்திக்குப் பிறப்பில்லையென்று பிரபலப் பிரமாணங்கள் காட்டினதாகச் சொல்லுகிறாரன்றோ? அந்தப் பிரமாணங்களை யெல்லாம் பிரமாணமாகவே அத்துவிதிகள் கொண்டமையால் அவர்கள் துரிய சிவனுக்குப் பிறப்பாவது அடியராய் வருத லென்பதாவது சொல்லுகின்றார்க ளில்லை. இவரே அதற்கு மாறுகப்பேசிப் பிரமாணங்களை அவமதிக்கின்றவர். "எந்த வகையானும் சங்கராசாரியர் சிவாவதாரமாயின தில்லையென யாம் பிரசங்கித்துத் தீர்த்தோம்" என்பதற்குப் பதி லாவது: சிவாவதாரமென்பதில் சிவன் என்னுஞ் சொல்லுக்குத் துரிய சிவனென்று கொள்வாராயின் அது தவறென் றவரோடுகூட யாமும் பிரசங்கித்து அவ்வாறு சொல்பவரை அவருக்குத் துணையாய் நின்று நாமும் தூரீகரணஞ் செய்கின்றோம்; அதோடு, இவர், துரிய சிவன், சிவனடியாராய் வந்தார், அல்லது வருவா ரென்று சொல்வதையும் பலமாய்த் தூரீகரணஞ்செய்கின்றோம். சிவனென்னுஞ் சொல்லுக்குக்குஉருத்திரனென்று பொருள் கொள்ளுவாரானுல் அதை யெந்த வகையானும் சுருதியுக்தி அனுபவங்களால் முன் நிராகரணஞ் செய்ததுபோதாமல் இன்னும் பலமாய் நிராகரணஞ் செய்து பிரசங்கிக்கின்றோம். மேல் "யாம் சங்கராசாரியர் ஜீவனென்று தாபித்ததையும் நமதன்பர் அவர் சிவாவ தாரமென்று கூறியதையும் பார்த்து மாயாவாதிகள் கலங்கா வண்ணம் அன்னோர் கொள்ளு மாசங்கையைப் போக்கி, எப்படியாவது சங்கராசாரியரைச் சிவரூபமாக்கிக் காத்துக்கொள்வாராக" என வொரு முடிவு கட்டினூர். சங்கராசாரியர் சீவ னென்று தாபித்த தாபனை ஆழத்தில் நிற்காமையால் வெகு இலேசாய் எடுத்தெறிந்து விட்டோம்; அன்றி உருத்திராவதாரமென்று கூறித் தாணுகங்க நியாயமும் செய்துவிட்டோம். மாயோபாதானவாதரான மாயாவாதிகள் கலங்கி மற்றொருமுறை இங்ஙனம் வாய் பேசாவண்ணம் வேண்டிய நியாய மழைகளையுஞ் சொரிந்தோம். பல வகையிலும் சங்கராசாரியர் உருத்திராவதாரமென்று சொல்லிக் காத்துக் கொள்ளவும் செய்தோம். இனித் துரியசிவனே சிவனடியாராய் வந்தார், அல்லது வருவாரென்பதைக் காத்துக்கொள்ள வேண்டுவது பூர்வபக்ஷியாரது கடனேயாமென்க.

நிற்க ; இனி யொரு விந்தை வரைகின்றார். அதைக் கண்டால் இவர் இவ் வளவு நியாயஸ்தராவென நினைப்பார்கள். படித்த வொரு

வன், எவ்வளவு நீதியில்லாதவனானாலும் நாலுபேரிருக்கும்சபையில் வாய்திறந்து பேசப் புறப்படின் நீதி வழுவாமற் பேசுவான். அந்த மாதிரி நீதியும் இந்தப் பூர்வ பக்ஷியாரிட மிருப்பதாய்ப் புலப்பட வில்லை. இவர், "சங்கராசாரியரது மகிமை தெரியவேண்டினோர், மாத்வர்செய்துள்ள வாயுஸ்தவத்தைப் பார்க்கக்கடவர்" என்று கூறியது தான் விந்தையென்பது! அத்வைதிகளுக்கு நேர்விரோதிகள் துவைதிகள். அது அந்தச் சொல்லினாலேயே விளங்கும். யாராயினும் சரி, தங்கள் தங்களினத்துக்குரிய நூல்களைத் தங்கள் தங்கள் இனத்தார் செய்வது முறையேயாமன்றி, அன்னியர் அதிலும் விரோதிகள், அதிலும் நேர்விரோதிகள் செய்வது முறையன்றாம். சங்கராசாரியர் சரித்திரத்தை அவர்மாணாக்கரும், அவர் இனத்தாரும், அவர் மதஸ்தரும செய்வது முறையாகுமே யன்றி அத்துவித மதத்திற் குற்றங் கூறும விரோத மதஸ்தரான துவைதிகள் செய்வது முறை யன்று; நியாயமுமன்று. திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரம் சைவர்களால் எழுதப்பட்டதைச் சைவர்கள் கொள்வார்களே யன்றி வைணவர்களா லெழுதப்பட்டதைக் கொள்வார்களா? சீகாழித் தலத்தில் சம்பந்த சுவாமிகள் திரு மங்கை யாழ்வா ரிடத்தில் வாதஞ் செய்து தோல்வி யடைந்ததாக வைணவர்கள் எழுதி வைத்திருக்கின்றார்களே; அதை மெய்யென்று சைவர்கள் கொள்வார்களா? திருவள்ளுவ நாயனார் இயற்றிய திருக் குறளுக்குச் சமண சித்தாந்தி யொருவர், நாயனாரைச் சமணரென்று கொண்டு, அத்திருக்குறளுக்குச் சமண மத பக்ஷமாக வுரை யியற்றினாரே; அதை ஆரியர்கள் உண்மை யென்று கொள்வார்களா? கொள்ளார்க ளென்னின், மாத்துவர், தங்களுடைய மாத்துவ மதத்தைப்பற்றி யெழுதிக்கொண்ட நூலில் சங்கராசாரியரைப்பற்றி விரோதமாக எழுதிக்கொண்டால் அதை எங்ஙனங் கொள்வது? துவித மதஸ்தரான மாத்துவர், சங்கராசாரியருடைய சரித்திரத்தை மதத்துவேஷத்தால் மாறுபடுத்திக் கற்பனையாக எழுதித் தங்களுக்குள்ளாக வைத்துக்கொண் டிருக்கிறார்க ளென்று நாம் கேள்விப் படுகிறோம். அது இந்தப் பூர்வ பக்ஷி யாருக்குப் பாலும் பழமும் சாப்பிட்டதுபோ லிருக்கிற தாக்கும்! சங்கராசாரியருடைய மாணாக்கரும் அவர் வழி நின்றோரும் அவர் மதஸ்தரும் எழுதிய (நாம் * 20.-வது சஞ்சிகையிற் காட்டியவாறு) பல சரித்திரங்களும் மகிமை யாகாமற் போனமைக்கும் விரோதிகள் துவேஷ புத்தியால் எழுதி வைத்துக்கொண் டிருக்கும் ஒரு பொய்ச் சரித்திரம மகிமை யாய் விளங்குவதற்கும் காரணம் இந்தப் பூர்வபக்ஷியா ரிடத்தில் குடி கொண் டிருக்கும் அத்துவித சித்தாந்தத்தின் பேரி லுள்ள துவேஷமேயன்றி வேறு யாதுகூறுவோம்! சங்கராசாரியாருடைய மதஸ்தர் பலர் செய்த [அச்சிட்டிருக்கும்] பலவித சரித்திரங்களில்

* இப்புத்தகம் முதற்பக்கத்திற் காண்க. 20 வது சஞ்சிகை யென்பது ப்ரம்மவித்தியாவின் இருபதாவது பத்திரிகை.

விளங்காத மகிமை, விரோதி யானவொருவர் இரகசியமாய் எழுதிய நூலில் விளங்குமென் றெழுதுவது நியாயந்தானா ? நல்ல எழுத்து நடுவிலிருக்கக் கோணவெழுத்துக் குறுக்கே போகின்றதே. வேதாகம புராணேதிகாச முதலிய கலைகட்கும் யுக்தி அனுபவங்கட்கு மொத்த அத்துவித மார்க்கத்தி லிவ்வளவு துவேஷமும் பொறாமையும் வந்த தற்குக் காரணம் நூல்களிற் கூறப்படுகிறது. அதுவருமாறு:—

பிரமகீதை ஐதரேய உபநிடதார்த்தமுரைக்கும் அத்தியாயம்.

தத்தமாலான பெத்தவாதியர் தாந்தங்களிற் றுங்கடர்க்கங்கள்
கத்திடாநிற்கும்பரிசெலாஞ் சுருதிமிருதிகள்கருதியதழிக்கும்
சுத்தமாவிருத்தமாகுமென்றே யென்றுணிவுதொல்பிறவியிற்சுழல்வார்
சித்தமானதுபோயிவற்றிலே காதல்செய்யுமுன் செய்ததீவினையால். (௬)

காதலாற்றத்தங்கடவுளரருளால் காலபாகத்தினால்அறத்தால்
போதராதலினால்வேதவாதத்தைப் பொருத்துவர்புகன்றஅவ்வடைவே
வேதவாதத்தைமேவுநல்வினையால் விருப்பினாலன்றிமேவினருஞ்
சாதலானதும்பிறத்தலுமில்லாத் தற்பதந்தன்னையேசார்வார். (௭)

வான்கருதியமறைவழியைவிட்டுமேற்
றான்கருதுதல்சதுரன்றுதன்கையில்
தேன்கமழ்திரளையைச்சிந்திச்சந்தியாக்
கூன்கையில்விழுந்துளிகொண்டதன்மையே. (௮)

பொருள்கொண்டமறைநின்றுபுகல்கின்றதுணரா
மருள்கொண்டசமயங்கண்மதிகொண்டுகெதியா
யருள்கொண்டபரவின்பமடைகின்றதுவர்போல்
இருள்கொண்டுபொருள்கண்டஅவரன்றியிவரார். (௯)

ஷை கேனோபநிடதார்த்த முரைக்கும் அத்தியாயம்.

பரமாத்துவிதஞானியே பரதேவதைதானவனேயித்
திரமாமுத்தியானிங்குச்செப்பும் பொருள்செய்வினையாலும்
உரமாந்ததீசிகௌதமனு லுண்டாஞ்சாபவுரையாலுங்
கரமாமனுடர்நெஞ்சதனிற் காதல்செய்யாதொருகாலும். (௫௬)

நிற்க ; ஷை மாத்வர் எழுதிய வாயுஸ்தவத்தில் சங்கராசாரியரு டைய சரித்திர மாத்திர மகிமையா ? மற்றப்படி அதிலுள்ள எல்லா விஷயங்களு மகிமையா? எல்லா விஷயங்களு மகிமை யென்னின் அந்நூல் விஷ்ணுவே பரத்துவமென்றும் சிவன் பரத்துவ மல்லவெ ன்றும் வாயுவைப்பார்க்கிலும் கருடனைப்பாக்கிலும் சிவன் குறைந்த வனென்றும் சிவாகமங்கள் மோகசாஸ்திரமென்றும் கூறுகின்றதே; அது இவர்க்குப் பிரமாணந்தானா? பிரமாணமென்னின் சிவன் பர மென்றும் விஷ்ணு பசுவென்றும் சிவாகமங்கள் மோக்ஷ நூலென் றுங் கூறுமிவருடைய சித்தாந்தத்துக்கு மோசம்வருமே. வந்தாலும் வரட்டும் ; சங்கராசாரியருக்கு மாத்திரம் மகிமை குறைந்தாற் போது மென்பரோ ! அங்ஙனமாயின், தன் மூக்குப் போனாலும் போகட்டும், அண்டை வீட்டுக் காரனுக்கு அப சகுனம் வந்

தாற் போது மென்று தன் மூக்கை யறுத்துக்கொண்டு உதிரப் பிரவாகத்தோடு அபசகுனமாய் அண்டைவீட்டுக் காரனுக்கு எதிர் வருவோனுக் கிவர் சற்றுந் தோற்றவரல்லராம். அங்ஙன மன்று; சங்கராசாரியர் சரித்திரமாத்திரம் மகிமையென்பாராயின், எனப்படி? இவரது சித்தாந்த சைவத்துக்கு விரோதமானவைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு, சங்கராசாரியர் விஷயமாக எழுதியவற்றைத் தள்ளினுலென்ன? எதிரிகளுக்குப் பிரதிகூலமாகவும் இவர்க்கனுகூலமாகவுமுள்ள விஷயத்தை யிவர் பிரமாணமாக எடுத்தால், தமக் கனுகூலமாகவும் இவர்க்குப் பிரதிகூலமாகவு முள்ள விஷயத்தை யெதிரிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். பிரமாணமாக எடுத்தால் முற்றுமெடுக்கவேண்டும்; தள்ளினுல் முற்றுந் தள்ளவேண்டும். அதைவிட்டு ஆத்திரத்தாலும் அவசரத்தாலும் துவேஷத்தாலும் பின்வரும் யோசனையின்றி அதைப் பிரமாணமாக எடுத்துக்காட்டினர். உடனே தமக்கு வரும் நஷ்டத்தை யெண்ணினரில்லை. மாத்துவர் எழுதிய சங்கராசாரியர் சரித்திரத்தைப் பிரமாணமாகக் கொண்டு, அதில் மகிமை விளங்குமென்று சொன்னதில் கொஞ்சம் இராசதந்திர மிருக்கின்றது. அந்தத் தந்திரத்தை யனுசரித்துத்தான் அதைப் பிரமாணமாகக் கொண்டார். இவர்க்கு வைணவமதத்தவரிலொருபகுதியாரான மாத்துவரும் விரோதிகள் தான்; அத்வைத மதஸ்தரும் விரோதிகள்தான். இருவரும் விரோதிக ளாயினும் தற்காலம் அத்வைதிகளை விரோதிக்குஞ் சமயமாதலால் மாத்துவரோடு சேர்ந்துகொண்டு, "தமக்கு விரோதமான பல விஷயங்க ளிருந்தாலும் இருக்கட்டும். இந்தச் சமயத்தில் அத்வைதிகளைத் தூஷிப்பதற் கேற்றதா யிருக்கின்றதே" யென்று கருதி, மாத்துவருடையவாயுஸ்தவத்தை மற்றப் பிரமாணங்களைவிட வுத்கிருஷ்ப் பிரமாணமாகக் காட்டவந்தார். திருவள்ளுவநாயனரும் ராஜதந்திரத்தைச்சொல்லும்போது அடியில்வருங்குறளைச் சொல்லியிருக்கிறார்.

"தன்துணையின்றால் பகையிரண்டால்தானொருவன்
இன்துணையாக்கொள்கவற்றினொன்று."

பரிமேலழகருரை.

தனக்குதவுந் துணையோவெனின் இல்லை; நலிவுசெய்யும் பகையோவெனின் இரண்டு; அங்ஙனமாய் நின்றவழி, ஒருவனாகிய தான் அப்பகை யிரண்டனுள் பொருந்திய தொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்து கொள்க என்பதாம்.

நாயனர் கூறியபடி தற்காலத்துக்குப் பொருந்தியதொன்றைத் துணையாகக் கொண்டார். இவரை யின்னொரு கேள்வி கேட்கின்றோம். இவர்க்கு ஷை வாயுஸ்தவமென்னும் நவீன கிரந்தகர்த்தரான நாராயண பண்டிதாசாரியா ரெழுதிய ஷை வாயுஸ்தவமாத்திரம் பிரமாணமா? அவ ரின்னும் ஏதேனும் எழுதி யிருந்தால் அவைகளும்

பிரமாணமா? இது தவிர மற்ற மாத்துவாசாரியர்கள் எழுதிய நூல்களெல்லாமும் பிரமாணமா? அவைகளெல்லாம் பிரமாண மென்னில் அவற்றில் அத்துவிதிகளுக்கு எவ்வளவுபாகம் விரோதமாமோ, அவ்வளவு பாக மிவர் மதத்துக்கும் விரோதமாமே.

சில மாசங்களின் முன் மகம்மதியருடைய மதத்தின் முதற் புத்தகமான கொரான் என்பதை வட தேசத்து மேலோர் பாதிரியார் மொழிபெயர்த் தச்சிட்டதை மகம்மதியர் ஒத்துக் கொள்ளாமல் அதை யொருவரும் வாங்கப்படாதெனக் கூக்குரலிட்ட சங்கதி பத்திரிகைகளை வாசிப்பவ ரறிந்திருப்பர். தாயுமானவர் பாடலுக்கு வேறு மதஸ்தர் உரைசெய்தாரென்றும் அது தவறென்றும் வேறு மதஸ்தர் உரைசெய்வது கூடாதென்றும் விகடதூதன் பத்திரிகையில் சில நாளைக்குமுன்பு அரக்கோணவாசி யெழுதியதும் அறிந்தவர் அறிந்திருப்பர். சைவசிகாமணியான சேக்கிழார் செய்தமையாலன்றோ திருத்தொண்டர்புராணம் மணம்பெற்றுச் சைவர் கைகளில் கௌரவமாய் நின்றுலாவுகின்றது? சைவ மத விரோதியான வைணவரா லியற்றப்படின் அவ்வாறு மணம் பெற்றுலாவுமா? அதிலும் திருத்தொண்டர் புராணத்துக்குச் சுத்த மாறாய் அதிலுந் தொண்டர்களை யிகழ்ந்து செய்யப்படின் அது சைவர்களால் அநுசரிக்கப்படுமா? திரு ஞானசம்பந்த சுவாமிகள், திருமங்கை யாழ்வாரிடத்தில் வாதஞ் செய்து தோல்வி யடைந்ததாக, வைணவர்கள், தங்கள் குரு பரம்பரையில் எழுதி வைத்திருக்கிறார்களே. அதைப் பிரமாணமாகச் சைவர் அங்கீகரிக்கின்றனரா? அதை யிவர் அனுசரித்துப் பிரமாணமாகக் கொள்வாரா? கொள்ளாரெனின் மாத்துவர் நூலைமாத்திரம் பிரமாணமாகக் காட்டியது நன்றாமோ? தமக்கானாலொன்றும் பிறர்க்கானாலொன்றுமா? ஐயோபாவம்! இப்படிப்பட்ட குமார்க்கத்தி லிந்தச் சூளைவாசி யேன்போகவேண்டும்? திருத்தொண்டர் புராணத்தைப் பார்த்தால் சம்பந்தசுவாமிகளுடைய மகிமை விளங்குமென்பதற்குப் பதிலாக, வைணவருடைய நூலைப்பார்த்தால் விளங்குமென்று கூறினால் இவர்க்கு எவ்வளவு வருத்த முண்டாகும்? இவருடைய வருத்தத்தில் நூற்றி லொரு பங்காவது "வாயுஸ்தவத்தில் சங்கராசாரியருடைய மகிமை விளங்கும்" என்றுரைப்பதால் பிறர்க்குண்டாகாதா? இவர்க்குமாத்திரந்தானா அபிமானம்? பிறர்க்கு அபிமான மிராதா? துன்பமென்பது எல்லாவுயிர்களுக்கும் பொதுவன்றோ? இவர்க்குமாத்திரம் துன்பம் எட்டிக்காயும் வேப்பங்காயும், பிறர்க்கெல்லாம் முக்கனியும் பாலுங் கற்கண்டுமா? இனியேனும்

"அறிவினானாகுவதுண்டோபிறிதினோய்
தந்நோய்போல்போற்றாக்கடை"

என்னும் திருக்குறளினுட்பொருளை யுய்த்துணர்ந்து, இவ்விதமான பாரபக்ஷ வார்த்தைகளைப் பேசாதிருப்பாராகவென வற்புறுத்திக் கூறுகின்றோம்.

"இராமகிருஷ்ணாதிகள் விஷ்ணுவினது அவதாரமென்பது சர்வ ஸம்பிரதிபந்ந மாயின வாறு சங்கராசாரியார் சிவாவதார மென்று பிரசித்திபெற்றால் மாத்திரமே நமதன்பரது மதம் மணம்பெறலாம்" என்று கூறியதற்கு விடை வருமாறு:—உருத்திர மூர்த்திக்கு அவதார முண்டென்று பிரபல பிரமாணங்களா யுள்ள சூதசங்கிதை, வாயுசங்கிதை, மார்க்கண்டேய புராணங்களைக் காட்டினோ மாகலின் நமது வாதம் மணம் பெற்றமை காண்க. இதன் பேரில் "விரிக்கிற் பெருகும்" என்கிறார். எதை விரித்தாலும் பெருகுந்தான். விரித்தா லெதுவிரியும்? உண்மை விரியுமா? இன்மை விரியுமா? வென்று பார்க்கவேண்டும். விரிப்பது பெரிய காரியமல்ல. உண்மையை விரிப்பதே பெரிய காரியம். இன்மையை விரித்தா லிகழ்ச்சியேயாம். இவருடைய விரி யெல்லாம் உண்மை யல்லாமற் போகின்றதால் அதாவது இன்மையாய்ப்போவதால் அதுபிரயோசனமில்லாமற் போகின்றது. இனியும் இன்மையை விரிப்பாராயின் நாம்உண்மையைவிரித்து இன்மையை இன்மை யாக்கி விடுகின்றோம். 'விரிக்கிற் பெருகும்' என்பதற்கு நாம் கொடுக்கும் பதிலிதுவே யாம். கடைசிப் பத்தியில் 'சங்கராசாரியர் தான் அச்சிவ பத்தரென்று ஸ்தாபிப்பது நம தன்பருக்குத் தலைச் சுமையான பெரும் பாரமா யிருப்ப தறிந்து அடங்கி வாழ்வாராக" எனப் பேசினார். இன்மையை யுண்மையாக ஸ்தாபிப்பதற்குத் தலைச் சுமையே யன்றி உண்மையை உண்மை யாக ஸ்தாபிப்பதற்குத் தலைச் சுமை யில்லை; வெகு இலேசுதான். நீதி ஸ்தலங்களில் பொய்ச் சாக்ஷி கூறுவோர்க்குத்தான் தலைச் சுமை. அவர்கள் மனம் என்றும் திடுக்குத் திடுக்கென் றடித்துக் கொண்டிருக்கும்; மெய்ச் சாக்ஷி சொல்வோர்க்கு அப்படி யில்லை. அவர்கள் மன மெப்போதுங் குதூகல மாகவே யிருக்கும். அவ் வண்ணமே நாம் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசாகமங்கட்குக் கட்டுப்பட்டு வரம்புமீறாமல் அடங்கிப் பேசுகின்றோ மாகலின் நமக்கு எக்காலத்தும் பய மில்லை. நாம் பதில் சொல்வதும் வெகு இலேசுதான்.

"கலியில் சிவன் நாலு சிஷ்யர்களோடு சங்கராசாரியராகப் பிறக்கப் போகிறாரென்று ஒரு வசன மிருப்ப தாக மாயா வாதிகள் கூறுவ துண்டு. அதனை யினி நமதன்பர் தேடிக்கொண்டு வரலாம்" என்கிறார். அவ்வாறு மாயாவாதிகள் சொல்வதில்லை. அத்துவிதிகளே சொல்லுகிறார்கள். அவ்வாறு சிவ ரகஸ்யமே சொல்லுகிறதென்று* இருபதாவது பத்திரிகையில் வரைந்தாம். அல்லவென்றுசொல்பவர்களே மாயாவாதிகள். அவரி லிந்தச்சூளைவாசியும்ஒருமாயாவாதிதான். முடிவில்"அவர் தேடிக்கொண்டுவரும் எவ்விதப் பிரமாணங்களையும் யாம் விசாரித்துக் கொள்ளச் சித்தமா யெதிர் பார்த் திருக்கிறோம்" என்று கூறி நிறுத்திவிட்டார். இவருடைய விசாரிப்புப் பய னற்ற

* இப்புத்தகம் 3-வது பக்கத்திற் காண்க.

விசாரிப்பாயிருப்பதால் அவைகள் துகள் துகளாகவும் மூலைக்கொன்றாகவும் பறந்துபோகச் செய்ய விருப்பபோடு சித்தத்திலும் வெகுவிதமாய் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

சங்கராசாரியரது மகிமை தெரிய வேண்டினோர் அத்துவிதத்திற்கு விரோதமான துவைத மத சித்தாந்தி மத்துவ ரியற்றிய வாயுஸ்துதியைப் பார்க்கக்கடவர் என்று கட்டளையிடும் இவர்: சிவனது மகிமை தெரிய வேண்டின் அம்மாத்துவர் செய்த நூலிலும் சிவ மத விரோதிகளான முடிச்சூர் அப்பாவுமுதலியார் ஏகாங்கியார் முதலியவர் இயற்றிய நூல்களிலும் கண்டுகொள்ள ஒருவர், இவர்க்குக் கட்டளையிடின், அப்படியே பார்த்து மகிழ்வாரா? மகிழாரன்றோ? இங்ஙனமே மற்றவர்க்கு மிருக்குமென்றிவருக் கேன் தோன்றப்படாது? இந்தச் சோமசுந்தரநாயகர்க்கு அத்துவிதமதத்தில் எவ்வளவு துவேஷமும் அருவருப்பும் உண்டாய் அம்மதத்தைத் தூஷித்துத் தூராக்ஷேபங்கள் செய்தாரோ, அவ்வளவுக்கும அம்மதத்தின் நுட்பமான அர்த்தங்களெல்லாம் வெளிப்பட்டு அது சிறப்புற்றோங்குகின்றது. இந்த நாயகர் தூராக்ஷேபஞ் செய்யாவிடின் இவ்வளவு நியாயங்கள் வெளிப்பட. இத்தனை பேர் எழும்பி இவ்வளவு பேசமாட்டார்கள். தருமர் முதலிய பாண்டவர், எல்லாராலு மிவ்வளவு நன்கு மதிக்கப்படுவது அவர்களுக்கு அநியாயஞ் செய்த துரியோதனாதிகளாலேதான். சோம. நாயகர் தூஷிக்கிறார், தூராக்ஷேபஞ் செய்கிறாரென்றவரை அநேகர் குற்றங்கூறுகின்றார்கள்; அது சரியன்று. உண்மையில் அவரே அத்துவித மதத்தின் பெருமையை விளக்கினவரென்று சொல்லவேண்டும். அவர் முன்பு அத்துவிதியாயிருந்து ஸ்ரீ சங்கராசாரியரைப் புகழ்ந்து துதித்திருக்கிறார். அவர்க்கு ஏதோ இடையில் சில துர்க் கருமங்கள் வந்து அதன் வலியில் அகப்பட்டுக் கொண்டு அம்மதத்தையும் அம்மதப்பிரவர்த்தகரையும் தூஷிக்கும சுபாவத்தினிறங்கினார். இனி யாவது கொஞ்சம் நல்வினை வந்து கூடுமானால் அவ்வாறு தூஷிப்பது குற்றமென்றுபட்டு, அக்குற்றத்தினின்று மீளுவார். இல்லையேல் அவருடைய ஜன்மம் பயனில்லாத பாவஜன்மமென்றே சொல்லவேண்டும். அவ்வித நற்காலம் அவர்க்கு என்று வந்துகூடி உண்மையை யுணர்ந்து உய்யும் வகையை அடைவாரோ அறியோம். அவ்வாறு வருமாவென்று எதிர்பார்க்கின்றோம்.

முற்றிற்று.

60879